# சாரல்


இனிமையானது...

Jan - Mar 2012
சாரல் 03 : 01



## பெற்றோரின் கவனத்திற்கு

- ஹலோ மோகன்



## வாய் புற்றுநோய்



## ஏன் இந்தக் கொலவெறி




## செய்தி திருவளங்கள்

DFM
For Quality
ALWAYS FRESH



# DATTA FOOD MANUFACTURY INC.

## சைவ உணவுகளின் சாம்ராஜ்யம்...

அனைத்து வகை உணவுகளையும் உங்கள் ருசிக்கேற்ப
தாயக தரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**100% Vegetarian**



பனங்காய் பணியாரம்
**10 for $1**
சமோசா, வாய்ப்பன், முறுக்கு
வடை, சூசியம், ரோல்ஸ்
**5 for $1**

585 Middlefield Road, Scarborough, ON
85 Kennedy Rd S, U 31, Brampton, ON, L6W 3G1
**Phone: 416-297-8402**

50 Anderson Ave , Unit 4 Markham, ON L6E 1A9 **Phone: 905 294 4444**

## Dr. Nalini Sutharsan & Associates
Family and Cosmetic Dentistry



**SPECIAL OFFER**
FREE TEETH WHITENING / MOUTH GUARD*
FREE ORA CANCER SCREENING
FREE CONSULTATION & ADVICE
* Limited time offer

# Markham NS Dental

*So much begins with smile*

- Prompt emergency treatment
- Evening & weekend hours available
- Enhance your Smile
- Eco Friendly
- Payment plan Option
- Family Appointments are Available
- Wheel Chair access
- New patients are welcome
- We bill your insurance company directly
- Convenient location with plenty of parking
- State of the Art-Modern Technology
- Play Area for Kids
- Free Implant Consultation
- Female dentist available



- **Treats all age groups, including children**
- **All aspects of dentistry practiced**
- **Education & Prevention**

## 905 472 4111

கண்கள் உங்களுக்கு உலக அழகை காட்டுவது போல்
பற்கள் உங்கள் அழகை உலகிற்கு காட்டுகிறது.

**We speak English, Tamil, Tagalog**

**OPEN 7 DAYS A WEEK**

**Mon - Sat 10:00 am - 8:00 pm**
**Sun 10:00 am - 4:00 pm**

9293 Hwy 48, Suite 4, Markham
drnalini@markhamNSdental.com | www.markhamNSdental.com

Care, Comfort, Convenience, Confidence...



# தூறலின் இதழ்

## இலவசமாக உங்கள் இல்லம் வந்து சேரவேண்டுமா?










## வாசகர்களே!

கீழே உள்ள கூப்பனை நிரப்பி, எமது விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.
உங்களின் இலவச பிரதி உங்கள் இல்லம் வந்து சேரும்.

**வாசகர் அட்டை**

First Name : ______________________

Last Name : ______________________

Address : ______________________

Phone (Optional) : ______________________

E-mail : ______________________

**THOORAL - 3252 Lawrence Ave East, Suite 6 Scarborough, ON M1H 1A4**


* Conditions may apply



நம்பிக்கை, நாணயம், தரம், உத்தரவாதம்...
இன்றே
அதிஷ்ட நகை சேமிப்புத் திட்டத்தில்
இணைந்துக் கொள்ளுங்கள் !
கண்கவர் தங்க நகைகளை
காலங் காலமாய் அணிந்திட !
AGI
ASIA
GOLD Inc.
தாலிக் கொடிகள் தரமான தூய 22 கரட் தங்கத்தில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
சிங்கப்பூர், டுபாய் - புதிய டிசைன் நகைகளை அசல் 22 காரட் தங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
உலகின் எப்பாகங்களுக்கும் துரித பண மாற்றுச் சேவை.
Specialist in Singapore 22 & 24Kt Gold Jewelleries.
Experts in custom Jewelry, Repairs, High Quality Diamonds, Natural Gem Stones & Wedding Bands.
தங்கத்தின் விலையைப் பார்த்து தரத்தை தவறவிடாதீர்கள்!
WE BUY OLD GOLD
தொடர்புகளுக்கு:
S. இந்திரன் - 416 746 3795
5010 Steeles Ave West, Unit 16 B, Etobicoke (Kipling & Steeles)
Tel: 416 746 Asia (2742) www. asiagoldinc.com

# IN சுவை!

## FIRST COVER PAGE OF MAGAZINES




## உங்களுக்குத் தெரியுமா?

- டென்னிஸ் போட்டிகளில் ஆஸ்திரேலிய ஓப்பன், பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன், யூ.எஸ். ஓப்பன் ஆகிய நான்கும் பெருவெற்றித் தொடர்கள் எனப்படுகின்றன.
- யொகான் பிலிப் பப்ரிசியஸ் தமிழில் மொழிபெயர்த்த கிறிஸ்தவ வேதாகமம் தான் தமிழ் மொழியின் வசன நடையின் ஆரம்ப காலத்தில் முதலில் வெளிவந்த பெரிய வசனநடை தமிழ் நூலாகும்.
- இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்த் திரைப்படம் சமுதாயம்.
- ஹரிதாஸ் திரைப்படம் ஒரே திரையரங்கில் 110 வாரங்கள் தொடர்ச்சியாக ஓடி சாதனை படைத்தது. 1944 தீபாவளி அன்று வெளியான இப்படம் 1946 தீபாவளி வரை தொடர்ந்து திரையிடப்பட்டது.
- நல்ல பாம்பு முட்டையிடும் விரியன் பாம்போ குட்டிகளை ஈனும்.
- கலாஷேத்திராவின் நிறுவனரான ருக்மணி தேவி அருண்டேல் கலைச்சேவையே தன் வாழ்க்கைப்பணி என்று கூறி இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியினை வகிக்கும் வாய்ப்பை ஏற்கவில்லை.
- தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதிய "மனோன் மணீயம்" சுந்தரம் பிள்ளை கேரளாவில் பிறந்தவர். அது மட்டுமின்றி இவருடைய மகன் நடராசப்பிள்ளை பின்னாளில் கேரள அரசில் அமைச்சராகவும் இருந்தார்.
- ஜப்பான் நாட்டவர் தம் நாட்டை அவர்களின் மொழியில் நிப்பான் என்று அழைப்பர்.
- கடற் பாம்பு ஒன்றைப் பிடித்து நிலத்தில் விட்டால் அதனால் அசையக் கூட முடியாது.
- ஓர் ஆந்தை தனது தலையை இரு புறமும் 270 பாகைகள் வரை திருப்ப வல்லது.

## சுதந்திர தேவி சிலை

(Statue of Liberty அல்லது Liberty Enlightening the World) என்பது ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற சிலையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இச்சிலையை பிரான்ஸ் நாடு அமெரிக்காவிற்கு அன்பளிப்பாக வழங்கியது. இச் சிலையை வடிவமைத்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரெடெரிக் ஆகுஸ்டெ பார்த்தோல்டி ஆவார். அவர் அக்டோபர் 28, 1886 இல் இதனை வழங்கினார்,

அமெரிக்கப் புரட்சியின் போது ஐக்கிய அமெரிக்காவிற்கும், பிரான்சிற்கும் இடையே நிலவிய நட்புறவின் வெளிப் பாட்டினை எடுத்தியம்பும் முகமாக பிரான்ஸ் நாட்டினால் ஐக்கிய அமெரிக்காவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது இந்த சுதந்திரதேவி சிலை. இது சர்வதேச ரீதியில் நட்பையும், விடுதலையினையும், மக்களாட்சியினையும் வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குகின்றது.



ஐக்கிய அமெரிக்காவிற்கு விடுதலை கிடைத்து நூற்றாண்டுகள் நிறைவு பெற்றதை சிறப்பிக்கும் முகமாக அமெரிக்காவும், பிரான்சும் ஒன்றிணைந்து சிலை ஒன்றினை வடிவமைக்க அமெரிக்காவில் நடைபெற்ற மாநாடொன்றில் ஒத்துக் கொண்டன. அதன் அடிப்படையில் பீடத்தினை அமெரிக்க மக்கள் நிர்மாணிப்பதென்றும், பிரான்ஸ் மக்கள் சிலையினை நிர்மாணிப்பதென்றும் முடிவு செய்தனர். அதன்பின் இரு நாட்டவர் களையும் நிதிப் பிரச்சினை பெரிதும் பாதித்தது. அதனால் பிரான்ஸ் நாடு களியாட்டங்கள், அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு, மூலம் நிதியைத் திரட்டியது. அமெரிக்கா கலை நிகழ்வுகள், கண்காட்சிகள், மற்றும் வேறு நிகழ்வுகள் மூலமும் நிதியை திரட்டினர்.

# How Big Brands Got their Names:

**Adidas:** Taken from the nick name of founder Adolf Adi Dassler, His brother Rudolf Rudi Dassler went on to found his own shoe company called ruda, which later became puma.

**IKEA:** The initials of the founder Ingvar Kamprad, plus the initials of the property and village he grew up in. Elmtrayd Agunnaryd

**Coca- Cola:** Named for the Coca leaves and kola nuts originally used as flavouring.

**Sharp:** Named after the company's first product, the ever sharped pencil.


**Lego:** From the Danish leg Godt, which means to play well.



## யார் இந்தச் சிறுமிகள்?

13ம் பக்கத்தில் பார்க்கவும்.

## ஹாலிவுட்டில் 3இடியட்ஸ்





தமிழ், தெலுங்கில் ரீமேக் செய்யப்பட்டிருக்கும் 3இடியட்ஸ் விரைவில் ஹாலிவுட் செல்கிறது.

ராஜ்குமார் கிரானி இயக்கத்தில் அமீர்கான் நடித்த 3இடியட்ஸ் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. இந்திய கல்வி முறையை நோகாமல் கேள்வி கேட்கும் இந்தப் படத்தின் கதையை ஒரு யூனிவர்சல் சப்ஜெக்ட் எனலாம். இதனை ஹாலிவுட்டில் ரீமேக் செய்ய சில ஸ்டுடியோக்கள் விரும்புகின்றன.

இதனை உறுதி செய்திருக்கும் 3இடியட்ஸ் படத்தின் தயாரிப்பாளர் விது வினோத் சோப்ரா, மூன்று கம்பெனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே ஹாங்காங்கில் வெளியாகி வரவேற்பை பெற்ற இப்படம் சீனாவில் வெளியாகிறது.

## டுவிலைட் சாகா
## THE TWILIGHT SAGA




டுவிலைட் சாகாவின் புதிய பாகமான பிரேக்கிங் டாவுன் பார்ட் ஒன் (The Twilight Saga: Breaking Dawn - Part 1) வெளியாகிய சில வாரங்கள் யுஎஸ் பாக்ஸ் ஆஃபிஸில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்தது. அதற்கு முன் சில வாரங்களாக ஹாலிவுட்டில் வெளியான எந்தப் படமும் 100 மில்லியன் டாலர் மார்க்கை எட்டவில்லை.

பெரும் பொருட்செலவில் தயாரான இம்மார்டல்ஸ் படமும் நான்கு வாரங்கள் முடிவில் 75.7 மில்லியன் டாலர் அளவுக்கே வசூல் செய்திருந்தது. அனிமேஷன் படமான Puss in Boots மட்டும் ஆறு வாரங்கள் முடிவில் 140 மில்லியன் டாலர்களை வசூலித்துள்ளது.

இந்நிலையில் டுவிலைட் சாகாவின் புதிய பாகம் மூன்று வாரங்களில் 247 மில்லியன் டாலர்களை வசூலித்து ஆச்சரியப்படுத்தியுள்ளது. இத்தனைக்கும் படம் சுமார் என்ற விமர்சனத்தையே பெற்றிருக்கிறது.

அத்துடன் டுவிலைட் சாகா சீரிஸின் மூலம் வெளிச்சத்துக்கு வந்தவர் ராபர்ட் பேட்டின்சன். இதில் இவர் வேம்பயராக நடித்துள்ளார். இவரது கதாபாத்திரத்தின் முக்கிய அம்சம், ரத்தத்தை குடித்து வாழும் வேம்பயருக்கு வயதாகாது. எப்போதும் இளமையாக இருப்பார்கள். இது திரையில். நிஜத்தில்?

மற்ற துறைகளில் இருப்பவர்களைவிட நடிகனாக இருப்பதால் தனக்கு மற்றவர்களைவிட மெதுவாக வயதாவதாக அவர் தெரிவித்துள்ளார். இதை வைத்து ஜார்ஜ் குளுனி போல் இவருக்கு வயது ஐம்பதாகிவிட்டதா என நினைக்காதீர்கள். சின்ன பையன்.... 25 வயதுதான் ஆகிறது.

# சங்க கால இலக்கியத்தில் நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும்

தமிழர் பல நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். பண்டைய மக்கள் பலரைப்போல பெருவாரியான மூட நம்பிக்கைகளும் கொண்டிருந்தனர். வளர்ந்துவிட்ட ஒரு லௌகிகக் கலாச்சாரத்திற்கும் ஆழ்ந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் தெளிவுபடுத்தப் பெறாத நம்பிக்கைகளுக்கும் யாதொரு முரண்பாடும் இல்லை என்பதை இது தோற்றுவிக்கும்.

அவர்கள் கனவுகளை நம்பினர். அவை எப்போதும் பலிக்கும் என்றும் கருதினர். கனவு எப்போது பலிக்கும் என்பது இது எந்த சமயத்தில் நிகழ்கின்றது என்பதைப் பொறுத்திருக்கும் என்று கருதினர். இரவு முதல் சாமத்தில் காணும் கனவு ஓராண்டில் பலிக்கும் என்று எதிர்பார்த்தனர். இரண்டாம் மாதத்து கனவு எட்டு மாதத்தில் பலிக்கும், மூன்றாம் சாமத்து கனவு மூன்று மாதத்திலும், நான்காம் சாமத்து கனவு பத்து நாளிலும் பலிக்கும். கண்ணகியின் கனவு இரவில் இடையாமத்தாதலின் அது விரைவிலேயே பலித்துவிட்டது. வழக்குரைகாதையில் கூறப் பட்டுள்ள கோப்பெருந்தேவி கனவும் கடையாமத்ததகாவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இது விரைவிலேயே பலித்தது. இக்கனாக்கள் எதிர்கால நிகழ்ச்சிகளை ஏறத்தாழ தெளிவாகக் காட்டிவிட்டன. சில கனவுகள் வருங்கால நிகழ்வுகளின் பொதுத் தன்மையைக் காட்டும். அவர்களுடைய கனா சாத்திரம் வரும் தீமையை முன்காட்டும் கனவுகளை வரிசைப்படுத்தியுள்ளது.

கொள்ளிக்கட்டைகள் நாற்புறமும் வீழ்தல், பட்டமரம் தீப்பற்றல், வானத்தில் பல ஞாயிறு தோன்றல், தீச்சகுணம் குறிக்கும் பறவைகள் ஒலித்தல் போன்றவை நிகழும் போதும், பற்கழன்று தரையில் வீழ்தல், எண்ணெய் தேய்த்துக் குளித்தல், படைக்கலக் கொட்டிலிலிருந்து படைக்கலம் நழுவி வீழ்தல், தன்னைத்தானே ஆடையின்றிக் காணல், ஆண்பன்றி மீதேறிச் செல்லுதல் போன்ற கனவுகள் தீயபலன் விளையும் என்றும் கருதினர்.

அத்துடன் அவர்கள் வேறு சில நிமித்தங்களையும் நம்பினர். விரிச்சி என்பது அசரீரி. அச்சொல் நல்லதோ கெட்டதோ அதைப் பொறுத்து நன்மை தீமை விளையும். சுவரேறிச் செல்லும் பல்லியைக் கவனித்து அது எந்தத் திக்கிலிருந்து செல்லுகிறதோ அதைக்கண்டு சகுனம் பார்த்தனர். அதுவும் ஒருவகை அசரீரியே. அரசன் போருக்குப் புறப்படுமுன் கணி நிமித்தம் பார்த்தனன். சில பறவைகள், குறிப்பாக காரி எனப்படும் கரிக்குருவி, பறக்கும் திக்கு தவறாத நிமித்தமாகும்.

பிரயாணத்திற்கு நல்ல நாள் பாக்க வேண்டும். பெண்களின் இடது கண் துடித்தலும் ஆண்களின் வலதுகண் துடித்தலும் நன்று. பால் தோயாவிட்டால் அது இடையர்க்கு திது. தென்திசையில் சுக்ரன் தோன்றினால் யாவர்க்கும் திது. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர். ஒருவன் தும்மினால் யாரோ அவனை நினைப்பதன் அறிகுறி என்றும் கூறுகின்றனர்.

பேய்களின் உண்மை நம்பப்பட்டது. அவற்றை நினைத்து அஞ்சினர். ஒருவனுடைய இறுதிக்கால எண்ணங்கள் அவனது அடுத்த பிறவியின் தன்மையை நிர்ணயிக்கும் என்று கருதினர். தீண்டாமை நன்று என்றும் கருதினர்.

வேப்பிலையும் வெண்சிறு கடுகும் பேயினின்றும் மக்களைக் காக்கக்கூடியவை என்ற எண்ணினர். இயற்கை கடந்த சக்திகளால் குழந்தைகளுக்கு திது நேரிடாமல் மகளிர் தமது தலையில் வேப்பிலையைச் செருகிக் கொண்டனர். தீய சக்திகளிலிருந்து காக்க குழந்தைகளின் தலையில் நெய்யும் வெண்சிறு கடுகும் அப்பினர்.

மனைவியின் பூப்பிற்கு பின் பதினைந்து நாட்கள் கணவன் அவளை நீங்காமை வேண்டும் என்று விதித்தனர். பூப்புகாலத்தில் அவளோடு கலவாமை வேண்டும் என்று விதித்தனர். விஞ்ஞான நோக்கினும் இவை வெற்று நம்பிக்கைகளல்ல. ●




BEST QUALITY WORK FOR REASONABLE PRICE !


# CANADIAN DESIGN

## WOOD FLOORING

Hardwood | Laminate | Kitchen | Stairs | Granite | Carpet | Painting & Renovation

1570 Midland Ave, Scarborough, ON M1P 3C2

Tel: 416 269 0362 / Fax: 416 269 7842



# வாய் புற்றுநோய்

கனடாவில் இதுவரை அறியப்பட்ட முக்கியமான 23 புற்றுநோய்களில் 13வது பொதுவான ஒரு புற்றுநோய் வாய்ப்புற்றுநோய்.

2009ஆம் ஆண்டு கனடாவில் வயிறு, மூளை போன்ற புற்றுநோய்களைவிட வாய்புற்றுநோயின் மூலமான இறப்பு அதிகமாக இருந்தது.

வாய்ப்புற்றுநோயானது எந்த வயதிலும் ஏற்படலாம். 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இது ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

புகைத்தல் அல்லது புகையிலை பொருட்களைப் பாவிப்பது வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது. புகைத்தலுடன் மது அருந்துதல் இது ஏற்படுவதற்கான ஆபத்தை இன்னும் அதிகரிக்கின்றது. புகையிலை மெல்லுதல், பாக்கு, போன்றவையும் அளவுக்கதிகமான மது அருந்துதலும் வாய்ப்புற்றுநோய் ஏற்பட காரணமாகின்றது. அண்மைக்காலமாக HPV (Human Papillomavaius) வைரஸ் தொற்றினாலும் வாய்புற்றுநோய் ஏற்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக பெண்களைவிட ஆண்களுக்கே வாய்ப்புற்றுநோய் ஏற்படு கின்றது. கடந்த காலங்களில் ஆறு ஆண்களில் ஒருவர் என்ற ரீதியில் காணப்பட்ட இந்த வாய்ப்புற்றுநோய், தற்போது இருவரில் ஒருவர் என்றளவிற்கு சுருங்கியிருக்கிறது.

வாய்ப்புற்றுநோய் என்பது உதடு, உதடு கன்னம் போன்றவற்றின் உட்பகுதி, நாக்கு, முரசு, நாக்கின் உட்புறம், தொண்டை போன்ற பகுதிகளில் ஏற்படும் வழமைக்கு மாறான உயிரணுக்களின் பரவல்.

வாய்ப்புற்றுநோயானது அதன் ஆரம்பநிலையில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இதன் சிகிச்சை இலகுவானது. ஆரம்ப நிலையிலேயே இதற்கு சிகிச்சை அளிக்காவிடில் இது மற்றைய இடங்களுக்கும் பரவி சிகிச்சையளிப்பதற்கு மிகவும் கடுமையாக அமையலாம்.

இரண்டு வாரங்களுக்கு மேலாக வாயில் காணப்படும் வலி அல்லது புண், வாயினுள் ஏற்படும் வெள்ளை அல்லது கடும் சிவப்பு தழும்புகள், உதடு, நாக்கு, கழுத்து போன்ற பகுதிகளில் ஏற்படும் நீண்டகால கட்டி அல்லது வீக்கம், வாயினுள் இரத்தம் வடிதல், தொண்டையில் ஏற்படும் அழற்சி, விழுங்குவதில் ஏற்படும் கடினம் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும்.

## சுயபரிசோதனை


வாய்ப்புற்றுநோயை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடித்தால் அதன் சிகிச்சை இலகுவாக இருக்கும். இந்த சுயபரிசோதனை வாய் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே அறிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

- ✓ நீங்கள் 40 வயதிற்கு மேற்பட்டவரா?
- ✓ நீங்கள் ஒரு ஆணா?
- ✓ உங்களுக்கு HPV தொற்று உள்ளதா?

**பொதுவாக பெண்களைவிட ஆண்களுக்கே வாய்ப்புற்றுநோய் ஏற்படுகின்றது.**

- Dr. நளினி சுதர்ஷன்

- ✔ நீங்கள் உடலுறவில் அதிக நாட்டம் கொண்டவரும் பாலுறவு மூலம் தொற்றும் நோய்கள் (sexually transmitted infections (STI's)) தொடர்பாக அடிக்கடி பரிசோதனை செய்துபார்க்காதவரா?
- ✔ புகையிலை சம்பந்தமான பொருட்களை பயன்படுத்துபவரா?
- ✔ நீண்ட காலமாக அளவுக்கதிமாக மதுபானம் அருந்துபவரா?
- ✔ உங்கள் உதடுகள் தொடர்ச்சியாக அதிக சூரிய ஒளியால் பாதிப்படைந் துள்ளதா?
- ✔ நீங்கள் பழங்கள், மரக்கறிவகைகள் உட்கொள்வது மிகவும் குறைவா?



இந்தக் கேள்விகளுக்கு அதிகளவில் உங்களது பதில் ஆம் என்றால் உங்களது பல் வைத்தியரிடம் சென்று இதுதொடர்பாக மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்வது சிறந்தது.

வாய்ப்புற்றுநோயானது எந்த வயதிலும் ஏற்படலாம். ஆனால் 40 வயதில் இதற்கான வாய்ப்புகள் அதிகமாகவும் 60 வயதில் மிக அதிகமாகவும் காணப்படும்.

## தடுப்பதற்கான வழிமுறைகள்

- ✔ அடிக்கடி பல்வைத்தியரிடம் சென்று பரிசோதித்து வாயை சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.
- ✔ புகைத்தல். புகையிலை தொடர்பான பொருட்களைப் பாவித்தல் போன்றவற்றை நிறுத்துங்கள்.
- ✔ பாதுகாப்பான முறையில் உடலுறவில் ஈடுபடுங்கள். Condom பயன்படுத்துங்கள். இதன்மூலம் HPV இனால் ஏற்படும் தொற்றையும் குறைத்துக்கொள்ளலாம்.
- ✔ அதிக நேரம் வெய்யிலில் நிற்க வேண்டி ஏற்படும்போது UV பாதுகாப்புள்ள Lip Balm களை உபயோகப்படுத்துங்கள்.
- ✔ அதிக பழங்களை, மரக்கறி வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.
- ✔ தினமும் பல் துலக்குங்கள்.

**இதுபோன்ற வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களைக் குறைத்துக்கொள்ளுங்கள்.** ■



பக்கம் 9, In சுவை பகுதியில் உள்ள சிறுவர்கள் ஸ்ருதி & அக்ஷரா

கணவன் : ச்சீய்! காப்பியாடி இது? நாய்கூட இதை குடிக்காதுடி.

மனைவி : ஆமாங்க! அதனாலதான் நம்ம நாய்க்கு ஹார்லிக்ஸ் போட்டு வச்சுருக்கேன்.

கணவன் : ????!!!!

---

பக்கத்துவீட்டுகாரர் : வீட்ல எப்பவும் சிரிப்பு சத்தம் கேக்குதே?

ராமு : மனைவி என் மேல பாத்திரத்த தூக்கி போடுவா.

மேல படலேன்னா நான் சிரிப்பேன், பட்டதுன்னா அவள் சிரிப்பா.

---

நண்பன் 1 : நேற்று பெண் பார்க்கப் போன இடத்தில மயங்கி விழுந்திட்டேன்டா...

நண்பன் 2 : பெண் அவ்வளவு அழகா?

நண்பன் 1 : இல்லடா... விஷயம் தெரிந்து என் மனைவியும் அங்கே வந்திட்டா..

வாசகர்களே! உங்கள் உள்ளத்தில் தோன்றும் கேள்விகளை ஹலோ மோகன் பார்வைக்கு அனுப்பி வையுங்கள்.
**Email: hellomogan@thooralonline.com**
**Fax: 416 273 7606**

கேள்வி - பதில்

# ஹலோ மோகன்

ராமசந்திரன் - ஸ்காபுரோ

**நான் கவிதை எழுத ஆரம்பித்திருக்கிறேன். ஒரு கவிதையின் முடிவு எப்படி இருக்க வேண்டும் என்பதில் சிறு குழப்பம். எப்படி இருக்க வேண்டும்?**

இப்போதெல்லாம் ஒரு கவிதையின் முடிவு மூன்று புள்ளி, ஒரு ஆச்சரியக் குறியோடு இருக்க வேண்டும் என்பது தான் எம்மில் பலரின் மனதில் இருக்கிறது. இதற்கான நன்றி அனைத்தும் டைரக்டர் சமுத்திரக்கனியையும், சசியையும் போராளி திரைப்படத்தின் மூலம் சாரும்.

**நானும் கவிதை எழுதியிருக்கிறேன்...!**

(நாங்க எல்லாம் அப்பவே அப்படி. இப்ப கேக்கவும் வேணுமா?)

ரேணுகா - மார்க்கம்

**நீங்க முதன்முதல்ல போலீசைப் பார்த்து பயந்த சம்பவம்?**

சாதாரணமாகவே நாம் வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும் போதோ அல்லது அவர்களைப் பார்க்கும் போதே நாம் ஏதாவது தவறு செய்கிறோமா என்ற ஒரு பயம் எமக்குள் எழுந்துவிடும். வாகனம் ஓட்டுபவராக இருந்தால் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று சரிபார்ப்பது மட்டுமல்லாது உறை நிலைக்கு சென்றுவிடுவோம். இதற்கு நானும் விதிவிலக்கல்ல.




ஒன்றா... இரண்டா சொல்வதற்கு...

சுமதி - கொழும்பு

**ஒரு மனிதனின் மூளை எப்போது சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பிக்கிறது?**

இதென்ன கேள்வியய்யா? பணம் என்றால் பிணம் கூட வாய்திறக்கும். அப்படி இருக்கும்போது பண நோட்டுக்களை எண்ணும் போதே மனிதனின் மூளை சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பிக்கிறது.

முரளிதரன் - ஸ்காபுரோ

**சாதனை மனிதனுக்கும் சாதாரண மனிதனுக்கும் என்ன வித்தியாசம்?**

விவேக் பாணியில் சொல்வதாக இருந்தால் 'விடுமுறை நாளில் நீ செத்தா சாதாரண மனிதன், நீ செத்த நாளில் விடுமுறை விட்டால் நீ சாதனை மனிதன்"

வசந்தன் - பிறம்டன்

**நான் புகைத்தலை நிறுத்த மிகவும் சிரமப்படுகிறேன். அறிவுரை உலகில் இலவசமாகக் கிடைக்கும் விடயம். எனக்கும் கிடைக்குமா?**

நான் உங்களுக்கு அறிவுரை சொல்லவில்லை. சில தரவுகள் தருகின்றேன். தீர்மானம் உங்கள் கையில்.



- சுவாசப்பையில் புற்று நோய் வந்து இறந்தவர்களில் 80 வீதமானவர்கள் புகைப்பவர்களாக இருந்திருக்கிறார்கள்.
- ஒவ்வொரு நாளும் 20 சிகரெட்டுகள் புகைப்பவர் ஒரு வருடத்தில் தனது சுவாசப்பைக்குள் ஒரு கோப்பை தார் ஊற்றுவதற்கான செயலைச் செய்துவிடுகின்றார்.
- கணக்கெடுப்பின் படி மிகக் குறைந்த வயதில் இறப்பவர்களில் 50 வீதமானோர் புகைப்பதாலேயே இறக்கின்றனர்.
- உலகத்தில் 10 வினாடிக்கு ஒருவர் புகைத்தலினால் இறந்து கொண்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு (World Health Organzation) அறிவிக்கிறது.
- புகைத்தலினால் வருடத்திற்கு 3 மில்லியன் மக்கள் இறக்கிறார்கள். 2013ம் ஆண்டளவில் புகைத்தலினால் இறப்பவர்களின் தொகை 10மில்லியனை விட அதிகமாக உயரும் என உலக சுகாதார அமைப்பு அஞ்சுகிறது.

தமிழினி - கொழும்பு

**ஆட்டிசம் பற்றிய விழிப்புணர்வு எமது தமிழ் மக்கள் மத்தியில் எவ்வாறிருக்கிறது?**

தற்போது அதுபற்றிய விழிப்புணர்வு எமது மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கின்றது. இருப்பினும் இது பற்றி எதுவும் தெரியாத பெற்றோர்களும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்கள் பிள்ளைகளிடம் மாறுதலான பழக்கவழக்கங்களைக் காணும் போது இதுதொடர்பாக தமது பிள்ளைகளைத் தண்டிப்பதிலும் துன்புறுத்துவதிலும் ஈடுபடுகிறார்கள்.

பொதுவாக உங்கள் குழந்தைகளிடம் பின்வரும் செய்கைகளைக் காணும் போது நீங்கள் மருத்துவரை நாடி அது பற்றி கலந்தாலோசிப்பது மிகவும் நல்லது.

- பொருத்தமற்ற இடத்தில் பெரிதாய்ச் சிரிப்பதும் தமக்குள் சிரித்துக் கொள்வது.
- ஆபத்துகள் பற்றிய பயம் இன்மை,
- உடலில் ஏற்படும் நோவுகள் குறித்து அலட்டிக்கொள்ளாதிருத்தல்.
- அணைத்தல், தூக்குதலை விரும்பமாட்டார்கள்.
- மீண்டும் மீண்டும் ஒரே விளையாட்டில் லயித்திருத்தல், சமனற்ற உடல் மற்றும் பேச்சுத்திறன்.
- நேரே கண்ணைப்பார்த்து கதைக்கத் தயங்குதல்.
- தனியாயிருக்க விரும்புதல்.
- தேவைகளைச் சொல்வதற்கு தெரியாது. சைகைகளால் பேசுதல்.
- பொருத்தமில்லாத வகையில் பொருட்களுடன் நெருக்கம் காட்டுதல்.
- தானும் சமம் என்று காட்டுவதில் முனைப்பு அதிகமாயிருத்தல்.
- சொற்கள் வசனங்களைத் திரும்பித் திருப்பி (Repeating) சொல்பவரிடமே சொல்லுதல்.
- சத்தங்களுக்கு ஒலிகளுக்கு பொருத்தமற்ற வகையில் அதிகமாகக் காது கொடுத்தல் அல்லது சுரணையற்றிருத்தல்.
- பொருட்களைச் சுற்றிவிடுதல் அல்லது தாங்களே சுற்றுதல்.
- பிறருடன் கலந்து மகிழ்வதில் ஆர்வமின்மை.

பாஸ்கரன் - மார்க்கம்

**என்ன மோகன் சார். நமீதா திருமணம் செய்துகொள்ளப் போகிறாராமே? எனக்கு ஹாட் அட்டாக்கே வந்துவிட்டது. உங்களுக்கு எப்படி?**

நடிகை நமீதா தற்போது மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவரை தீவிரமாக காதலித்து வருகிறாராம். அண்மைக்காலமாக திரைப் படங்களில் நமீதாவிற்கு அதிக வாய்ப்பு இல்லாததால் கட்டுமான தொழிலதிபராக மாறியுள்ளார்.

நமீதாவின் அனைத்து விஷயங்களிலும் அறிவுரை கூறி, ஆலோசனை வழங்குவது மட்டுமல்லாமல், அவரது எல்லா முயற்சி களிலும் கூடவே இருந்து நல்வழி காட்டிய மும்பையைச் சேர்ந்த அந்த இளம் வழக்கறிஞர் தான் தற்போது நமீதாவின் மனம் கவர்ந்த காதலர் எனக் கூறப் படுகிறது. விரைவில் நமீதாவுக்கு திரு மணம் நடக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த செய்தியைக் கேட்டதிலிருந்து பாதி இளைஞர்கள் சேது விக்ரமாக மாறி விட்டார்கள்.



# தூறலில் நனைந்த நிகழ்வுகள்...

டிசெம்பர் 17ஆம் திகதி இடம் பெற்ற

**HOMELIFE FUTURE REALTY AWARDS CEREMONY**

நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.



**President Club Award 2011**
திரு. ஜோய் செல்வநாயகம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



**Chairman Club Award 2011**
திரு. சிவா சண்முகநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



**Chairman Club Award 2011**
திரு. சத்தி சிவசுப்ரமணியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



# அன்புள்ள தூறலுக்கு...

பல்சுவையான ஆக்கங்களுடன் தரமான தூறலின் அடுத்த இதழ் கையில் கிடைத்தது. மிகவும் சந்தோஷம். உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.
**வாணி – மார்க்கம்**

'எனக்கு நேரமில்லை' எமது வாழ்வில் சாதாரண வாக்கியமாகிவிட்டது. இந்த வசனத்தை பயன்படுத்தாத நாளே இல்லை என்று சொல்லுமளவிற்கு பிரபல்யமான வசனம் இது. இதனையே பயன்படுத்தி வந்த 'மாத்தி யோசி' ஆக்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.
**யோகேந்திரன் – ஏஜக்ஸ்**

எப்போதுமே பயனுள்ள ஆக்கங்களைத் தரும் கனி அவர்களுக்கு வாழ்த்துக்கள். தவறாமல் படிக்கத்தூண்டும் ஆக்கங்களைத் தொடர்ந்தும் தாருங்கள்.
**தர்சினி – ஸ்காபரோ**

'ஓடு மீனும் ஒரு கொக்கும்' ஒவ்வொரு குடும்பத் தலைவனும் படிக்க வேண்டிய கதை. எனது கணவனை வற்புறுத்தி படிக்கச் செய்தேன். பாராட்டுகள் நவம் அவர்களே.
**பவானி – ரொறன்ரோ**

'வீடுகளே இல்லாதபோது பாலென்ன பொங்கலென்ன'. 'இராணுவ முகாமும் அப்பாவித் தாய்மையும்' தாயக நிலைமையை அழகாக எடுத்துக்காட்டியிருந்தது. இருந்தாலும் இன்னும் சற்று அழுத்தமாக சொல்லியிருக்கலாம்.
**ராஜேந்திரன் – மிசிசாகா**

நடனக்கலை பற்றிய எஸ். பத்மநாதனின் ஆக்கம், நடனக்கலையை பயில்வதற்கான நியாயத்தை அழகாக எடுத்துக்கூறியிருந்தது. அதனை கற்பிப்பவர்கள் அதன் முக்கியத் துவத்தையும் அதன் வரலாற்றையும் மாணவர்களுக்கு புரியவைப்பது இன்னும் பயனுள்ளதாக இருக்கும்.
**அன்பரசி – மார்க்கம்**

அத்தனை அம்சமும் நிறைந்திருக்கும் தூறலில், எமக்கும் ஒரு பக்கத்தைத் தந்து எமக்கும் சின்னச் சின்ன ஐடியாக்கள் கொடுத்து சேர்த்துக்கொண்டதற்கு நன்றி.
**சதாசிவம் – மார்க்கம்**

பல வர்ணங்களோடு கண்ணைக் கவரும் விதத்தில் தரமான ஆக்கங்களுடன் தொடர்ந்தும் வெளிவரும் தூறலுக்கு எமது பாராட்டுகள். உங்கள் விடாமுயற்சியை தொடருங்கள். வாசகர்களாகிய எமது பங்களிப்பு உங்களுக்கு எப்போதும் இருக்கும்.
**சந்திரன் – மார்க்கம்**

பலதரப்பட்ட ஆக்கங்களுடன் தரமான இதழ் ஒன்றை கனடாவில் வெளியிடுவது என்பது மிகவும் சவாலான விடயம். அதனை மிகவும் அசாதாரணமாக செய்யும் தூறல் குழுமத்திற்கு எனது வாழ்த்துக்கள்.
**கார்த்திகேயன் – ரொறன்ரோ**

நூலகத்தில் தூறலைக் கண்டேன். மிகவும் நன்றாக இருக்கின்றது. மக்களுக்கு தேவையான விடயங்களை தருவதற்கு மிகவும் நன்றி. உன் ஆயுள் தொடர என் மனப்பூர்வமான ஆசிகள். வாழ்த்துக்கள். **தூறலுக்காக ஏங்கும் மதிவதனி**



**Oatley, Vigmond**
Personal Injury Lawyers LLP

Chosen as one of Canada's Top Five Personal Injury Law Firms
by Canadian Lawyer Magazine



**Shenthuran Subramaniam** B.Sc., M.B.A, J.D.
செந்தூரன் சுப்பிரமணியம்
Personal Injury Lawyer
**647.992.2417**
ssubramaniam@oatleyvigmond.com

- Car Accidents
- Slip and Fall Accidents
- Medical Malpractice
- Accident Benefits
- Brain Injuries
- Spinal Cord Injuries
- Disability Claims
- Paraplegic
- Product Liability
- Boating Accidents

**Toronto Location**
5140 Yonge Street
Suite 1510
Toronto, Ontario
CANADA M2N 6L7
Toll Free: 1.888.662.2481
Phone: 416.225.6550
Fax: 416.225.8935
info@oatleyvigmond.com

**Barrie Location**
151 Ferris Lane
Suite 200
Barrie, Ontario
CANADA L4M 6C1
Toll Free: 1.888.662.2481
Phone: 705.726.9021
Fax: 705.726.2132
info@oatleyvigmond.com

**Sudbury Location**
1560 Lasalle Boulevard
Unit H
Sudbury, Ontario
CANADA P3A 1Z7
Toll Free: 1.888.662.2481
Phone: 705.674.5121
Fax: 705.674.2136
info@oatleyvigmond.com

**Hamilton Location**
1 Hunter Street East
Suite G100
Hamilton, Ontario
CANADA L8N 3W1
Toll Free: 1.888.662.2481
Phone: 905.525.9995
Fax: 905.525.2132
info@oatleyvigmond.com

**North Bay Location**
116 McIntyre Street
West Main Floor
North Bay, Ontario
CANADA P1B 8K4
Toll Free: 1.888.662.2481
Phone: 705.476.7679
Fax: 705.472.5379
info@oatleyvigmond.com

**www.oatleyvigmond.com**

கவுண்டமணி தமிழ் சினிமாவின் கலகல கலைஞன். அவரைப் புறக்கணித்து தமிழ் சினிமா சிரிப்பு சரித்திரத்தை எழுத முடியாது.

# கவுண்டமணி பற்றிய சுவாரஸ்யமான சில தகவல்கள்...



- சுப்பிரமணியாக கவுண்டமணி பிறந்தது உடுமலைப்பேட்டைக்கு அருகில் உள்ள வல்லக்கொண்டபுரம்!
- கவுண்டமணிக்குப் பெரிய படிப்பெல்லாம் இல்லை. ஆனால், பேச்சில் ரஜனீஷின் மேற்கோள்கள் தெறிக்கும். 'பார்த்தால் காமெடியன், படிப்பில் அறிவாளி' என்பார் இயக்குநர் மணிவண்ணன்!
- பாரதிராஜாதான் 'கவுண்டமணி' எனப் பெயர் மாற்றினார். '16 வயதினிலே' தான் அறிமுகப் படம்!
- அம்மாவை 'ஆத்தா' என்றுதான் ஆசையாக அழைப்பார். வீட்டைத் தாண்டினால் ஆத்தா காலடியில் கும்பிட்டுவிட்டுத்தான் நகர்வார். மனைவி பெயர் சாந்தி. இரண்டு மகள்கள். செல்வி, சுமித்ரா. முதல் பெண்ணின் திருமணத்தின்போதுதான் அவருக்கு இரண்டு குழந்தைகள் என்கிற விவரமே தெரிய வந்தது. அவ்வளவு தூரம் மீடியா வெளிச்சம் படாமல் இருப்பார்!
- மிகப் பிரபலமான கவுண்டமணி – செந்தில் கூட்டணி இணைந்தே 450 படங்களுக்கு மேல் நடித்து இருக்கிறார்கள். இது ஓர் உலக சாதனை!
- இவர் மட்டுமே 750 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். இதில் ஹீரோவாக நடித்த படங்கள் மட்டும் 12.
- கவுண்டமணிக்குப் பிடித்த நிறம் கறுப்பு. எந்நேரமும் அந்த நிறம் சூழ இருந்தால்கூட 'சரி' என்பார். 'இங்கிலீஷ் கலருடா ப்ளாக்!' என்பவர், எங்கே போவதென்றாலும் ஜீன்ஸ்–கறுப்பு நிற பனியன் அணிந்துதான் செல்வார்!
- சினிமா உலகில் அவருக்குப் பெரிய நட்பு வட்டம் கிடையாது. ஆனாலும் சத்யராஜ், அர்ஜுன், கார்த்திக் ஆகிய மூவரிடமும் நெருக்கமாகப் பழகுவார்!
- கவுண்டமணிக்குப் பிடித்த நகைச்சுவை நடிகர் சுருளிராஜன்தான். அவரின் நகைச்சுவைபற்றி அவ்வளவு பெருமிதமாகப் பேசுவதைக் கேட்டுக்கொண்டே வயிறு வலிக்கச் சிரித்து வரலாம்!
- புகைப் பழக்கம் அறவே கிடையாது. வெளியே விழாக்கள், பார்ட்டிகள், பிறந்த நாள் நிகழ்ச்சிகள் என எதிலும் கலந்துகொள்கிற வழக்கம் கிடையாது. தனிமை விரும்பி!
- ஓஷோவின் புத்தகங்களுக்கு ரசிகர். அதே மாதிரி ஹாலிவுட் படங்களைத் தவறாமல் பார்த்து, நல்ல படங்களை நண்பர்களுக்குச் சிபாரிசும் செய்வார்! வெளியாகும் ஹாலிவுட் திரைப்படம் பற்றிய சகல தகவல்கள், அதில் பணியாற்றியவர்கள் உட்பட அனைத்துவிதமான தகவல்களையும் விரல் நுனியில் வைத்திருப்பார்.
- கவுண்டரின் தி.நகர் ஆபீஸுக்குப் போனால் சின்ன வயதுக்காரராக இருந்தாலும் எழுந்து நின்று கைகூப்பி வணக்கம் சொல்வார். நாம் அமர்ந்த பிறகுதான் அவர் உட்கார்ந்து பேச்சை ஆரம்பிப்பார்!
- கார்களின் காதலன் கவுண்டர். 10 கார்களை வைத்திருக்கிறார். நெரிசல் நிரம்பிய இடங்களுக்கு சின்ன கார். அகல சாலைகள் உள்ள இடங்களுக்குப் பெரிய கார்களை எடுத்துச் செல்வார். 'நம் சௌகரியம் பார்த்தா பத்தாது... ஜனங்க நடமாட சௌகரியம் கொடுக்கணும்' என்பார்!
- டுபாக்கூர் சாமியார்களைப் பயங்கரமாகக் கிண்டல் செய்வார். 'மனிதனாகப் பிறந்தவர்களைத் தெய்வமாகச் சித்திரிப்பது ஏமாற்று வேலை' என்பார். நமக்கும் கடவுளுக்கும் சாமியார்கள் மீடியேட்டரா எனச் சாட்டை வீசுவார். ஆனாலும், தீவிர கடவுள் நம்பிக்கை உடையவர்!
- கவுண்டருக்கு, அவர் நடித்ததில் பிடித்த படங்கள் 'ஒண்ணா இருக்கக் கத்துக்கணும்' 'வரவு எட்டணா செலவு பத்தணா', 'நடிகன்'. 'அட... என்னடா பெருசா நடிச்சுப்புட்டோம், மார்லன் பிராண்டோவா நானு' என சுய எள்ளலும் செய்துகொள்வார்!


Dynamite Colours Blinds & Shutters
உங்கள் இல்லங்களை மாளிகைகளாக மாற்றிட!
CUSTOMER SATISFACTION GUARANTEED
முதல் தடவை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு
இரண்டாம் முறை 50% கழிவோடு கொள்வனவு செய்யலாம்!
7025 Tomken Road., Unit #16, Mississauga, L5S 1R6
Tel: 416 646 8819 Cell : 647 400 9287 Toll: 1-877-999-0928
info@dynamitecolours.com | www.dynamitecolours.com
HunterDouglas WINDOW FASHIONS
MAXXMAR WINDOW FASHIONS
ECLIPSE SHUTTERS
Call for free estimate & save $
VISA
MasterCard

- அ.முத்துலிங்கம்


# வெள்ளிக்கிழமை

பசுபிக் சமுத்திரத்தில் சமோவா என்ற மிகச் சின்னத் தீவு ஒன்று இருக்கிறது. சர்வதேச தேதிக் கோடு இதற்கு மிகச் சமீபமாகச் செல்கிறது. கிழக்கையும் மேற்கையும் பிரிக்கும் கோட்டில் இது அமெரிக்கா பக்கம் இருக்கிறது. இந்தக் கோட்டை தாண்டும்போது ஒரு நாள் கூடுகிறது அல்லது குறைகிறது. அமெரிக்காவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு பயணிக்கும் ஒருவர் இந்தக் கோட்டை தாண்டியதும் ஒரு முழு நாளை கடந்துவிடுவார்.

கடந்த ஆண்டு, 2011 டிசெம்பர் 29 வியாழக்கிழமை சர்வதேச தேதிக்கோட்டை மாற்றி வரைந்தார்கள். சமோவா அவுஸ்திரேலியா பக்கம் போய்ட்டது. டிசெம்பர் 29, வியாழக்கிழமை சமோவாவில் நடு இரவு வந்து அது விடிந்தபோது டிசெம்பர் 31, சனிக்கிழமையாக இருந்தது. ஒரு முழு நாள் மறைந்துபோனது.

180,000 பேர் சனத்தொகை கொண்ட சமோவாவில் அன்று ஒருவரும் பிறக்க வில்லை. இறக்கவில்லை, பள்ளிக்கூடம் இல்லை. அலுவலகம் இல்லை. சினிமா இல்லை. விளையாட்டு இல்லை. தூக்கம் இல்லை. சமையல் இல்லை. சாப்பாடு இல்லை. வெள்ளிக்கிழமையே இல்லை. உலகத்து நாடுகள் எல்லாம் 365 நாட்களைக் கொண்டாட சென்ற வருடம் சமோவாவில் மட்டும் 364 நாட்கள்தான்.





உங்கள் இல்லம் என்றும் சிறந்திட புதுமை மிகுந்த ஒரு தேர்வு...
குணம்ஸ் Super Market
இலங்கை, இந்திய, கனேடிய அனைத்துவிதமான உணவுப் பொருட்கள்,
பூசைப் பொருட்கள் மற்றும் DVD, CD களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்..
Gunaam's Super market
1145 Morningside Ave, Unit 32 & 33 Morningsite Ave,
Sheppard Ave Scarborough, Ontario M1B 0A7
416-283-9998

# ஏன் இந்தக் கொலை வெறிடா..?


அந்த நாட்களில் நடிகர் எம். ஜி. ஆருக்கென்றே பிரபலமான சில பாடல்கள் இருந்தன. சௌந்தர்ராஜனும் அவருக்கேற்ற மாதிரி குரலை மாற்றிப் பாடுவார். படம் வெளிவருமுன்னே இந்தப் பாடல்கள் வெளிவந்து படத்தைப் பற்றிய ஒரு பெரும் எதிர்பார்ப்பை ரசிகர்களிடையே ஏற்படுத்தி விடும். அனேக மானவர்களின் வாயிலிருந்து இந்தப் பாடல்கள்தான் முணுமுணுப்பாய் வெளிவரும். எம்ஜி ஆரைத் தொடர்ந்து அந்த இடத்தை சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் பிடித்துக் கொண்டார். ரஜினிகாந்திற்கும் குறிப்பிட்டுச் சொல்லும் படியாகச் சில பாடல்கள் அமைந்தன. ரஜினியின் ரசிகர்கள் அந்தப் பாடல்களையே முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள். அதைத் தொடர்ந்து இப்போ ரஜினிகாந்தின் 28 வயதான மருமகன் தனுஷ் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார். அதிரடியாகத் தனுஷை உயர்த்திவிட்ட முதற்பாட்டு என்று குறிப்பிட்டால் அது மன்மதராசாதான். அந்தப் பாட்டிற்காக அமர்க்களமாய் நடனமாடிப் பல ரசிகர்களைத் தனக் காக்கிக் கொண்டார். அடுத்து நன்கு பேசப்பட்ட பாட்டு ஜி. வி. பிரகாஷின் இசையமைப்பில் ஆடுகளத்தில் இடம் பெற்றிருந்தது. இந்தப் படத்திலும் அற்புதமாய் நடன மாடியிருந்தார். இதை யெல்லாம் தாண்டி படம் வெளிவராவிட்டாலும், இன்று பட்டிதொட்டி எங்கும் கேட்கும் பாடலாக தனுஷின் கொலைவெறிப் பாடல் அமைந்துவிட்டது. அதேசமயம், சாதாரண அர்த்தமே இல்லாத இந்தப் பாடல் பல நண்பர்களையும் பல எதிரிகளையும் தேடிக் கொடுத்த பாடலாக இருப்பதாகவும் ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் தனுஷ் குறிப்பிட்டிருந்தார்.

கூகுள் இணையத்தளத்தில் அதிகம் தேடப்பட்ட பாடலாக இந்தப் பாடல் இடம் பெற்றுவிட்டது. இருபத்தியொரு வயதான அனிருத் ரவிசந்தர் என்ற இளைஞர் இந்தப் பாடலுக்கு இசை அமைத்திருக்கிறார். இப்போ யூரியுப்பிலும் இந்தப் பாடல் சக்கை வாங்குகிறது. வை திஸ் கொலைவெறிடீ.. என்ற இந்தப் பாடலை தானே எழுதி தனது சொந்தக் குரலில் தனுஷ் பாடியிருக்கின்றார். மும்பாயில் நடந்த பிக் ஸ்டார் என்டர்டெயின்மென்ட் மேடை நிகழ்ச்சியிலும் இந்தப்பாடலைப் பாடியிருக்கின்றார். இந்தப் பாடல் தனுஷின் மனைவி ஐஸ்வர்யா இயக்கிய மூன்று (3) என்ற படத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தப் படத்தில் கதாநாயகியாக தனுஷின் ஜோடியாக நடித்திருப்பது நடிகர் கமலஹாசனின் மூத்த மகள் ஸ்ருதி ஹாசன். இந்தியிலும் இப்போ இந்தப் படம் வெளிவர இருக்கின்றது. சமீபத்தில் விஜய் தொலைக்காட்சியிலும் இந்தப்பாடலைப் பலரும் பலவிதமாகவும் பாடி ஒரு நிகழ்ச்சி நடத்தினார்கள். இந்தப் பாடலில் அப்படி என்னதான் இருக்கிறது என்று தேடிப்பார்த்தால் அப்படி ஒன்றுமே இல்லை. கோவா படத்தில் பெற்ற ஏமாற்றம் இவர்களுக்கு ஒரு பாடமாக அமைந் திருக்கிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. புகழுக்காகப் பணம் கொடுத்துச் செய்யப்படும் ஒருவித விளம்பரத் தந்திரமாகவே இந்தப்பாடல் பயன் படுத்தப்படுகின்றது. தமிழும் இல்லை ஆங்கிலமும் இல்லை என்ற நிலையில் சின்னக் குழந்தைகளை



நேசறிரைம் பாடச் சொன்னால் எப்படிப் பாடுவார்களோ அது போல அங்குமிங்கும் பொறுக்கிப் பாடப்பட்ட பாடலாகவே இருக்கிறது. இது போன்ற பாடல்கள் பல இப்பொழுது உலா வரத் தொடங்கிவிட்டன. தமிழ் மொழி மேல் ஏனிந்தக் கொலை வெறிடா..? என்றொரு பாடலும் வெளிவந்திருக்கின்றது. நல்ல நல்ல பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த எங்களுக்கு இப்படியான பாடல்களையும் கேட்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக் கின்றது. இசை என்று பார்க்கின்ற போது எந்த இசையாக இருந்தாலும் அதை ரசிக்கிற நல்ல ரசிகர்களாக நாங்கள் இருந் தாலும் எங்கள் மொழி சிதைக்கப்படுகின்றதே என்று நினைக்க வேதனையாகவும் இருக்கின்றது. இந்தப் பாடலின் வெற்றிக்குக் கலப்புமொழியும், இலகுவான இசையும், கடவுளும்தான் காரணம் என்று இந்தப் பாடலின் இசையமைப்பாளர் அனிருத் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். புலம் பெயர்ந்த மண்ணில் எங்கள் மொழியைக் காப்பாற்ற நாங்கள் பகீரதப் பிரயத்தனம் செய்யும்போது இவர்களைப் போன்றவர்கள் கண்ணை மூடிக்கொண்டு ஒரே நொடியில் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து விடுகிறார்கள். வெகுவிரைவில் தகாத வார்த்தைகள் என்று நாம் தவிர்க்கும் வார்த்தைகளைக் கொண்டே பாடல்கள் உருவாக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. திரும்பத் திரும்ப இந்தப் பாடலைக் கேட்ட மயக்கமோ என்னவோ, என்னதான் சொன்னாலும், என்னையறியாமலே வை திஸ் கொலைவெறிடி என்று என் வாய் முணுமுணுப்பதை இப்போ என்னாலும் உணர முடிகின்றது. ஏன் நீங்கள்கூட மெல்ல முணுமுணுப்பதை என்னால் கேட்க முடிகிறது. வை திஸ் கொலைவெறிடீ..?

-குரு அரவிந்தன் பக்கம்



தமிழர்களின் மத்தியில் உதிரிப்பாகங்களின்
உன்னதமான இடம்...
MIDLAND & LAWRENCE
AUTO
PARTS
PARTSOURCE
The Parts. The Pros. The Price.
2650 Lawrence Ave. East, Toronto, ON M1P 2S1
416-751-2229
$ 30* மேல் கொள்வனவு செய்வோருக்கு $10 கழிவு தரப்படும்...
இச்சலுகை கூப்பனோடு வருபவர்களுக்கு இந்த முகவரியில் மட்டுமே வழங்கப்படும்.
* Before Tax *Condition may apply.

கலைவாணி

# இன்று இதயங்களின்

பானு தனது வேலையை முடித்துவிட்டு அலுவலகத்தின் வாசலில் கையில் ஒற்றை ரோஜாவுடன் காத்திருக்கிறாள்... சே என்னடா வாழ்க்கையிது... இண்டைக்கும் லேற்றா... என்று சலிக்கும் முன் செல்போன் அடித்தது. "பிளீஸ்...என்னால இண்டைக்கு பிக்கப் பண்ண வரமுடியாது.. பஸ்ஸில வாரும்...." என்றான் கதிர். பிறகென்ன ஒற்றை ரோஜா குப்பைத் தொட்டியில் மரணித்தது...கொதிப்புடன் பஸ்ஸுக்காக நடக்க ஆரம்பித்தாள். "இண்டைக்கு வீட்டில கவனிக்கிறன்..." அவள் மனம் கறுவிக்கொண்டிருந்தது.

சே... நாங்கள் காதலித்த நேரத்தில் காதலர் தினம் எப்படியெல்லாம் கழியும். அந்த நாளில் எத்தனை தடவை ஒருத்தரை ஒருத்தர் பார்ப்பதற்காக அலைவோம். எத்தனை தடவை போன் பண்ணி கதைப்போம். காதல் பரிசுகளை அள்ளி அள்ளி பரிமாறுவோம்... ம்... இப்போதெல்லாம் போன்ல கூட கதைக்கிறதில்லை.. அவரவர் அலுவல்கள் அவரவர் பிஸி... விழித்தால் மறுநாள் வந்துவிடுகின்றது.

'கதிரின் அழகை ரசிச்சு எத்தனை நாளாச்சுது. அவன்ர அடர்ந்த தாடியை வருடியபடி மிகவும் குளோசப்பில் ஒவ்வொன்றாக ரசித்து எவ்வளவு காலமாகி விட்டது. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது இது தானா... திருமண வாழ்வின் சுவாரஸ்யமே இது தானா...'

கவலையுடன் வீட்டுக்கதவைத் திறந்த பானுவுக்கு வீட்டில் இருந்து வந்த மல்லிகை மணம் சற்று கிறங்க வைத்தது. Dim light வெளிச் சத்தில் இதமாக ஒரு பாடல் மிதந்து வந்தது "அழகே... அழகே...தேவதை......."

இனிமையான சூழல் அவள் மனதை கிறங்க வைத்திருந்தது. ஹாய் என்றபடி அமைதியாக வரவேற்றான் கதிர். திருமணத்திற்கு பின்னரான 3 வது காதலர் தினம் இது... உனக்கு ஒரு சின்ன சேர்ப்பிரைஸ்... அவ்வளவு தான்... என்றவன் முதல் இரவின் ரொமாண்டிக் செட்டப்புகளை பல மடங்குகளாக அரங்கேற்றி இருந்தான். கையில் ஒரு ஒற்றை ரோஜா கூட இல்லாமல்... தவித்துப் போனாள் பானு.

காதலர் தினம்... Valentine Day... காதலைப் பரிமாறும் உள்ளங்களுக்குக் கிடைத்த ஓர் அற்புதமான நாள். மேற்கத்திய நாடுகளில் வளர்ந்து இன்று உலகம் முழுவதும் பரந்து அன்பு உள்ளங்களுக்கு அரவணைப்புக் கொடுத்துவருகின்றது...

காதலன்-காதலி, கணவன்-மனைவி மற்றும் அன்பிற்காக ஏங்கும் உள்ளங்கள்... என்று நெஞ்சிலே நேசங்களை வளர்த்துக் கொண்டவர்கள் பரிமாறிக்கொள்ளும் மையல் கொண்ட இதயங் களின் வசந்த தினம்.

பெப்ரவரி தொடங்கியவுடன் எங்குபார்த்தாலும் சிவப்பு நிறமும், காதலின் சின்னமும் தான் கண்ணில் தென்படும்.



# தனிமைக்கு விடுமுறை!

காலில் போடும் செருப்புத் தொடங்கி கை துடைக்கும் Paper towel வரை காதலர் தின வைரஸ் தான்.

இவ்வுலகை அன்புடன் அரவணைக்கும் இந்தக் காதலர் தினம் எப்படி நடைமுறையில் வந்தது.

Valentine Day பற்றிப் பல வரலாறுகள் உள்ளன ஆனால் இது கொஞ்சம் சுவையானது.

கிறிஸ்துவுக்குப் பின் 269 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரோமாபுரியை ஆண்டுவந்த ரோமானியச் சக்கரவர்த்தி கிளாடிஸ்- II இன் கோமாளித்தனமான அரசாட்சியில், இராணுவத் தேவையின் காரணமாக திருமணங்கள் யாவும் ரத்து செய்யப் பட்டன. ஆண் பெண் சந்திப்பிற்கு தடை விதிக்கப்பட்டது. இதன்மூலம் ராணுவத்திற்கு ஏராளமான ஆண்கள் சேர்ந்து விடுவார்கள் என்ற மூர்க்கத்தனமான கட்டளையால் ரோமாபுரியே சோகத்தில் கண்ணீர் வடித்தது.

இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட இரு மன இணைப்பை முற்றாக அறுத்தெறிந்தது அநியாயம் என்று கொதித்தெழுந்த பாதிரியார் தான் Valentine. அரச கட்டளையையும் மீறி பல இதயங்களை இரகசியமாக ஒன்று சேர்த்து வைத்தார். இவரின் இந்த இரகசிய திருமணங்களை ஒற்றர்கள் மூலம் அறிந்த அரசன் வலன்டைனை கைது செய்து சிறையில் அடைத்தான். மரண தண்டனை நாளும் அறிவிக்கப்பட்டது. அவர் சிறையில் இருந்த சில காலங்களில் அங்கே சந்தித்த சிறைக் காவலர் ஒருவரின் பார்வை இழந்த மகள் அஸ்டோரியஸுக்கும் வலன்டைனுக்கும் இடையே காதல் மலர்ந்தது. மரணத்தின் வாசலில் நின்றுகொண்டிருந்த வலன்டைனை விடுவிக்க முயன்றாள் அஸ்டோரியஸ். இதைக் கேள்விப்பட்ட சிறைக்காவலர் தனது மகளை வீட்டில் அடைத்து வைத்து வெளியே செல்ல தடை விதித்தார்.

இதை அறிந்த வலன்டைன் "From Your Valentine..." என்று ஒரு கவிதை எழுதி அனுப்பினான். அவளுக்கு அவனுடைய கவிதை கிடைத்தபோது வலன்டைனின் தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தது. இது நடந்தது கிறிஸ்துவுக்கு பின் 270 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி என நம்பப் படுகின்றது.

அரச கட்டளையை மீறி காதல் நெஞ்சங்களை இணையவைத்து தன் உயிரை தியாகம் செய்த வலன்டைன் ரோமாபுரி மக்களின் காதல் தெய்வமாக கருதப்பட்டார். இதன் பின்னர் கி.பி. 496 ஆம் ஆண்டு வலன்டைனை ஒரு புனிதராக போப் பாண்டவர் ஜெலாசியஸ்-I அறிவித்தார். அன்றில் இருந்து இந்த Valentine day காதலர் தினமாக கொண் டாடப்பட்டு வருகிறது.

நாங்களும்
கொண்டாடுவோம்!




உங்கள் இல்லங்களை அழகுபடுத்திட
அனைத்து விதமான கிரனைட் வேலைகளுக்கும்!
KAJA
Granite
Kitchen Counter Tops & Vanity Taps
Bar Tops, Furniture Tops
Showers Base & Enclosures
Fire Places & Monuments
And much more....
Tel: 647 404 5571 / 416 723 5571

- கிருஷாந்தி மதிவதனன்

# கருப்பை



மனித உறுப்புகளில் மகத்துவம் நிறைந்தது, கருப்பை. பெண் இனத்திடம் மட்டுமே இருக்கும் ஆக்க சக்தியின் அற்புதம் இது!

கிட்டத்தட்ட முக்கோண வடிவத்தில் மேல் பகுதி விரிந்தும், கீழ் பகுதி குறுகியும் காணப்படுகிறது. 8 முதல் 9 செ.மீ. நீளம் கொண்டது. கருப்பையின் வாய்ப் பகுதி பெண் உறுப்பில் இருந்து தொடங்குகிறது. கரு தங்குவதற்கு முன்னால், கருப்பையை தொட்டுப்பார்த்தால் நமது மூக்கைத் தொட்டால் எப்படி இருக்குமோ அதுபோல் சற்று கடினமாகத் தெரியும். கரு தங்கி வளரத் தொடங்கிய பின்பு தொட்டுப்பார்த்தால் நமது உதடுகளைத் தொடுவது போன்று மென்மையாக உணர முடியும்.

கருப்பை தசைகளால் ஆனது. அதன் உள்ளே ரத்தக் குழாய்களால் ஆன மெத்தை போல் எண்டோமெட்ரியம் உள்ளது. சினைப் பையில் இருந்து சினை முட்டை முதிர்ந்து - வெடித்து - வெளியேறி கருக்குழாயில் உயிரணுவை சந்தித்து, அங்கேயே கருவாகி, அது சில ரசாயனங்களை வெளிப்படுத்தும். அந்த ரசாயன மாற்றங்களால் கரு நகர்ந்து, 5-வது நாள் கருப்பைக்குள் சென்று, அங்கேயே ஒட்டி வளரத் தொடங்கிவிடும். கருவை வளர வைப்பது எண்டோமெட்ரியத்தின் வேலை. முதலில் சிறிதாக இருக்கும் எண்டோமெட்ரியம், பின்பு வளர்ந்து 9 மி.மீ. அளவை எட்டும்.

வயதுக்கு வந்த எல்லா பெண்களுக்கும் மாத விலக்குக்கு முந்தைய நாள்வரை எண்டோமெட்ரியம் வளர்ந்து கொண்டுதான் இருக்கும். உடலுறவு நிகழ்ந்து உயிரணு சென்று- சினை முட்டையும் வெளியேறி வந்து- இரண்டும் சந்தித்து கருவாக்கத்திற்கான செயல்கள் நிறைவேறா விட்டால் இந்த எண்டோமெட்ரியத்திற்கு கருப்பைக்குள் வேலையில்லை. அதனால் அது வெடித்து வெளியேறும். இதுதான் மாத விலக்கு உதிரம். (கருவாக்கம் நிகழ்ந்தால் எண்டோமெட்ரியம் கருவை வளர்க்கத் தொடங்கிவிடும்) மாதவிலக்கு உதிரம் 200-300 மி.லி. அளவில் 2-3 நாட்களாக வெளியேறிக் கொண்டிருக்கும்.

'மாதவிலக்கு காலத்தில் தம்பதிகள் உறவு வைத்துக்கொண்டால் ஜன்னி வந்துவிடும்' என்ற கருத்து தவறானது. பெரும்பாலான பெண்களுக்கு மாதவிலக்கு காலத்தில் ஏற்படும் ஹார்மோன் செயல்பாடுகளால் செக்ஸ் உணர்வு மிகுதியாகும். அப்போது செக்ஸ் வைத்துக் கொள்வது பெண்களுக்கு மகிழ்ச்சியை தருவதோடு, அந்த நேரத்தில் சுரக்கும் என்டார்பின் ஹார்மோன் வலி நிவாரணியாக மாறி, மாத விலக்கு கால வலியையும் குறைக்கும். அதனால் கணவன், மனைவி இருவரும் விரும்பினால், சுகாதாரமான முறையில் உடலுறவை மேற்கொள்ளலாம். (மாதவிலக்கு கால உறவால் கர்ப்பம் ஏற்படாது)

மாதவிலக்கு உதிரப்போக்கு அதிக நாட்கள் தொடர்வதும், ஒரே நாளில் வந்து நின்று விடுவதும் குறைபாடுதான். சிகிச்சை மூலம் அதற்கு உடனடியாக தீர்வு கண்டிட வேண்டும்.

கருப்பை வளரும் தன்மை கொண்ட திசு. உள்ளே தங்கும் கரு வளர வளர கருப்பையும் வளரும். இரண்டு, மூன்று குழந்தைகளை தாங்கும் சக்தியும் அதற்கு இருக்கிறது. கரு, திசுவாகி - குழந்தையாக வளர்ந்த பின்பு கருப்பைக்குள் ஏற்படும் ரசாயன மாற்றங்கள், அதனை சுருங்கவைத்து குழந்தையை வெளியே தள்ளுகின்றன. இதுவே பிரசவத்திற்கான தூண்டுதலாகும்.

கருப்பையில் ஏற்படும் பாதிப்புகள் என்னென்ன தெரியுமா?

- எண்டோமெட்ரியம் பாதித்து கருப்பையில் காச நோய் தோன்றலாம்.
- தாய் வயிற்றுக்குள் இருக்கும்போதே பெண் சிசுவுக்கு கருப்பை உருவாகி விடும். முதலில் அது மாட்டுக்கொம்பு போல் இரண்டு டியூப் ஆக உருவாகி, வளர்ந்து இணையும். அதன் உள்ளே பள்ளமான பகுதியும் தோன்றும். ஒரு பக்கம் மட்டும் மாட்டுக்கொம்புபோல் வளர்ந்திருந்தாலோ, போதுமான வளர்ச்சியின்றி இருந்தாலோ, அளவில் சுருங்கி பிறவியிலேயே குறைபாட்டுடன் இருந்தாலோ அது பாதிப்பிற்குரிய அம்சமாகும். இத்தகைய பாதிப்பு கொண்ட பெண்களுக்கு திருமணமாகி, குறைவற்ற முறையில் உடலுறவு நிகழ்ந்தாலும் தாய்மையடைய முடியாத சூழல் ஏற்படும்.
- கருப்பையின் வாய் எப்போதும் மூடியிருக்க வேண்டும். உயிரணு அதன் உள்ளே செல்லவும்- திரவம் வெளியே வரவும் மட்டும் வழியிருக்க வேண்டும். அதற்கு மாறாக கருப்பை வாய் திறந்திருந்தால் கரு உள்ளே தங்காமல், கலைந்து வெளியேறி விடும்.
- கருப்பையில் பைப்ராய்ட் போன்ற கட்டிகள் உருவானாலும் கருப்பை பாதிக்கப்பட்டு, தாய்மை தள்ளிப்போகும்.
- கருப்பை புற்றுநோய் தோன்றலாம்.
- கருப்பை வாயில் 'பாலிப்' எனப்படும் கட்டிகள் தோன்றலாம்.

பெண்களுக்கு தாய்மை தள்ளிப்போகும்போது கருப்பையில் பாதிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, அதற்கான நவீன சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

# 2012 ஆம் ஆண்டின் புதிய தொழில்நுட்பம்



## iPhone 5ம் அதன் வதந்திகளும்

iPhone பாவனையாளர்களை அதிகம் ஏமாற்றிய 4S அதன் ஐந்தாவது தலைமுறை கைத்தொலைபேசி வெளியீடு இந்த வருட நடுப்பகுதியில் வெளிவருமென மிகவும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தாமதம் நன்மைக்கே என்றே பலரும் கருதுகின்றனர். காரணம் அதிதொழில்நுட்பத்துடன் கூடியதாக வெளிவருவதற்கு இந்தத் தாமதம் உதவும் என்கின்றார்கள்.

iPhone 5 ஆனது, அகலமான திரையை, அதாவது 5 அங்குலத் திரையைக் கொண்டி ருப்பதோடு புதிய வடிவத்திலும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. iPhone 5 Quad-core processor ஐ கொண்டிருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது Apple A6 என்று அழைக்கப்படும்.




## ஐபாட் 3

iPad 1 மற்றும் 2 இன் வெற்றிக்குப் பின்னர் iPad 3 தொடர்பான எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளது.

iPad 3 புதிய quad core ARM -based processor - A6 தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கும். புதிய iPad 2048x1536 (9.7 அங்குலம்) கொண்ட நுண்ணிய திரையை அதாவது Samsung மற்றும் LD போன்றவற்றின் திரைகளைப் போல இருக்கும். இந்த ஆண்டு இறுதியில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய iPad NFC (Near Field Communication) தொழில்நுட்பத்தைக் கொண்டிருப்பதோடு 128 GB storage உம் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.





## The Dell Peju Windows 8 Tablet

### Dell Peju windows 8 revealed pic (may not be accurate)

இந்த ஆண்டில் எதிர்பார்ப்பினை அதிகரித்திருக்கும் மற்றுமொரு தொழில்நுட்பம். Microsoft மற்றும் Dell ஆகியவற்றின் நீண்டகால இணைப்பு பயனுள்ளது என்பதை வெளிப்படுத்தியிருக்கும் புதிய விண்டோஸ் டப்லெட் கணனி Dell Peju Windows 8. இதன் தொழில்நுட்பம் தொடர்பாக பின்வரும் வதந்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன.

- Windows 7 pro operating system is also compatible with Windows 8
- CPU features an Intel Core i5 processor
- 5 megapixel back camera and 1.3 mega pixel front camera
- 10.1 inch wide-angle display
- Slots or ports with support for two USB, HDMI, audio, Mini VGA, microSD and 3GSIM
- 5500 mAh battery that supports 6-8 hours battery backups
- 4GB memory card
- Storage capacity of 64-GB or 120-GB SSD
- Connectivity : Bluetooth, 4G, 3G, WiFi with b/g
- Input systems : Bluetooth, USB keyboard, Stylus and Touch





## விண்டோஸ் 8 தொடர்பான ஊகங்கள்

பல ஆண்டு காலமாக விண்டோஸ் ஒபரேட்டிங்சிஸ்டமே பொதுவாக பாவிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக விண்டோஸ் 7இன் வெற்றிக்குப் பின்னர் விண்டோஸ் 8 தொடர்பாக எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளதோடு பல புதிய சிறப்பம்சங்களையும் இது கொண்டுள்ளது,

புதிய தொடுதிரை தொழில் நுட்பம் கொண்டதாகவும், வழக்கமான பயன்பாடும் இணைந்ததாகவும் விண்டோஸ் 8 அமையும். இந்த சிஸ்டம் ஏ.ஆர்.எம். மற்றும் இன்டெல் சிப்கள் என இரண்டு வகை ப்ராசசர்களில் இயங்கும். தற்போது மைக்ரோசாப்ட் தரும் ஆன்லைன் வசதிகளான ஸ்கை ட்ரைவ், ஆபீஸ் 365 மற்றும் இலவச ஆபீஸ் இணைய அப்ளிகேஷன்களை ஒருங்கிணைப்பதாக அமையும். மற்ற சிறப்பு அம்சங்களாக, யு.எஸ்.பி.3 சப்போர்ட் மற்றும் மாற்றி அமைக்கப்பட்ட விண்டோஸ் எக்ஸ்புளோரர் தொகுப்பினைக் கூறலாம்.

Rajan Kanagasabai (M.Eng)



நல்ல வேலை வாய்ப்பினைப்
பெற்றுக்கொள்ள...
JRS COLLEGE OF BUSINESS
AND HEALTH CARE INC.
Committed to provide quality training
OTHER TRAINING
Food Service Worker
Bank Teller
Food Handling
Cashier
Tax Class
* We offer free computer basic class every month
Tel : (416) 292-2455
DIPLOMA COURSES
Personal Support Worker
Accounting & Payroll Administration
Office Assistant
Computerized Accounting
Health Office Administrator
*Some courses are not available in Etobicoke Campus
Etobicoke Campus
(Dundas & Kipling)
300-5359 Dundas Street West,
Etobicoke, ON, M9B 1B1
Tel: (416] 207-9975
Scarborough Campus
(Finch & Midland)
330-4168 Finch Ave. E.,
Scarborough, ON M1S 5H6
Tel: (416) 292-2455 Fax: (416) 292-4255





ஒளவையார் மற்றும் திருவள்ளுவர் உருவம் பொறிக்கப்பட்ட

**தங்கக் காசுகளை**

உங்கள் தாலிக்கொடிகளில் வடிவமைத்துப் பொருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள்...

பரம்பரை நகைத்தொழில் அறிவும் பல வருட அனுபவமும் உள்ளவர்களின்
கைவண்ணத்தில் நகைகள் உருவாக்கப்படுகின்றன.

**இந்து மற்றும் கிறிஸ்தவ முறையிலான தாலிக்கொடிகள் செய்து தரப்படும்.**

# Aksha
## Jewel shop

1350, Ellesmere Road,#2, Toronto, ON. M1P 2X9 [Brimley & Ellesmere]

**Tel: 647 35 AKSHA [647-352-5742], 416 801 6134**

**E-mail : akshajewels@hotmail.com / www.akshajewel.com**

உங்கள் எண்ணம்போல் தங்கநகை உருவாக்கும் எம் கைவண்ணம் காண வாரீர் !

# மகள் வாராளோ... மா வாராதே...

வேலியில் சிரிக்கும் செவ்வரத்தை தான் பெற்றுப் பரிவோடு வளர்த்த தன் மூத்த மகளை நினைவுபடுத்த அந்தத் தாய் காலையில் எழுந்ததும் வீட்டு வாசலை நோக்கி ஓடுவதும் கண்ணீர் சொரிவதும் “என் மகள் வாராளோ….. என் மகள் வரவில்லையே” என ஏங்கிப் புலம்புவதும் காண்போர், கேட்போர் மனங்களில் துன்பத்தை விளைவிக்கும் செயலாக உள்ளது.

வறியவன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டாள் அத்தாய். எனினும் அயரா முயற்சியுடன் தன் குடும்பத்தை உயர்த்தத் தன்னாலான வரை பாடுபட்டாள். தன் சிறிய வளவுக்குள் தன் வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களில் சிலவற்றை உற்பத்தி செய்வாள். முற்றத்துச் சிறு காணியில் குரக்கன் கதிர்கள் தலையாட்டும் அழகை அவள் மட்டுமல்லாது ஊரவரும் பார்த்து மகிழ்வுறுவர். மிளகாய், வெங்காயம், மரவள்ளி, இராசவள்ளி, தக்காளி, அவரை, பயிற்றை, பூசனி, புடோல் போன்றவற்றையும் சிறிய சிறிய அளவில் பயிரிட்டுப் பிறரிடம் கையேந்தா வகையில் தன் கணவனையும் தன் பிள்ளைகளையும் இணைத்துக் குடும்ப நிலையினை அவர்களுக்கும் உணர்த்தி அவர்களையும் முயற்சி உடையோராய் ஆக்க முனைந்து நின்றாள்.

அழியாச் செல்வமாகிய கல்விச் செல்வம் தன்னை முழுமையாக அடையா நிலையை எண்ணி வருந்தியவளாய், தனக்குப் பிறந்த பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வம் கலையாச் செல்வமாகிட வேண்டுமென்று கணமும் உழைத்தாள். அவளின் விருப்பப்படியே மூத்த மகளும் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டினாள். சேவலின் கூவலில் துயில் கலைத்து, குயில் கூவும் ஓசையில் மனம் நனைத்து, மலரும் மலர்களில் மணம் நுகர்ந்து, செஞ்சுடரோன் விரிக்கும் கதிர் கண்டு, தோட்டத்துப் பயிரைக் கொத்த வரும் கிளி, மைனா, போன்றவற்றோடு மனமொன்றி, தாய் வளர்க்கும் கோழி, ஆடு, மாடு போன்றவற்றோடு உறவாடியும் இன்பத்தை அன்றாடம் நுகர்ந்த வண்ணம் வளர்ந்தாள்.

தன் வீட்டுக்கண்மையில் உள்ள ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வந்தவள், அவ்வாலயத்தில் நடைபெறும் பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி, பண்ணிசைப் போட்டி போன்றவற்றில் பங்குபற்றித் தன் ஆளுமையையும் வளர்த்துக் கொண்டாள். தனக்குக் கீழுள்ள சகோதரர்களுக்கும் கல்வி கற்பதற்கும் அன்றாடக் கடமைகள் செய்வதற்கும் உதவியாய் இருந்தாள். அரைவயிறும் நிரப்பாது தன் பிள்ளைகளை வளர்ப்பதற்காகப் பாடுபடும் தன் தாயின் துன்பத்தைத் துடைக்க வேண்டுமென உறுதி கொண்டவள் தூக்கமின்றிப் படித்தாள். பல்கலைக்கழகம் சென்றாள். பட்டம் பெற்றாள். வன்னியில் ஆசிரியப் பணியை மேற்கொண்டாள். பெற்ற ஊதியத்தில் தன் செலவைக் குறைத்து எஞ்சியதைத் தாய்க்கு அனுப்பினாள். நல்ல உடை, உணவு, உறையுள் இவையெல்லாம் தன்மகளால் தனக்குக் கிட்டுமென எதிர்பார்த்த தாய்... இன்று தன்மகள் மட்டும் தன்னிடம் வந்தால் போதுமென அங்கலாய்த்தவளாக, வன்னியில் மகள் மறைந்த உண்மை அறியாதவளாக... “ஊரார் எல்லோரும் வந்து விட்டார்கள். என் மகள் மட்டும் வரவில்லையே... என் மகள் வாராளோ” என ஏக்கம் தோய்ந்தவளாக வழி மீது விழிவைத்துக் காத்துள்ளாள்.

இத்தகு காட்சியொன்று சங்கப் புலவர் எருமை வெளியனார் உள்ளத்தையும் பாதித்து நின்றமையை அவர் பாடல் மூலம் அறிய முடிகிறது..

'மாவா ராதே மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன எம்இல்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வன் ஊரும் மாவா ராதே
இருபேர் யாற்ற ஒருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே' (புறம்.. 223)

குதிரை வாராதிருக்கின்றதே! ஏனைய மறவர் எல்லோருடைய குதிரைகளும் வந்து சேர்ந்து விட்டனவே. எம்மில்லத்திற்கு ஒரு புதல்வனைத் தந்த செல்வனாகிய என் கணவன் ஊர்ந்து சென்ற குதிரை மட்டும் வரவில்லையே. இரண்டு பெரிய ஆறுகள் கூடும் இடத்திலே சிக்கி விட்ட பெரிய மரம் போல இரண்டு பெரிய படைக்கும் இடைப்பட்டு அலைப்புண்டு வீழ்ந்து விட்டதோ? என்கிறது இப்பாடல்.

**இராஜ்மீரா இராசையா**



# Ontario Vegetarian Food Bank



## CERTIFIED FOOD HANDLERS

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handler Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



### Food Handler Training available for:

PSW's, Food service Workers, ECE / ECA Workers, Day Care Providers Dietry Aides, Cooks, Home Care Workers, Nannies, Restaurateurs.

*Financial assistance may be available to those who qualify

**CALL TO REGISTER : (416) 744 (HELP) 4357**

Winter Food and Fund Drive

"No One Should Go Hungry"

Started From Nov.15, 2010 Mar. 15, 2011

MALAN JOE, B.COMM(HONS), MBA.
CERTIFIED TRAINER.

**Help us to Help the Helpless!**

North York: 3005 Islington Ave. (Islington / Steeles) / Scarborough : B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

www.vegfoodbank.ca

மாவிலி மருதையன் எழுதும்




# மாத்தி யோசி

தன்நம்பிக்கைத் தொடர்

## திருப்தியுள்ள மனிதன் வெற்றி காண்பதில்லை!

நல்ல வேலை, கை நிறையச் சம்பளம், பரம திருப்தி. 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!

இந்தப் பழமொழி சில விடயங்களில் பொருந்தாது. ஒரு விடயம் நம்மிடம் இல்லையே என்று நினைத்து ஆதங்கப்படுவது தப்பில்லை. அதை அடைவதற்கு உழைக்கத் தயாராக இருக்க வேண்டும். திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். இதனால் மட்டுமே எமது முன்னேற்றம் சாத்தியப்படும்.

கிராமத்தில் ஒரு விவசாயி. கடுமையாக உழைத்து அன்றாடம் கிடைக்கும் கூலியில் செலவு செய்து நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். பக்கத்துவீட்டில் ஒரு வியாபாரி, மிகவும் பெரிய செல்வந்தன். ஆனால் நிம்மதி இல்லை.

செல்வந்தனுக்கு விவசாயி மீது பொறாமை. விவசாயியின் நிம்மதியைக் குலைக்க விரும்பினான். தனது பணத்திலிருந்து 99 தங்கக் காசுகளை எடுத்து ஒருநாள் இரவு விவசாயியின் குடிசைக்குள் வீசினான்.

மறுநாள் காலை தங்கக் காசுகளை எண்ண ஆரம்பித்தவனின் மகிழ்ச்சி தொலைகிறது. கூரையைப் பிரித்துக்கொடுத்த தெய்வம் 100 காசுகளாக கொடுத்திருக்க கூடாதா? என்று கவலைப்படுகிறான்.

இந்த விவசாயியிடம் போதுமென்ற மனம் இல்லை. நேற்றுவரை அவனிடம் ஒரு தங்கக் காசுகூட இல்லை. ஆனால் இன்று, இல்லாத ஒரு தங்கக் காசை நினைத்துக் கவலைப்படுகிறான்.

இந்த 99 காசுகளை கஷ்டப்பட்டு 100 ஆக மாற்றுகிறான். ஆனாலும் அவன் அதோடு திருப்திப்பட்டுவிடவில்லை. இருநூறுக்கு ஆசைப்படுகிறான். தொடர்ந்தும் கஷ்டப்பட்டு உழைக்கிறான். பணக்காரனாகிறான்.

ஒரு விடயத்தை நாம் அடைவதற்குரிய தகுதியும் திறமையும் எனக்கு உண்டா? இதையெல்லாவற்றையும்விட முக்கியமான கேள்வி அதற்கான தேவை எனக்கு இருக்கிறதா?

உலகெங்கும் உள்ள பல மேலாண்மை நிபுணர்கள், சிந்தனை யாளர்கள் மற்றும் தத்துவ அறிஞர்களெல்லாம் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிற விடயம் 'நம்முடைய முன்னேற்றத்திற்கு முக்கியமான எதிரி மோசமான செயற்பாடுகள் அல்ல. நல்ல செயல்பாடுகள்தான்.'

'ஆஹா! நாம் இத்தனை நன்றாகச் செயல்படுகிறோமோ' என்று மகிழ்ச்சியடைவது அல்லது திருப்தியடைந்து விடுவதுதான் தவறு. அது நம்முடைய முன்னேற்றத்தைத் தடுத்து விடுகிறது அல்லது வேகத்தைக் குறைத்துவிடுகிறது.



அதி நவீன வசதிகளுடன் கூடிய
வாகனத் திருத்தகம்...
Ideal Auto Tech
IDEAL AUTO TECH
For all your domestic and import vehicle repairs and services
All Mechanical Serviced - Body & Paint Works - Muffler & Tire Works
Engine & Transmission Repairs - Air Condition - Towing Services
1600 Midland Ave., Scarborough, ON M1P 3C2
Tel: 416-752.LUBE (5823) Cell: 647-219-5922 Fax: 416-752-0457 www.idealautotech.com




RAJEE
BEAUTY SALON
Ladies Hair Cut $10.00 (WITH THIS COUPON)
Men Hair Cut $10.00 (WITH THIS COUPON)
Threading $3.00 (WITH THIS COUPON)
Ladies, Gents & Kids Hair Cuts
Clipper Cut | Hair Oil Massage | Hair Colour Black
Fashion Colour | Highlighting
Layer Cut | Step Cut | U Cut | V Cut
Hair Oil Massage | Hair Colour Black | Fashion Colour
Highlighting | Straitening Permanent | Hair Ironing
Hair wash with Conditional & Blow Dry | Facial | Pedicure | Manicure
Bridal Make-Up | Cake Icing Sugi - 647 938 6307
364 Main St. North, Markham (Markham & 16th Ave.) Tel: 905 554 2425

# கவிஞர் திருமாவளவன் கவிதைகள்

"கொடிது கொடிது வறுமை கொடிது; அதனிலும் கொடிது இளமையில் வறுமை"

என்றாள் அவ்வை. அதனிலும் கொடிது எது எனக்கேட்டால் "நடுத்தரவர்க்க சூழலில் வறுமை" என்பேன் நான். திருமகளின் கடைக்கண் பார்வை விழவில்லை. அவள் என்னைப் பார்க்க விரும்பாதவள் போல மறுபக்கம் முகத்தை திருப்பிக் கொண்டாள். வறுமையின் இருள் முழுவதுமாய் என்னைப் போர்த்தியிருந்தது. பதினைந்தாவது வயதில் என் தந்தை வாழ்வு முடிந்தது. வீட்டிலே மூத்தவன் நான். இது நிகழ்ந்தது சிறீமாவோ அம்மையார் ஆட்சிக்காலத்தில். மேலும் சொல்லவா வேண்டும்?. அக்கால சூழலில் வாழ்ந்தவர்களுக்கு அத்துயரம் தெரியும். ஒரு ரூபாவிற்கு விற்ற அரிசி அடுத்த பதினைந்து நாட்களில் பதினைந்து ரூபாவைத் தாண்டியது. வீட்டுமுற்றத்தில் கூட மரவள்ளிக்கட்டையை நாட்டி வயிற்றைக் கழுவிய காலம். அக்காலத்தில் எங்களுக்கு ஆதாரமாக இருந்தது பற்றையிலை வகைகள்தான். சிறு துண்டு மரவள்ளிக் கிழங்கும் ஒரு சிறங்கை அரிசியுமிருந்தால் போதும்... அது குறுநெல் அரிசி என்றால்கூட காரியமில்லை. பற்றை இலைகளுடன் சேர்த்து கஞ்சியாக்கிவிடுவாள் அம்மா. அதன் சுவை இன்றும் என் நாவில் தேங்கிக்கிடக்கிறது.

வறுமைக்குள் வடுப்பட்ட வாழ்வு. முடிய துர்காதேவி உருக்கொண்டாள். வேள்வி தொடங்கியது. அதனுள் அலைந்துழலும் வாழ்வு. ஒருபடி போருக்குள் தப்பி ஓடி கனடாவில் கரை ஒதுங்கினேன்.

ஒரு மதியம். உணவு மேசையில் நண்பர்களுடன் குந்தினேன். ஊர் நிலவரத்தில் தொடங்கிய பேச்சு திடீரென கீரை மற்றும் இலைவகைகள் பற்றித் திசைமாறியது. முதலில் வெங்காயத் தோட்டத்துள் களையாக வளரும் தொய்யில் கீரையில் தொடங்கியது உரையாடல். அது அறக்கீரை, முளைக்கீரை. மணிக்கீரை. முறிகீரை. பனங்கீரை. சாறணை. தயிர்வாழை பயிரி என வளர்ந்து முசுட்டை கொவ்வை தூதுவளை மொசுமொசுக்கை பிரண்டை எனப் பற்றையிலே பற்றிப்படர்ந்து பின் முல்லையிலை, முருங்கையிலை, சண்டியிலை, வாதநிவாரணி, அகத்தியிலை என மரத்திலேறியது.

"இவ்வளவு பேசுகிறீர்களே இவற்றை எங்காவது ஒரு கவிதையில் பதிவு செய்திருக் கிறீர்களா?" என்றான் நண்பன். சாப்பாட்டு முடிய உரையாடலும் முடிவுக்கு வந்தது. பின் அதை மறந்தும் விட்டேன்.

வேனில் முடிய பின் இலையுதிர் காலம் கழிந்து பனிபொழிகாலம் வந்தது. மூன்று நாட்கள் பெரும் பனிப்புயல். வேலைக்குக்கூட போகமுடியவில்லை. வீட்டுக்குள் எல்லோரும் அடைந்து கிடந்தார்கள். மூக்கு ஒழுகத்தொடங்கிவிட்டது. புளிக்கஞ்சி காச்சினால் நன்றாயிருக்கும் என்றாள் மனைவி. அதற்குத் தோதாய் ஒரு இலைவகையும் கிடைக்கவில்லை. முடிவில் உறைகுளிர்ப் பெட்டியிலிருந்து முருங்கையிலை தந்தார்கள். வீடுவந்து கஞ்சி காச்சினேன். அம்மாவின் நினைவு வந்தது. அவள் பாரீஸ் வருவதற்காக புறப்பட்டவள் ஐந்து வருடங்கள் உகண்டா நாட்டில் முடங்கிப்போயிருந்தாள். வ.ஐ.ச ஜெயபாலனின் "விதிக்குரங்கு பிய்த்தெறியும் பஞ்சுதலையணையா நாங்கள்" என்ற கவிதை நினைவுக்கு வந்தது.

அன்றிரவு எழுதிய கவிதைக்கு "பற்றையிலைக் கஞ்சி" எனத் தலைப்பிட்டேன். ஒருபடியாய் 1999தாம் ஆண்டுப் பின் பாதியில் அம்மா பாரிஸ் வந்திருந்தார். நான் அவ்வருட மார்கழிக் கடைசியில் அம்மாவைப் பார்க்கப் போயிருந்தேன்.

ஒருநாள் காலையில் தனிமையிலிருந்த போது 'என்ன நீ புத்தகம் எல்லாம் எழுதுகிறாயாமே! ஏன் எனக்கு விளங்காதே. கொஞ்சம் படிச்சுக் காட்டு' என்றார். அப்பொழுது தான் எனது முதல் தொகுப்பு 'பனிவயல் உழவு' வந்திருந்தது. அதிலிருந்து பற்றை இலைக்கஞ்சி கவிதையை படித்து முடித்துவிட்டு அம்மாவின் முகத்தையே பார்த்தபடி இருந்தேன். நீண்ட நேரம் மௌனம். கண்கள் கலங்கியிருந்தன. ஒரு பெரும்பாடு சிலுவை சுமந்த வலியை அவரது முகத்தின் ரேகைகள் பேசின. வலிமிகுந்த அவரது அந்த நினைவுகளை மீட்டிவிட்டேனோ என்ற தவிப்பு எனக்குள் எழுந்தது.

'ஏன் அப்பன் பழசையெல்லாம் எழுதுகிறாய்?'

அவரது முகத்தில் துயரம் கலந்த பெருமிதம் இருந்தது. அவருக்கு புது வாழ்வு கிடைத்து விட்டது என்ற நம்பிக்கை பிறந்திருந்தது. பழசுகளை மறக்க முயல்கிறார் என்பது புரிந்தது. என்னால் முடியவில்லை.

அதற்குப்பின் எனது எந்தக் கவிதையும் அம்மாவுக்கு படித்துக் காட்டியதில்லை.

## பற்றை இலைக்கஞ்சி

மூன்று நாட்கள் மூடிக்கிடந்தது வானம்
மழையும் குளிரும் காற்றும்
புணர
மூசிக் கொட்டிற்று வெண்பனி
முடங்கிக் கிடந்தனர் மனிதரும் உலகும்
சூத்திர ஒழுக்கில் ஒழுகிய
உடலில் பெரும் பிணியாய் படர்கிறது
ஓய்வு
கண்ணீரில் கரிக்கிறது உப்பு

இளமையை வறுமை மேய்ந்த காலை
வானம் உடைப்பெடுத்து பொழிகிறது மாரி
அடைமழை
வளவை நிறைத்திருக்கிறது வெள்ளம்
வயிற்றை நிறைத்திருக்கிறது
பசி

ஒழுக்கு வீட்டின்
திண்ணை மூலையில் ஒதுங்கியிருக்கிறோம்
பரணிற் கிடந்த தாய் மூடல் பெட்டியுள்ளே
எஞ்சியிருக்கிறது
ஒரு சிறங்கை அரிசி
மழை ஓய்ந்ததோர் துளிப் பொழுதுள்
எட்டி நடந்து
வெட்டை பற்றையில்
பற்றி
படர்ந்திருந்த
முசுட்டையிலை கொவ்வையிலை
மழைநீர்ச் சுமையில் ஒடிந்து விழுந்த
முற்றத்து முருங்கையில் உருவியெடுத்த
ஐந்தாறு முருங்கையிலை
இவற்றோடு
புளியின் சுவை சுண்டச்சேர்த்து
கஞ்சி காய்ச்சித் தருகிறாள் அம்மா
அடுக்களையில்
சுற்றி சூழ்ந்திருந்து பருகி மகிழ்கிறோம்
நானும்
என் இளவல்கள் நால்வரும்.

இன்று
இருண்ட கண்டத்தில் அவளறியாதோர்
மூலையில்
மூப்புப் பிணியோடு பார்த்திருக்கிறாள் அம்மா.
துருவப் பனிக்கொதுங்கி
சாளரத்து ஓரத்தில் காத்திருக்கிறேன் நான்.

இன்னமும் எதைவேண்டித் தொடர்கிறது
போர்.

# கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தமிழின் பழமை...

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி முகிழ்த தமிழ்'

தமிழின் பழமையையும் பெருமையையும் தெரியப்படுத்துவதற்காக நம்மவர்கள் கூறிக் கொள்வது மேலேயுள்ள வாக்கியத்தைத்தான். ஆனாலும் இது மிகைப்படுத்தப்பட்ட கூற்று எனச் சிலர் முணுமுணுப்பதையும் கேட்டிருப்பீர்கள். “கல், மண் தோன்று முன்னரே எப்படி உயிரினங்கள் தோன்றியிருக்கும்? புவியில் உயிரினங்களே தோன்றாத வேளையில் எப்படித் தமிழ் தோன்றியிருக்கும்?” எனக் கேட்பவர்கள் இருக்கின்றார்கள். “மற்றவர் இதைக் கேட்டால் பரிகாசிப்பார்களே' என அவதிப் படுபவர்களும் உண்டு. ஏன் இருக்கக் கூடாதா? என ஆய்வு செய்யும் மனப் பக்குவம் இவர்களிடம் இல்லாததினாலேயே இவர்கள் இப்படிக் கேட்கின்றார்களோ? என எண்ணத் தோன்றுகின்றது.

புவியில் உயிரினங்கள் எவ்விதம் தோன்றின என்பதில் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. அதிலும் மனிதர்கள் இப்புவியில் எவ்விதம் தோன்றினார்கள், அல்லது பூமிக்கு எப்படி வந்தார்கள் என்பதில் கூடப் பல விஞ்ஞான விளக்கங்கள் உள்ளன. மூன்றாம் தலைமுறை விண்மீனான நமது கதிரவன் தோன்றிக் கிட்டத்தட்ட 450 கோடி (4.5 பில்லியன்) வருடங்கள் ஆகிவிட்டன. கதிரவனுடன் சேர்ந்தே புவி உட்பட அதன் எல்லாக் கோள்களும் தோன்றிவிட்டன. கதிரவன் தோன்றும் முன்னரே அதாவது, புவி தோன்றும் முன்னரே பல விண்மீன்களும் அவற்றின் கோள்களும் தோன்றியிருந்தன. விஞ்ஞானிகளின் கருத்துப்படி, அவற்றிற் சில கோள்களில் உயிரினங்களும் தோன்றியிருக்கலாம். தோன்றிய உயிரினங்களில் சில கிட்டத்தட்ட மனிதரை ஒத்ததாகக் கூட இருக்கலாம். பல கோடி ஆண்டு விஞ்ஞான வளர்ச்சியைக் கொண்ட அவற்றின் அறிவியல் நிலை அபரிமிதமானதாக இருக்க வாய்ப்புண்டு. ஏதோ சில காரணங்களினால் அவர்களது கோள் அழிந்து போக, அவ்வழியில் இருந்து தப்பிப் பிழைத்து விண்வெளியிற்கு ஓடிவந்தவர்களில் ஒரு குழுவினர் வந்தடைந்த இடம்தான் பூமி எனச் சிலர் கூறுகின்றார்கள். அப்படியாக வந்தவர்கள் கொண்டுவந்த மொழிதான் தமிழ் என்றால், 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி முகிழ்த தமிழ்' என்பதில் அர்த்தம் உண்டல்லவா! இன்னொரு விளக்கத்தினையும் கொடுக்கலாம்.

நமது புவியில் சடம் - சக்தி இணைப்பின் பரிணாமத்தால் உயிரினம் தோன்றி, மனிதர்களும் ஊசலாடத் தொடங்கிவிட்டார்கள். ஆதிமனிதர்களாகிய அவர்களிடம் பண்பட்ட மொழி வழக்கு இருந்திருக்காது. இந்நேரத்தில் எமது பூமியானது வேற்றுக்கிரக மனிதர்கள் பார்வையில் பட்டிருக்க வேண்டும். இந்த வேற்றுக்கிரக மனிதர்கள் பூமி தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய விண்மீனின் கோளில் வசிப்பவர்கள். புவியில் தரையிறங்கிய அவர்களின் விண்கலத்தில் இருந்து வந்திறங்கியவர்கள் அல்லது வந்திறங்கிய ஒருவர் பூமியின் ஒரு பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு, தொடர்பாடலுக்காக கற்பித்த மொழிதான் 'தமிழ்' என இருந்தால் கொடுக்கப்பட்ட வாக்கியம் சரியானதாக இருக்கலா மல்லவா.

பொதிகை மலையில் இருந்து வந்து, சிவனின் அறிவுறுத்தலின்படி, தமிழை எமக்கு குறுமுனி அகத்தியர் கற்பித்தார் என்பார்கள். அவரது உருவத்தையும், வருகையையும் கொஞ்சம் விரிவுபடுத்திப் பாருங்கள். அத்துடன் வானில் உள்ள விண்மீன் ஒன்று அகத்தியரின் பெயரால் குறிப்பிடப்படுவதும் எமக்குத் தெரியும். அவ்விண்மீனின் ஒரு கோளிற்கு அகத்தியர் திரும்பிச் சென்றிருக்கலாம். அதனால்தான் அவ்விண்மீன் அவரது பெயரில் அழைக்கப்படுகின்றதோ! இவற்றுடன் சேர்த்துப் பார்க்கையில், 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி முகிழ்த்த தமிழ்' எனக் கூறிக் கொள்வதில் வெட்கப்படவோ அல்லது பெரிதாக அலட்டிக்கொள்ளவோ தேவையில்லையல்லவா. இதையிட்டுக் கேட்பவர்களுக்குக் கூட பதில் கொடுக்கக் கூடியதாகவும் உள்ளதல்லவா. இப்படியான சொற்தொடர் இன்னொரு மொழி யினரிடம் இருந்திருந்தால் இதனையேதான் அவர்கள் கூறுவார்கள்.

ஆபிரிக்காவில் வாழும் ஆதிக்குடிகளில் ஒரு குழுவினர் டோகன் (Dogon) இவர்கள். சைரஸ் A, சைரஸ் B. என்ற சோடி விண்மீன் தொகுதியைக் காட்டி, அந்த விண்மீன் தொகுதியில் இருந்து வந்தவர்கள் தங்களுக்கு பல வானியல் விபரங்களை பல ஆயிரம் ஆண்டு முன்னரே கற்பித்தார்கள் எனக் கூறுகின்றார்கள். இந்த ஆபிரிக்க ஆதிக்குடிகளுக்கு கற்பிப்பது போன்றே புவியின் பல பகுதிகளுக்கும் வேற்றுக் கிரக மனிதர்கள் வந்து புவியின் மாந்தருக்கு பல விடயங்களைக் கற்பித்து இருக்கலாம் என ஏலியன்கள், UFO எனும் பறக்கும் தட்டுகள் பற்றி ஆய்வு செய்பவர்கள் கூறுகின்றார்கள். டோகன் பழங்குடியினருக்கு பரம்பரை பரம்பரையாக கடத்தபட்ட அபரிமிதமான வானியல் அறிவு போன்றே எங்கள் தமிழும் வேற்றுலகவாசிகளால் கொடுக்கப்பட்டு இன்றுவரை வந்திருக்கலாம். இப்படியாகப் பார்த்தால் 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி முகிழ்த்த தமிழ் என்பதும் கருத்துடையது போலாகின்றதல்லவா!

மில்லியன் ஆண்டு முன்னராக மனிதக் குரங்கிலிருந்து கூர்ப்படைந்து வந்த ஹோமோ சேபியன்(homo sapiens)களாகிய மனித இனத்தின் மூளையில் 55,000 முதல் 35,000 வருடங்கள் முந்திய காலப்பகுதியில் 'மூளை விகாரம்' ஏற்பட்டது. அதன் பின்னரே மனித இனம் அறிவியலில் முன்னேற்றம் கண்டது என்கிறார்கள் பலன்தொலோயிஸ் (paleontologist) எனப்படும் கூர்ப்புகள் பற்றி ஆய்வு செய்பவர்கள். இந்த மூளை விகாரத்தை ஏற்படுத்தியவர்கள் ஏலியன்கள்தான் என்கிறார்கள் 'யூஎவ்ஓ' ஆய்வாளர்கள். உயிரியற் பொறிமுறையால் ஹோமோ சேபியன்களுக்கு மூளைவிகாரத்தை ஏற்படுத்திய ஏலியன்கள், தம்மால் விகாரப்படுத்தப்பட்ட மனிதர்களுக்கு தொடர்பாடல் முதல் பல விடயங்களையும் கற்பித்து இருக்கின்றார்கள். அதன் பின்னரே மனித இனம் அறிவியலில் முன்னேற்ற மடையத் தொடங்கியது என்கின் றார்கள் அவ்வாய்வாளர்கள். இதுவும் தமிழர்கள் பற்றிய கூற்றினை உறுதிப்படுத்துவது போலுள்ள தல்லவா! வேற்றுக் கிரக மனிதர்களின் மர்மம் அம்பலமாகும் போதுதான் இது பற்றிய தெளிவும் பிறக்கும்.

இந்நாளின் வானியல் விஞ்ஞானிகள் வான்வெளியிற்கு அனுப்பிய விண்கலமொன்றில் 6 மொழிகளில் புவிபற்றியும் மனிதர்கள் பற்றியும் செய்திகள் அனுப்பியுள்ளனர். அவற்றில் தமிழ் மொழியும் ஒன்று என்பது எங்களில் பலருக்குத் தெரியும். யாராவது வேற்றுக் கிரகவாசிகளிடம் இவ்விண்கலம் சிக்கினால், அவர்கள் வாசிக்கட்டும் என்றே இந்த முயற்சி. இது புவிக்கு தமிழ் வேற்றுலகவாசிகளால் கொண்டு வந்திருக்கப்பட்டிருக்கலாம் என்ற எண்ணம் தற்கால வானியல் ஆய்வாளர்களுக்கும் உள்ளது என்பதைக் காட்டுகின்றதல்லவா! இது கூடக் 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி முகிழ்த்த தமிழ்' என்பதை ஆதரித்து நிற்கின்றது என எனக்குத் தோன்றுகின்றது.

எனவே மற்றைய மொழிகளில் இல்லாத இவ்வாசகம் எம்மிடையே இருப்பதையிட்டு நாம் பெருமிதமடையலாமென நான் எண்ணுகிறேன். நீங்கள் எவ்விதம் எண்ணு கின்றீர்கள்? சரியாகத்தான் கணிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். ●

**- கனி**



# DR. PAUL HEALTHY LIFE CLINIC

**(Homeopathy and Acupuncture)**

## Dr.போல் ஜோசேப்

BHMS (Ind.), HD (can.) RAP (can.)





### ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
### அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)

B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Doctor of Homeopathy, Doctor of Acupuncture

முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்
மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்.

முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ்
பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.

மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ
ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும்,
சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கையின் முதல் B.H.M.S
மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.

கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில்
பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.

ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை
தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.

பக்க விளைவுகளில்லாத, பத்தியமேதுமில்லாத, அனைத்து
நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

**Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com**

**Unit 10, 1193 A, Brimley Rd., (Brimley & Brimorton) Scarborough M1P 3G5**



# சேவலும் முயலும்

சேவலும் முயலும் நீண்டகால நண்பர்கள். அடர்ந்து செறிந்த பற்றைக் காட்டில் அடிக்கடி சந்தித்து, இருவரும் ஒன்றாகவே இரைதேடி அலைவார்கள்.

அன்று நீண்டநேர அலைச்சலின் பின்னர் களைப்பாறவென்று, பச்சைப் பசேலெனக் கிளைபரப்பி வளர்ந்திருந்த புன்னைமர நிழலை நாடிச் சென்ற இருவருக்கும் ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

ஓநாயொன்று புன்னை மரத்தடியில் கண்ணை மூடி நிஷ்டையில் மூழ்கி இருந்தது! ஓநாயாரின் தெய்வீகக் கோலத்தைத் தூர இருந்தே பார்த்த சேவலும் முயலும் ஒருகணம் ஸ்தம்பித்து நின்றன.

அன்பே உருவான சாந்த சொரூபியாய் தியானத்தில் சமைந்திருந்த ஓநாயாரின் திருவுருவில் தன்னை இழந்த முயலோ, பக்தி சிரத்தையோடு தன் பின்னங் கால்களில் குந்தியிருந்து, பவ்வியமாகச் சிரந்தாழ்த்தி முன்னங் கால்கூப்பி வணங்கியது.

இடுப்பில் காவியும், கையில் கமண்டலமும், கழுத்தில் உருத்திராக்கமும் இல்லாக் குறையாக, கைலாயம் நோக்கிப் புறப்படக் காத்திருப்பவர் போலக் காட்சி தரும் ஓநாயாரையும், அக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு நெக்குருகி நிற்கும் முயலையும் மாறி மாறி வியப்போடு பார்த்து நின்றது, சேவல்.

“அடியார்களே, உங்களை ஆசீர்வதிக்கச் சித்தம் கொண்டுள்ளேன். அருகே வாருங்கள்” பாதிக்கண் திறந்து சேவலையும் முயலையும் பார்த்துச் சைகை செய்தது, ஓநாய்.

“இம்மையிலும் மறுமையிலும் இவர் போன்றதொரு மகானின் கடாட்ஷம் கிட்டுவது மகா கஷ்டம் சேவலாரே! வாருங்கள், அவரது பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து சரணடைவோம்.”

மௌனமாய் நின்ற சேவலைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டுக் கூறியது, முயல்!

“பிஞ்சு மனமும், மென்பஞ்சுப் பொதியொத்த மேனியும் கொன்ட முயலாரே, கணீரெனும் குரலும், கண்கவர் உடலழகும் கொண்ட சேவலாரே, கவலை தவிர்ப்பீர்; என் காலடி வந்து சேர்வீர்” எனக் கூறி ஓநாய் அவசரப்படுத்தியது.

அங்கு அரங்கேறிக்கொண்டிருந்த நாடகத்தைப் பாலை மரமொன்றில் அமர்ந்தபடி பார்த்துக்கொண்டிருந்த கரிக்குருவி மெதுவாகச் சொன்னது –

“ஆபத்தை விலைக்கு வாங்கவென ஆசைப்படாதீர்கள். போலிச் சாமியிடம் போய் மாட்டிக்கொள்ளாதீர்கள்.”

“ஓம் எனும் பிரணவத்தை இடையறாது உச்சாடனம் செய்துகொண்டிருக்கும் இப்புனிதரைச் சந்தேகித்தல் இறை நிந்தையாகாதோ…..” எனக் கூறிய முயல், ஓநாயின் முன்னால் ஓடிப்போய்ப் பணிந்து நின்றது.

தக்க தருணம் பார்த்துக் காத்திருந்த ஓநாய், கதறித் துடிக்கத் துடிக்க முயலைக் கௌவிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. நண்பனைப் பறிகொடுத்த சேவலோ தப்பினேன் பிழைத்தேனென்று காட்டுக்குள் மறைந்தது.

“புத்திசாலிகளுக்குப் புத்திமதி தேவையில்லை. புத்தியற்றவர்கள் புத்திமதிகளைக் கேட்பதில்லை.”

தனக்குத் தானே சொல்லி வருந்திய கரிக்குருவி, கவலையோடு அங்கிருந்து பறந்து சென்றது! ●

**க. நவம்**



# POWER STAR

## டாக்டர். சீனிவாசன்



'பவர் ஸ்டார்' சீனிவாசன் என்ற பெயரில் புதிதாக டிவிட்டர் இணையத்தில் இணைந்துள்ளார். இவரது பஞ்சுகளை எல்லாம் பார்த்து இது 'நிஜ பவர் ஸ்டாரா' என சந்தேகங்கள் முளைத்தபோது, அதை முளையிலேயே கிள்ளி, "அது நானே தான் !" என்று பேட்டியளித்து, 'ரசிகர்'களை ஆச்சரியத்திலும் இணையவாசிகளை அதிர்ச்சியிலும் ஆழ்த்தினார்.

பல்வேறு வேலைகளுக்கு இடையிலும் தனது ரசிகர்களின் கேள்விகளுக்கு டிவிட்டர் இணையத்தில் பதிலளித்து வருகிறார் இந்த 'பவர்'.

**டிவிட்டர் இணையத்தில் இவர் பண்ணிய மெசேஜுகளைப் பார்த்து திரையுலகமே Freeze ஆகி இருக்கிறது. இவர் யாருக்கு எல்லாம் என்ன மெசேஜ் அனுப்பினார், என்ன விஷயங்களை பகிர்ந்து கொண்டார் என்பது குறித்த சில நட்சத்திரத் தகவல்கள்...**

- CHAMMAK CHALLO பாடல் பாடிய AKON இற்கு: உங்களுடன் பணிபுரிய ஆசைப்படுகிறேன். இது தான் எனது டிவிட்டர் அக்கவுண்ட்.
- ஃபேஸ்புக் இணையத்தில் சிம்புவிற்கு பிறகு எனக்கு தான் அதிக ரசிகர்கள் இருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.
- ரசிகர்களே.. என்னை பிடிக்காத சில பேர் என்னை தவறாக பேசுவதை பார்த்து கோபப்படாதீர்கள். ஆண்டவன் நல்லவங்களை சோதிப்பான் ஆனா கைவிட மாட்டான்
- ரஜினிகாந்த் பிறந்த நாள் அன்று : எனது அண்ணன் சூப்பர் ஸ்டார் வாழ்க பல்லாண்டு. நீங்க இன்னும் பல படங்க பண்ணனும், அது எனக்கு போட்டியா இருக்கணும்.. (சூப்பர் ஸ்டார் 'கோச்சடையான்' படத்தை விரைவாக முடிக்க திட்டமிட்டதற்கு பவர் ஸ்டாரின் இந்த மெசேஜ் காரணமில்லை என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.)
- மல்லிகா ஷெரவத்திற்கு : ஒஸ்தி படத்தில் நன்றாக ஆடி இருந்தீர்கள். விரைவில் உங்களுடன் ஒரு படத்தில் பணிபுரிய ஆசைப்படுகிறேன்.
- ஜிம்மில் இருந்து வந்து விட்டேன் மிகவும் சோர்வாக இருக்கிறது. ஆனால் எனது வெறித்தனமான ரசிகர்களுக்காக டிவிட்டரில் பேசலாம் என்று வந்தேன்.
- இயக்குனர் ஷங்கர் மற்றும் விஜய் என்னை 'நண்பன்' படத்தின் இசை வெளியீட்டு விழாவிற்கு அழைத்து இருக்கிறார்கள். ஆனால் என்னால் போக முடியுமா என்று தெரியவில்லை.
- ராஜபாட்டை படத்தில் எனது பேரை படத்தின் பப்ளிசிட்டிக்காக பயன்படுத்தி இருக்கிறார் விக்ரம்.
- ஆனந்த தொல்லை படத்தில முழுக்க முழுக்க ஆக்ஷன் தான். பயங்கரமான வில்லனா என்னை பாக்க போறீங்க!
- பவர் ஸ்டாருக்கு கோபம் வராது தம்பி. பாசத்தால அடிக்கிறவன் தான் இந்த பவர் ஸ்டார்.

2011ம் ஆண்டில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் எந்த ஒரு படமும் வெளிவரவில்லை.


ஆனால் ரஜினி படத்தைப் போலவே பரபரப்புக்கு பஞ்சமில்லாமல் படம் வெளியிட்டு தனது பேட்டி, கெட்டப், டிவிட்டர் பஞ்ச் வசனங்கள் மூலம் தமிழ் திரையுலகினர் அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தவர் 'பவர் ஸ்டார்' சீனிவாசன்.

இவர் நடிப்பில் வெளிவந்த 'லத்திகா' திரைப் படத்தை 200 நாட்களைக் கடந்து மகாலட்சுமி திரையரங்கில் ஓட்டினார்கள். பேட்டியில் "நான் தான் காசு கொடுத்து ஓட்டினேன்... அது எனது ரசிகர் களுக்காக" என பேட்டியளித்தார் பவர்.

தன் ரசிகர்களுக்காகவே தன் நடிப்பில் வெளியான 'லத்திகா'வைத் தொடர்ந்து 'ஆனந்த தொல்லை', 'மன்னவன்', 'திருமா', 'தேசிய நெடுஞ்சாலை', 'மூலக்கடை முருகன்' என வரிசையாக படங்களில் மும்முரமாக நடித்துத் தள்ளுகிறார்.



> "Your time is limited, so don't waste it living someone else's life. Don't be trapped by dogma — which is living with the results of other people's thinking. Don't let the noise of others' opinions drown out your own inner voice. And most important, have the courage to follow your heart and intuition. They somehow already know what you truly want to become. Everything else is secondary."



**Steve Jobs**
**1955-2011**

# முகம் ஒன்று வேண்டும்...

பூமியில் பிறக்கும் உயிர்கள் எல்லாம் வாழ்வதற்குப் போராடுகின்றன. வாழ்வதற்கான இந்த போராட்டமே வாழ்க்கை ஆகிறது.

"வாழ்க்கை என்பது என்ன?" என நாம் எண்ணிப் பார்ப்பதற்குள் எம் வாழ்வு முடிந்து போய்விடுகின்றது. நீர்க்குமிழி போல் வாழ்வு என்பர். ஒரு பொழுது வர்ணம் காட்டிச் செல்லும் வானவில் என்பர். வாழ்வைப் பற்றி எப்படியெல்லாமோ அழகாகவும் அருவருப்பாகவும் யார் யாரோ வருணித்தாலும் கண்ணிமைக்கும் பொழுதுக்குள் வாழ்வு தன் கடமையை முடித்து சொல்லிக் கொள்ளாமலே எம்மை விட்டு ஓடிப் போகிறது என்பது மட்டும் தான் யதாரத்தமான உண்மையாகிறது.

"இத்தகைய குறுகிய கணப் பொழுது வாழ்காலத்தில் இவ்வுலகில் பிறக்கும் மனிதர்கள் எல்லோரும் தம் எண்ணம் போல் தம் விருப்பு வெறுப்பு சிந்தனைகளுக்கு அமைய தம் வாழ்வை வாழ்கிறார்களா?" என்றால் "இல்லை" என்றே கூறலாம். காலம் முழுவதும் யாரோ போட்ட பாதையில் தான் நாம் பயணிக்கிறோம். யார் யாருக்காகவோ வாழ்கிறோம். யார் யாரோ தான் தீர்மானிக்கின்றனர் எம் வாழ்க்கையை. எமக்காக வாழ்வதும் எம் சிந்தனைகளின் போக்குக்கமைய வாழ்வதும் தவறானவை சுயநலமானவை என்ற தப்பபிப்பிராயங்கள் எம்மை பல சமயங்களில் சிந்தனை முடங்களாக்கிப் படுக்க வைத்துவிடுகின்றன.

சிந்தனை முடக்கங்கள் ஒரு மனிதனை உயிரோடு இருக்கும் போதே இறக்க வைத்து விடுகின்றன. சிந்தனை என்பது நதி போல சுதந்திரமாக ஓடிக் கொண்டே இருக்க வேண்டியது. எனின் வாழ்வும் சுதந்திர காற்றை சுவாசிக்க முடியும்.

உலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் சிந்திக்கும் சுதந்திரமும் தன் சிந்தனை வழி வாழும் சுதந்திரமும் கட்டாயம் இருக்கப்பட வேண்டும். இது மனிதனின் வாழும் உரிமைகளில் முதன்மையானது.

ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் உள்ளுணர்வுகள் இருக்கின்றன. அந்த உள்ளுணர்வுகள் எம்மை வழிநடத்துகின்றன. சரி பிழைகளை ஆராய்ந்து சிந்தனைகளின் ஊற்றாக திகழ்ந்து எம் வாழ்வு பயணிக்க வேண்டிய பாதையை இந்த உள்ளுணர்வுகள் உணர்த்துகின்றன. கடந்த காலத்தை பாடமாக்கிக் கொண்டு நிகழ்காலத்தை பயன்படுத்தி எதிர்காலத்தை சரியான திசையில் பயணிக்கத்தேவையான பட்டறிவு அடிப்படையிலான வழிநடத்தலை எம் மனமே எமக்குச் சொல்லித் தருகிறது. ஆனால் பல சமயங்களில் நாம் இந்த உள்ளுணர்வை செவி மடுப்பதில்லை. பொருட்படுத்துவதும் இல்லை. அடுத்தவர்க்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எம் உள் உணர்வுகளுக்கு நாம் கொடுப்பதேயில்லை. இதனால் தான் எம் வாழ்வின் பயணங்கள் நாம் விரும்பும் திசை வழி செல்லாது திசைமாறி எங்கெங்கோ சென்று தொலைந்து வாழ்வே சூனியமாகி விடுகின்றது. விரும்பிய வாழ்வு கிடைக்காது போவதும் விரும்பாத வாழ்வு கிடைப்பதும் கொடிய தண்டனைகள்.

"தன் நெஞ்சு பொய்யற்க" என்பதற்கிணங்க முதலில் நாம் எம் உள் உணர்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

அடுத்தவர் விருப்பு வெறுப்புக்களுக்கமைய எங்கள் முகங்களை உருமாற்றி கொள்ள நினைத்தால் நாம் எம் சொந்த முகங்களோடு உலா வர முடியாது. முகங்கள் இழந்த முண்டங்களாக உணர்வு செத்த பிண்டங்களாக வாழ்வது வாழ்க்கையே அல்ல. வாழும் வரை சொந்த முகங்களோடு உலவுங்கள். சொந்த சிந்தை கொண்டு சிந்தியுங்கள்... சொந்த புத்தியில் முடிவுகள் எடுங்கள்... உங்கள் வாழ்வை நீங்கள் தீர்மானித்து வாழுங்கள்... அடுத்தவர் வாழ்வை அடுத்தவர்காக வாழாதீர்கள்... அடுத்தவர் வாழ்வை வாழும் ஒவ்வொரு கணமும் நீங்கள் வாழ்வைத் தொலைத்து இறந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள்.

வாழ்க்கையின் உயர்வை நிர்ணயிப்பவை நாட்களின் எண்ணிக்கை அல்ல. வாழும் முறைமையே வாழ்வை செழுமைப்படுத்தும் முதன்மைக் காரணியாகத் திகழ்கிறது.

மனிதனை மிருகங்களில் இருந்து வேறுபடுத்த உதவுபவற்றுள் முதன்மையானது சிந்தனா சக்தி. சிந்திக்கத் தெரிந்த விலங்கு மனிதன். மனிதன் தனக்குள் உள்ள சிந்தனா சக்தியின் உதவியோடு தான் விரும்பும் வாழ்வை படைக்க முழு உரிமை உள்ளவன்... ஆனாலும் மனிதருள் பலர் தமக்குள் மறைந்திருக்கும் இந்த எல்லையிலா ஆற்றலை உணர்வதில்லை. பெரும் பகுதி வாழ்வை மனிதர்கள் அடுத்தவர்க்கு அடிமையாக்கப்பட்ட வாழ்வாகவே வாழ்கின்றனர். சுய சிந்தை மறந்த அடிமைச்சிந்தை வாழ்வுச் சூழலுள் சிக்க வைத்த வாழ்வை வாழ்கிறார்கள்... இல்லை இல்லை... வாழாமல்... சாகிறார்கள்.

வாழ்வை வாழ்வதும் சாவதும் எம் கையில் உள்ள தெரிவுகள். தெரிவுகளைத் தெரியாது இருப்பது மனிதரின் அறியாமை. தெரிந்த பின்னரும் தம் உணர்வுகளை தியாகம் செய்து அடுத்தவர்க்காக வாழ்வது கொலையிலும் கொடுமையான தற்கொலைக்குச் சமம். அடுத்தவர்க்கு கடமைகள் செய்வதில் தவறில்லை. ஆனால் அடுத்தவர்க்காக எம் சிந்தனைகளை, ஆற்றல்களை முடக்குவதே பெரும் தவறு. அடுத்தவர்க்காக நாம் முகமூடியிட்டு வாழ்வது எமக்கு நாம் செய்யும் துரோகம். முகம் தொலைத்த முகவரி இழந்த மக்களாக வாழாமல் வாழ்வாங்கு வாழும் மக்களாக வாழுங்கள்... முகமன் கூறி உபசரிப்பதில் தவறில்லை... ஆனால் உங்கள் முகங்களைத் தொலைக்காதீர்கள்.

நாம் நாமாக இருப்பதே எமக்குப் பலம் என்று அடுத்தவர்க்காக எம் தனித் துவங்களை விட்டுக் கொடுக்கின்றோமோ அன்று நாம் பலவீனமாகின்றோம். அரிதாரம் பூசினாலும் முகமூடிகள் முகங்களுக்கு வலியே... முகங்கள் அழகில்லாது போனாலும்... அவை உங்களுடையவை... தேடுங்கள் உங்கள் முகங்களை... முகங்கள் தொலைக்காமல் உங்கள் தனித்துவம் பேணி இன்புற்று மேன்மை கொண்டு வாழுங்கள். உங்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டுமென உங்கள் இதயம் சொல்கிறதோ அதை செவிமடுத்து வாழுங்கள். வாழ்க்கை ஒருமுறை தான். அதை நீங்கள் விரும்பும் வகையில் வாழுங்கள். முகங்களோடு வாழுங்கள். முகவரியோடு வாழுங்கள். அதுவே வாழ்வின் நிறைவு! நிறை வாழ்வு நீங்கள் காண நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். ●

-சிவவதனி பிரபாகரன்-

நீங்கள் விரும்பியவருக்கு விரும்பிய பொருட்களை அனுப்பிட!

# Ceycan Transcontinental Shipping Inc.

*Sole agents for Ceylon Shipping Lines in Canada*



## INTERNATIONAL FORWARDING & LOGISTICS

SRI LANKA'S
BEST CLEARING FACILITIES IN
**KANDY & BATTICALOA**

**LIMITED TIME OFFER, $50 to SRI-LANKA**

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**Kumar or Sherman - 905 673 9873**

Vancouver : Randy - 604 273 4911 / Edmonton : Desmond - 780 918 2501
Calgary : Felix - 403 616 7527 / Montreal/Ottawa : Gana - 514 573 0093
Kitchner/Waterloo/Guelph: Krishan Kumara 519 496 0309

## INTERNATIONAL OFFICES :

**United Kingdom**
**Transcontinental Shipping**
Ashley House, 235 High Road
Suite 412, Woodgreen, London
0208 889 8486

**Sri Lanka, Colombo**
**Ceylon Shipping Lines**
294/10 D. R. Wijewardena Mawatha,
Colombo 10
94 11 2459234


**Sri Lanka, Kandy**
**Ceylon Shipping Lines**
175 Paranagantota Road,
Mawilmada, Kandy
94 08 2234356

**1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9**
Email : ceycantrans@gmail.com web: ceycantranship.com

# கேள்வி-பதில்

# மருத்துவ மகத்துவம்

டாக்டர் போல் ஜோசெப்
முன்னாள் பேராசிரியர் :
தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்லூரிகள்
ஹோமியோபதி மருத்துவம், அக்குப்பங்சர் சிகிச்சை சிறப்பு நிபுணர்.



**மருத்துவரே சில நாட்களாக எனது காதில் கேட்கும் திறன் குறைந்துள்ளது. அதோடு மட்டுமல்ல காதில் ஒரே இரைச்சல், வித்தியாசமான சத்தங்களும் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்கிறது. அதைப்பற்றி கொஞ்சம் விளக்க முடியுமா?**

ராஜ்குமார் - மொன்றியல்

உங்களின் பிரச்சனை ஒரு சிக்கலான பிரச்சனைதான். மருத்துவத்தில் இதனை 'TINITUS' என்று அழைக்கின்றோம். காதில் இருந்து சத்தம் வருவது என்பது, இது உண்மையில் சத்தம் உருவாகி வருவது அல்ல. ஆனால் ஒரு மாயச்சத்தம் தான். இப்படி சத்தம் வருவதை எந்த கருவியாலும் உணர முடியாது. இதற்கான உண்மையான காரணங்கள் குறித்து மருத்துவ விஞ்ஞானத்தில் ஒரு தெளிவான நிலைப்பாடு இல்லையென்றாலும் ஒரு நோயாளி உணருகின்ற சத்தத்தின் அடிப்படையில் அல்லது இதற்கான சரியான காரணத்தை கண்டுபிடித்து அதற்குரிய ஹோமியோபதி மருந்துகளை எடுப்பதன் மூலம் பெரும்பாலும் குணமாக்க இயலும். இன்னும் சிலவற்றை அறுவைசிகிச்சை அல்லது வேறு முறைகள் மூலமும் சரி செய்யலாம். சத்தங்களைப் பொறுத்தவரை மணியடிப்பது போல, வாகன இரைச்சல் போல, வண்டுகளின் சத்தம், விசில் சத்தம், நீர்வீழ்ச்சியின் சத்தம், இதயத்துடிப்பு அல்லது இரத்த குழாயின் துடிப்பு போல இப்படி ஒவ்வொருவருக்கும் விதம் விதமான ஒலிகள் கேட்பது வேடிக்கையான விடயம். இதில் இதயத்துடிப்பின் ஓசை, இரத்தக்குழாயிலுள்ள இரத்தம் ஓடுவதுபோன்ற துடிப்பு ஒலிகள் கேட்டால் மூளைக்கு இரத்தத்தை எடுத்துச்செல்லும் Carotid Artery என்ற இரத்தக்குழாயில் அடைப்புகள் அல்லது Aneurysm என்ற இரத்தக்குழாயில் வீக்கம், அல்லது மூளையினுள் உள்ள இரத்த குழாய்களிலுள்ள பிரச்சனைகள் போன்ற விடயங்கள் காரணமாக இருக்கலாம். இவற்றை இன்றைய நவீன கருவிகள் மூலம் பரிசோதனை செய்து இலகுவில் கண்டுபிடித்து சிகிச்சையளித்து குணப்படுத்தலாம்.

இதை தவிர்த்து பொதுவாக வேறுபல காரணிகளும் உண்டு. அவற்றில் குறிப்பாக காதினுள் உண்டாகும் அழற்சி Miners Diseases என்ற ஒருவகை வியாதி, காதிற்குள் உள்ள கட்டிகள், அஸ்பிரின், ஸ்ரீரொயிற் குளிசைகள நீண்ட நாள் பயன்படுத்துதல், ஏதோ ஒருவகையில் மெர்குரி மற்றும் லெட் போன்ற உலோக நச்சுக்களின் தாக்கம், தலையில் அடிபடுதல், தைரொயிற் தொடர்பான பிரச்சனைகள், இரும்புச் சத்து மற்றும் சில விற்றமின்களின் குறைபாடு, புகைப்பழக்கம், இப்படி இன்னும் பல காரணங்களினாலும் காதிரைச்சல் என்ற Tinitus வர வாய்ப்புள்ளது. இதுமட்டுமல்ல இன்றைய இளையவர்கள் எப்பொழுது பார்த்தாலும் Head phone வைத்துக்கொண்டு பாடல் களைக் கேட்பது வழக்கம். இப்படிச் செய்வதாலும் காதிரைச்சல் மற்றும் ஒற்றைத்தலைவலி என்ற மைக்ரேன் தலைவலியும் வருகிறது என்று அண்மைக்கால ஆய்வுகள் உறுதி செய்துள்ளது.

**கனடியக் குளிர் உச்சக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. குளிரின் தாக்கத்தால் பல பிரச்சனைகள் மனிதனுக்கு ஏற்பட்டாலும் குறிப்பாக முகவாதம் என்ற முகத்தின் அழகினைத் தலைகீழாய் புரட்டிப்போடும் ஒரு நோய் வருகிறதாமே. எனது உறவினர் பெண் ஒருவருக்கு இந்தநோய் தாக்கியுள்ளது. அதைப்பற்றி கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கள்.**

தேன்மொழி – ரொறன்ரோ

இந்த முகவாதம் என்கிற நரம்பு தொடர்பான நோய் இன்று பரவலாக காணப்பட்டாலும் இது ஒரு தொற்றுநோயல்ல, மூளையுடன் தொடர்புடைய 12 கிறேனியல் நரம்புகளில் 7வது நரம்புதான் முகநரம்பு. இது Facial Nerve என்றழைக்கப்படுகின்றது. இந்த நரம்பு பல்வேறு காரணங்களால் செயலிழந்து போகின்றது. அதில் ஒரு காரணம் முகத்தில் படும் குளிரின் தாக்கமாகும். முக நரம்பானது மூளையில் உருவாகி மண்டையோட்டிலுள்ள ஒரு சிறிய துவாரம் வழியாக காதின் பின்புறமாக வெளிவந்து முகம், கண், கன்னம், வாய், போன்றவற்றின் தசைகளின் இயக்கத்தையும் முக பாவம், சிரிப்பு, உணவு மெல்லுதல், கண்ணிமை மூடித்திறத்தல் போன்ற பல செயற்பாடுகளுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. இதைப்பற்றிய ஆய்வுகளை அதிகமாக செய்த Charles Bell என்ற மருத்துவரின் பெயரால் இதனை Bell's Palsy என்று மருத்துவத்தில் அழைக்கப்படுகிறது. பொதுவாக வைரஸ் தொற்று நோய்கள் பலவற்றினால் இந்த நரம்பு பெரிதும் பாதிக்கப்படுகிறது. மற்றும் பக்கவாத நோய் ஏற்படும் போதும் இந்த நரம்பு பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. தலை, கழுத்து, கன்னம் போன்ற பகுதிகளில் அடிபடுவதாலும், அதிலும் குறிப்பாக குளிரின் தாக்கம் தொடர்ந்து முகத்தில் படுவதாலும் அதனால் நரம்பு உறுத்தப்பட்டு செயலிழந்துபோகிறது. குளிர் நாடுகளில் மட்டுமல்ல ஆசிய நாடுகளிலும் இந்த நோய் வருகிறது. எப்படியென்றால் இரவு நேரங்களில் மொட்டைமாடிகளில் படுத்து உறங்குபவர்கள், ஜன்னல் ஓரமாக இருந்து பேருந்துகளில் இரவு நேரம் முழுவதும் அல்லது அதிகாலையில் ஜன்னலை திறந்தவண்ணமாக பயணம் செய்ப வர்களுக்கு தொடர்ச்சியான குளிர்காற்று படுவதாலும் இந்த நரம்பு பாதிக்கப்பட்டு முகவாதம் வரலாம். அதன் அறிகுறிகள் என்று பார்த்தால் சிரிக்கும்போது பாதிக்கப்பட்ட வலது அல்லது இடதுபக்க முகத்தசைகள் இயங்காத காரணத்தால் வாய் ஒரு பக்கம் கோணலாக நரம்பு பாதிக்கப்படாத பகுதி ஒரு பக்கம் இழுபட்டது போல தெரியும். கண் இமைகள் சரியாக மூடமுடியாது, நெற்றியை சுருக்கும் பாதிக்கப்பட்ட பகுதியின் நெற்றித்தோல் சுருங்காது, வாயினை மூடிக்கொண்டு உள்ளே காற்று அடைத்து ஊதச் செய்தால் பாதிக்கப்பட்ட பகுதியின் பக்கம் ஊத முடியாது போகும். வாயில் உமிழ் நீர் வடிந்துகொண்டிருக்கும், கண் இமைகள் மூடமுடியாது. கண்ணில் புண்கள் (Corneal Ulcer) உண்டாக வாய்ப்புள்ளது. சொற்களை சரியாக உச்சரித்துப் பேசமுடியாது போன்ற பல பிரச்சனைகள், முகத்தின் அழகு, தோற்றம் பாதிக்கப்படுவதிலுண்டாகும் மன உளைச்சல் போன்றவையும் ஏற்படலாம். இதற்கு சில சிகிச்சைமுறைகளிருந்தாலும் ஹோமியோபதி மற்றும் அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் காரணங்களை கண்டறிந்து பெரும்பாலான முகவாத நோயை குணப்படுத்தலாம்.

வாசகர்களே! உங்கள் மருத்துவக் கேள்விகளை தூறலுக்கு அனுப்பி வையுங்கள். editorial@thooralonline.com · Fax : 416 273 7606


ஹரா டிரேடர்ஸ்
Hara Traders
இலங்கை – இந்திய நவநாகரீக ஆடைகள்,
ஆபரணங்கள் மற்றும் பாதணிகள்...
Sale ! Sale ! Sale !
Kids Masakali 2 for $ 50
Saree's Kashmere 5 for $ 99
Synthetic Shalwar Kameez 5 for $ 60
Readymade Saree Blouse $ 5
Adults Masakali 2 for $ 99
Sri Lankan Package 5 for $ 75
Disigner Sarees Starting from $ 49
Dress Materials from $ 9.99
Kurthi Tops $ 4.99
2250 Midland Ave Unit #1 Scarborough ON.
Tel: 416 291 4464
3341 Markham Road, Unit 123 (Markham & Steeles)
Toronto, M1X 0A5 Tel: 647-629-3152
1265 Morningside Avenue, Unit 108
(Morningside & Sheppard) Tel: 647 547 3843
www.haratrends.com

# வாசகர்களே! இது உங்களுக்கு...



## இந்த கதைக்குரிய தலைப்பையும் முடிவையும் வாசகர்களிடமே விட்டுவிடுகிறோம். இதற்கான சிறந்த முடிவை எழுதும் அதிஷ்டசாலி வாசகருக்கு **$100** பரிசு காத்திருக்கிறது.

ரமேஷ் மிகவும் சந்தோசமாக இருந்தான். காலையில் தான் நிச்சயதார்த்தம் பண்ணி முடித்திருந்தான். அதுவும் அவன் நீண்ட நாளாக ஆசை பட்ட சர்மிளாவை. ஊரில் இருக்கும் போதிருந்தே சர்மிளா மேல் அவனுக்கு ஒரு ஈர்ப்பு இருந்தது. அதே சர்மிளாவையும் அவளது குடும்பத்தையும் கனடாவில் கண்டபோது அவனுக்கு தலைகால் புரியவில்லை. அவர்கள் இருவருக்கும் ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் இருப்பதாகவே ரமேஷ் நினைத்தான்.

இருந்தாலும் அவனுக்குள் ஒரு பயம். ஊரிலும் ஆகட்டும் கனடாவிலும் ஆகட்டும் சர்மிளாவின் குடும்பத்தைவிட நல்ல நிலையில் இருந்தது ரமேஷின் குடும்பம். அதுமட்டுமல்ல ரமேஷின் தாயார் சாதி அதிகம் பார்ப்பவள். இவற்றை வைத்துப் பார்க்கும்போது இவன் ஆசை எவ்வாறு நிறைவேறும் என்பது அவனுக்குள் ஒரே குழப்பம். அதுமாத்திரமல்ல, சர்மிளாவுடன் சாதாரணமாக கதைத் திருக்கிறானே தவிர காதல் பற்றி எல்லாம் பேசியதில்லை. ஊரில் அவள் ஒரு பையனை காதலித்தாள் என்று அவனது நண்பர்கள் சொல்லியிருந்தார்கள். சர்மிளா தன்னை மணக்க சம்மதிப்பாளா? இப்படி பல விடயங்கள் அவனை குழப்பியிருந்தது.

தனது காதலை பெற்றோரிடம் சொன்னவனுக்கு எவ்வித எதிர்ப்பும் இன்றி பெண் கேட்க சம்மதித்தது முதல் ஆச்சரியம். நிச்சயதார்த்தத்திற்கு முதல் நாள் தான் தன்னை பிடித்திருக்கிறதா? என்று ரமேஷ் கேட்டான். அதற்கு சர்மிளாவிடம் இருந்து ஆம் என்ற பதில் வந்தது அவனுக்கு அடுத்த ஆச்சரியம்.

நிச்சயதார்த்தப் புடவையில் தேவதை போல் இருந்த சர்மிளாவைப் பார்த்து பூரித்துப்போனான். கடைசிவரை இவளை சந்தோசமாக வைத்திருக்க வேண்டும், என்றுமே இவளது கண்ணில் இருந்து கண்ணீர் வரக்கூடாது என நினைத்துக்கொண்டான். நிச்சயதார்த்தம் நல்லபடியாக நடந்து முடிந்தது.


நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று. நாம் நினைப்பதே நடந்துவிட்டால் நாம் கடவுள் என்று ஒருவர் இருப்பதையே மறந்துவிடுவோம். கடவுள் ரொம்ப பெரியவர்.

ரமேஷ் சர்மிளாவுடன் நூறு ஆண்டுகள் சந்தோசமான வாழ்க்கையை திட்டமிட்டுக்கொண்டிருந்தான். இரண்டு குழந்தைகள். ஒரு ஆண், ஒரு பெண், அவர்களது குழந்தைகள் என்று அவனது கனவு நீண்டு கொண்டே சென்றது.

ஆனால் கடவுள் அவர்கள் வாழ்க்கையில் வேறு திட்டம் வைத்திருந்தார்......



நீங்கள் விரும்பிய மற்றும் சொகுசான பயணங்களுக்கு...
Serandib Travel
Your satisfaction is our success
SUITE 207- 7 EASTVALE DR, MARKHAM, ON L3S 4N8
Tel: 416 750-0009 Canada Toll Free: 1800 207 0902
618 GOYEAU STREET #2A WINDSOR Tel: 519-977-1234
Montreal : 514 448 1389, Calgary : 403 770 9647, Ottawa: 613 482 6590,
Vancouver : 604 625 0495, Mississauga : 905 564 7564, Markham : 905-472-7500
Email: info@serandibtravel.com Web: www.serandibtravel.com
SriLankan
AIR INDIA
Emirates
ETIHAD
FLY KINGFISHER
QATAR
JET AIRWAYS
GULF AIR
KUWAIT AIRWAYS
IATA
tico.ca
50012691


NEW SPICELAND
TAKEOUT | CATERING | BAKERY
Open 7 Days from 7 am to 11 pm
சைவ மற்றும் அசைவ உணவுகளையும், தாயக உணவுகளையும்
கைதேர்ந்த சமையற்காரர்களின் கைவண்ணதில் பெற்றுக்கொள்ளலாம்.
6065 Steeles Avenue East, (Markham & Steeles) Toronto, Ontario M1X 0A8
Tel: 416 335 3035 Fax: 416 335 3032
Cake Orders செய்து தரப்படும்.
Birthday, Wedding போன்ற
அனைத்து விதமான
வைபவங்களுக்குமான
Cake வகைகள்
செய்து தரப்படும்.



# Why this kolaveri di

2011ம் ஆண்டு தமிழ் திரையுலகம் மட்டுமல்ல இந்திய திரையுலகமே முணுமுணுத்த பாடல் WHY THIS KOLAVERI DI. தனுஷ் எழுதி பாடிய இப்பாடல் தமிழ் திரையுலகம், இந்தி திரையுலகம் , கிரிக்கெட் பிரபலங்கள் என பல தரப்பினரும் பாராட்டிய பாடல்.

“3" படத்தில் இடம் பெற்று இருக்கும் இப்பாடல் அதிகாரபூர்வமாக இல்லாமல் இணையத்தில் வெளியாகி இளைஞர்கள் மத்தியில் பிரபலமாக ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து “3" படக்குழுவினர் பாடல் பிரபலமாவதை பார்த்து உடனே WHY THIS KOLAVERI பாடல் மட்டும் அடங்கிய சி.டியை வெளியிட்டார்கள். சோனி நிறுவனம் அப்பாடல் உருவான விதம் என்று தனுஷ் பாடுவதாக அமைந்த வீடியோ பதிவை இணையத்தில் வெளியிட்டது.

வெளியிடப்பட்ட அன்று முதல் கொலவெறி கொண்டு தமிழ்நாடு, இந்தியா, உலகம் பூராக என்று அனைத்து தரப்பு இளைஞர்கள் மத்தியில் அப்பாடல் பிரபலமாக ஆரம்பித்தது. TWITTER இணையத்தின் TRENDINGல் WHY THIS KOLAVERI என்ற TAG சில நாட்கள் முதல் இடத்தில் நீடித்தது. TRENDINGல் வந்ததால் முன்பை விட அப்பாடல் பிரபலமாக ஆரம்பித்தது.

அமிதாப்பச்சன் இப்பாடலைக் கேட்டு தனுஷை பாராட்டினார். அவரைத் தொடர்ந்து இந்தி திரையுலக பிரபலங்கள் பலரும் பாராட்டு தெரிவித்தார்கள். இப்பாடலை எழுதி பாடியது யார் என்று இணையவாசிகள் தேடியதன் மூலம் தனுஷ் மேலும் பிரபலமடைந்தார்.

* YOUTUBE இணையத்தில் உள்ள வீடியோ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சாதனை படைத்தது. அவ்வீடியோ பதிவை பார்த்தவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 3 கோடி என்று சொல்லப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இப்பாடலை பலரும் பாடி, அந்த வீடியோவை YOUTUBE ல் பதிவெற்றினர். இப்படி பல வடிவங்களில் WHY THIS KOLAVERI பாடல் வலம் வந்து கொண்டு இருக்கிறது.

FLASH MOB இலும் WHY THIS KOLAVERI பாடல் இடம் பிடித்தது. மும்பையில் நடைபெற்ற FLASH MOB ல் தனுஷ் பங்கேற்றார். AUCKLAND, BANGALORE ஆகிய இடங்களில் நடந்த FLASH MOB – களிலும் WHY THIS KOLAVERI இடம் பெற்றது.

* WHY THIS KOLAVERI பாடலுக்கு இசையமைக்க வெறும் 5 நிமிடங்கள் தான் தேவைப்பட்டது என பேட்டியில் தெரிவித்தார் இசையமப்பாளர் அனிருத். முதல் பாலிலேயே சிக்ஸர் ! WHY THIS KOLAVERI பாடல் YOUTUBE இணையத்தில் GOLDEN AWARD வென்று இவருக்கு பெருமை சேர்த்தது.

ஹிந்தி சேனல்கள் நடத்திய இசை நிகழ்ச்சிகளில் தனுஷ், இசையமைப்பாளர் அனிருத் இருவரும் பங்கேற்றார்கள். அதுமாத்திரமல்ல டாடா குழுமத்தின் தலைவர் ரத்தன் டாடா தனுஷை அழைத்து தனது பாராட்டினை தெரிவித்தார்.

முக்கியமாக இந்திய பிரதமர், சீன பிரதமருக்கு அளித்த விருந்தில் தனுஷ் கலந்து கொண்டதன் மூலம் இந்தியாவின் அனைத்து தரப்பு மக்களுக்கும் தெரிந்த நபராக தனுஷ் வலம் வருகிறார். INDIA'S MOST SEXIEST VEGETARIAN வாக்கெடுப்பில் தனுஷ் பெயரும் இடம்பெற்று இருக்கிறது.


* CNN நிறுவனம் TOP SONG OF THE YEAR என்று WHY THIS KOLAVERI பாடலை பாராட்டி இருக்கிறது.

2011 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ‘ஆடுகளம்’ படத்திற்காக தேசிய விருது வென்றவர், ஆண்டு இறுதியில் இப்பாடல் மூலம் பலரைச் சென்றடைந்துள்ளார்.

இதே வரிசையில் 96 மொழிகளில் காதல் என்ற வார்த்தையை வைத்து உலக சமாதானத்திற்காக சிம்பு ஒரு பாடலையும், இளைய தளபதி விஜயின் ரசிகர்கள் தளபதி Anthem என்றும் ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தப் பாடல்களைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதே நேரத்தில் இந்தப் பாடலில் என்னதான் இருக்கிறது? ‘தமிழுக்காக உழைத்தவனெல்லாம் வாய்ப்பை இழந்து நிற்க தமிழை விற்றுப் பிழைப்பவன் எல்லாம் கலைஞனாகிறான்’ என்ற ஆதங்கமும் புலம்பலும் காதில் கேட்கத்தான் செய்கிறது.

- அபி


The Queen Palace
Banquet Hall
திருமணம், பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா,
கல்லூாி ஒன்றுகூடல், வரவேற்பு உபசாரம் மற்றும் சகல விதமான
வைபவங்களுக்கும், அவற்றிற்கான அழகிய மண்டபம், புதிய மணவறைகள்
மற்றும் அறுசுவையான உணவு வகைகளை தரமாகவும் நிறைவாகவும் பெற்றிட அழையுங்கள்.
C.K Senthuran
416 400 8383
V. Vasaant
416 844 0000
1173 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
E-mail: thequeenpalace@gmail.com
www.queenpalacebanquet.com



உங்கள்
வீடு
விற்றிட...
வாங்கிட...
சிறந்த வீடு விற்பனையாளர்களுக்கான விருது.
CHAIRMAN CLUB
TRIDEL
Chairman Club Award 2011 from Home Life
President Club Award 2011 from Tridel
TOP PRODUCING TEAM 2011
Siva & Joy Got it SOLD
Direct : 416 703 2400
Residential / Commercial / New Condo and Investment Properties
Siva Shanmuganathan Broker
Cell : 416-545-7482
HOMELIFE HIGHER STANDARDS
Joy H. Selvanayagam Broker
Cell : 416-358-6928
Homelife/Future Realty Inc.,Brokerage
7 Eastvale Drive Unit 205, Markham, L3S 4N8 Tele : 416-264-0101/ 905-201-9229 www.futuregtahomes.com | www.suncityplaza.ca


உங்கள் வீட்டு அடமானக் கடன் பெற்றிட
ஓர் புதிய வாசல்...
RBC
RBC Royal Bank
இன்றே அழையுங்கள்...
Mayuran Ketheeswaran
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
Cell : 416 823 4479 Fax : 416 444 4433 mayuran.ketheeswaran@rbc.com

# தமிழ் திரையுலகம் 2011!

2010ஆம் ஆண்டோடு ஒப்பீடு செய்கையில் வணிக ரீதியாகவும், தரமான தமிழ் படைப்புகளை படைத்ததிலும் பின்தங்கி இருந்தாலும் 2011ஆம் ஆண்டும் பல படைப்புகள் வணிக ரீதியாகவும், தரமான படைப்புகளும் வெளிவந்து இருக்கின்றன.

2010 ஆம் ஆண்டுக்காக 2011இன் தொடக்கத்தில் 13 தேசிய விருதுகள் தமிழ் திரையுலகத்திற்கு கிடைத்தது மிகப்பெரிய சாதனை.

2011 ஆண்டின் திரைப்படங்கள் வரிசையை பார்க்கும் போது மிகப்பெரும் வெற்றித் திரைப்படம் 'மங்காத்தா'. அஜீத் நடிப்பில் வெளியான இப்படம் வசூலில் முதல் இடத்தினை பிடித்து இருக்கிறது. அதனை தொடர்ந்து லாரன்ஸ் இயக்கி நடித்த 'காஞ்சனா', ஜீவா நடித்த 'கோ' , கார்த்தியின் 'சிறுத்தை' ஆகியவை வணிகரீதியில் வரவேற்ப்பைப் பெற்ற படங்கள்.

சிறந்த வரவேற்ப்பைப் பெற்ற 'எங்கேயும் எப்போதும்' திரைப்படம் வணிகரீதியிலும் வசூலை அள்ளியது. சூர்யாவின் 'ஏழாம் அறிவு', விஜய்யின் 'வேலாயுதம்' ஆகிய படங்கள் குறித்து பல்வேறு சர்ச்சைகள் இருந்தாலும் வசூலிலும், வரவேற்பிலும் குறை வைக்கவில்லை. இப்படங்களைத் தவிர ஆடுகளம், தெய்வத் திருமகள், காவலன், வானம், மயக்கம் என்ன, பயணம், குள்ள நரிக் கூட்டம் ஆகிய படங்கள் எதிர்ப்பார்த்த வசூல் கிடைக்காவிட்டாலும் விமர்சகர்கள் மத்தியில் பாராட்டை பெற்றது. அத்துடன் விமர்சகர்கள் மத்தியில் பெரிதும் பாராட்டை பெற்ற ஆரண்ய காண்டம், வாகை சூட வா இரண்டுமே மக்களிடம் தோல்வியை தழுவியது.

இவைதவிர நடுநிசி நாய்கள், ஒஸ்தி, ராஜபாட்டை, வேங்கை, மாப்பிள்ளை, வெடி, எங்கேயும் காதல் உள்ளிட்ட பெருத்த எதிர்ப்பார்ப்புகிற்கு இடையே வெளியான திரைப்படங்கள் விமர்சகர்கள் மத்தியிலும் மக்களின் மத்தியிலும் தோல்வியுற்றது.

2011 இல் முக்கிய ஒரு நிகழ்வாக ரஜினி, கமல் உள்ளிட்ட நடிகர்களே ரசிகர் மன்றங்களை கலைக்க தயங்கும் போது ஏப்ரல் மாதம் அஜீத் தனது ரசிகர் மன்றத்தை கலைப்பதாக அறிவித்து தமிழ் திரையுலகினர் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

அவன் இவன் திரைப்படத்தில் விஷாலின் மாறுகண் நடிப்பு மக்கள் மத்தியில் அவரை ஒரு சிறந்த நடிகராக வெளிப்படுத்தியது மாத்திரமல்ல, சக நடிகர்களை ஆச்சர்யப்படவும் வைத்தது. தெய்வத்திருமகள் படத்தில் விக்ரம் நடிப்பு தமிழ் நாட்டின் மக்கள் மத்தியில் பேசும்படியாக அமைந்தது. 2011 தேசிய விருது நடிகர்கள் பட்டியலில் இவ்விருவர் பெயரும் இடம் பெறலாம்.

ஆடுகளம் படத்துக்காக தேசிய விருது வாங்கிய தனுஷ், பாடலாசிரியராக புதிய அவதாரம் எடுத்தார். இவர் எழுதிய 'கொலவெறி' பாடல் தற்போது உலகம் முழுவதும் பிரபலம்.

நடிகைகள் பட்டியலில் அமலா பால், அனுஷ்கா இருவருமே 2011ல் தமிழக இளைஞர்களை கிறங்கடித்தார்கள் எனலாம். ஆனால், நடிப்பில் இவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் சோபிக்கவில்லை.

மயக்கம் என்ன படத்தில் இயல்பாக நடித்த ரிச்சா, ஒஸ்தியில் வந்து போனார். வாகை சூட வா, மௌனகுரு படத்தில் நடித்த இனியா, மூத்த இயக்குனர்களின் கவனத்தைப் பெற்றார். இவ்விருவருடன், 7 ஆம் அறிவு படத்தில் நடித்த ஸ்ருதிஹாசன், கோ படத்தில் நடித்த கார்த்திகா, ஆடுகளம், வந்தான் வென்றான் படத்தில் நடித்த டாப்ஸி, ராஜபாட்டை படத்தில் நடித்த தீக்ஷா சேத் உள்ளிட்ட நடிகைகள் 2011 ஆம் ஆண்டு அறிமுகமானவர்கள்.

- குகவரதன்




# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

## உங்கள் உரிமைகளை தெரிந்துக்கொள்ளுங்கள்!

சம்பள இழப்பீடுகள், வீட்டுப்பராமரிப்புச் செலவுகள்
குழந்தை பராமரிப்புச் செலவுகள், கல்வி வணிக இழப்புகள்
மருத்துவச் செலவுகள் போன்றவற்றை உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்வதற்கு பலவருட அனுபவம் வாய்ந்த
நம்பிக்கையானவர்களை நாடுங்கள்...!

**Able Accident Benefits**
Group of Able Legal Services Inc.

**WIJAY OR KUMAR 416 293 2111**
4810 Sheppard Ave. E Suite 207, Scarborough, ON M1S 4N6

# ஸ்பொன்சர்

ஆதித்யன் கனடா வந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது. சுஜிதாவை திருமணம் செய்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு சில காரணங்களால் இவர்களது ஸ்பொன்சர் இன்னும் சரிவரவில்லை.

ஆதித்யன் இந்த இரண்டு வருடங்களுக்குள் நான்கு தடவை சுஜிதாவை கொழும்பு சென்று பார்த்துவிட்டு வந்துவிட்டான்.

எத்தனையோ வழிகளில் முயற்சித்தாகிவிட்டது. ஆனால் இன்னும் சரிவரவில்லை.

சுஜிதாவின் பெற்றோரும், தம்பியும் விபத்தொன்றில் இறந்துவிட்டனர். அந்த விபத்தில் தப்பியவள் அவள் மட்டுமே. பெற்றோரை இழப்பதற்கு கொஞ்ச நாளுக்கு முன்னரே ஆதித்யனை சுஜிதாவுக்கு பேசி முடிவுசெய்திருந்தார்கள்.

அது பேச்சோடு மட்டும் நின்றவிடக்கூடாது என்பதோடு, சுஜிதாவை இந்த நிலையில் கைவிடக்கூடாது என்பதற்காக திருமணம் செய்துகொண்டான். அதுமாத்திரமல்ல சுஜிதாவை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் எதிர்பார்த்த ஒரு பெண்ணாகவே அவள் இருந்தாள்.

சுஜிதாவுக்கு ஏற்கனவே லண்டன் பையனோடு நிச்சயம் ஆகியிருந்தது. நிச்சயம் ஆனபின்பு அந்தப் பையன் ரமேஷ் பற்றி தெரியவரவே அது நிச்சயத்தோடு நின்றுவிட்டது. ஆனால் ரமேஷினால் சுஜிக்குத் தொல்லைகள் அதிகரித்தன. இது தெரிந்தும் இது ஒரு பெரிய விடயமேயல்ல என்று சாதாரணமாகவே எடுத்துக்கொண்ட ஆதித்யன் சுஜியைத் திருமணம் செய்துகொண்டான்.

திருமணத்தின் பின் ஸ்பொன்சர் போகும்போது சுஜியின் முன்னைய நிச்சயதார்த்தம் பற்றி கனடிய எம்பசிக்கு தெரியவர பிரச்சனைகள் ஆரம்பமானது. ஸ்பொன்சர் இரண்டுவருடமாக இழுபட்டுக்கொண்டிருந்தது. இந்த மாதம் சரிவரும், அடுத்த மாதம் சரிவரும் என்ற எதிர்பார்ப்புகளுக்கிடையே பல்வேறு வகைகளிலும் முயற்சித்தாயிற்று. எம்.பி வரை கூட சென்று முயற்சித்தும் பயனில்லை.

எப்போது கனடிய எம்பசியைத் தொடர்பு கொண்டாலும் 'உங்க பைலை இன்னும் பார்க்க இல்லை' என்பது மட்டுமே பதிலாக இருந்தது.

ஆனால் வெகுவிரைவிலேயே எல்லாம் சரியாகவரும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை ஆதித்யனுக்கு இருந்தது. இதே நம்பிக்கையை சுஜியிடமும் வளர்த்துக்கொண்டிருந்தான்.

இந்த நம்பிக்கைக்கும் ரமேஷின் தொல்லைகளுக்குமிடையே தவித்துக்கொண்டிருந்தாள் சுஜி. இந்த நிலையில் மெடிக்கல் செய்யும்படி கூப்பிட்டார்கள். சந்தோசத்தில் திணறிப்போனான். எப்படியும் இன்னும் 3 மாதங்களுக்குள் எல்லாம் சரியாகிவிடும் என்று நிம்மதியடைந்தான்.

சுஜியை கூட்டிக்கொண்டுவருவதற்கு கொழும்பு வருவதாக வாக்களித்திருந்தான். மெடிக்கல் முடிந்து நான்கு மாதங்கள் ஆகியும் எவ்வித தகவலும் இருக்கவில்லை. மறுபக்கம் ரமேஷ் கொழும்புக்கே வந்து தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிட்டான். விரக்தியின் விளிம்புக்கே சென்றுவிட்டாள் சுஜி.

இந்நிலையில் சுஜியின் பிறந்தநாள் வந்தது. ஆதித்யன் ஒரு மாத விடுமுறையில் கொழும்பு சென்றான். இந்த முறை கொழும்பு செல்வதை சுஜிக்கு அவன் தெரிவிக்கவில்லை. அவளுக்கு அதிர்ச்சி கொடுக்க நினைத்தான். இந்த ஒரு மாதத்துக்குள் அவளுக்கு விசா கிடைக்கும் என்று அவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

அவனது விடுமுறை முடிந்து அவன் மீண்டும் கனடாவுக்கு திரும்பி வரும்போது சுஜியுடன்தான் வருவான் என்பது அவனுக்கு நிச்சயமாக இருக்கவே, தேவையானவை எல்லாவற்றையும் செய்துவைத்தான். சுஜி கனடா வந்து குடியேறுவது மட்டுமே பாக்கி.

எல்லாவற்றையும் செய்துமுடித்த திருப்தியோடு கொழும்பு செல்ல விமானம் ஏறினான். அவனது கண்களில் கனவுகள் நிறைந்திருந்தது. கொழும்பு சென்று இறங்கியவன் சுஜியைப் பார்க்க வீட்டிற்கு சென்றான்.


வீட்டில் ஒரே சலசலப்பாக இருக்க பொலிஸாரும் நின்றிருக்க குழப்பமடைந்த ஆதித்யன் ரமேஷினால் ஏதோ பிரச்சனையோ என்று யோசித்தபடி உள்ளே நுழைய முற்பட்டான்.

அப்போது வாசலில் வந்த தபால்காரன் கடிதம் ஒன்றை கொடுக்க முற்பட்டபோது அது கனடிய எம்பசியிலிருந்து என்பதை தபால்உறையை வைத்தே கண்ட ஆதித்யன் அவசரமாகி தபால்காரனிடமிருந்து கடிதத்தை பறித்து எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

சுஜிதாவை விசாவைப் பெற்றுக்கொள்ள வரும்படி கடிதம் வந்திருந்தது. துள்ளிக்குதித்தபடி உள்ளே சென்றவன் அதிர்ச்சியில் உறைந்துபோனான்.

சுஜிதா அகோரமாய் கூரை மின்விசிறியில் தொங்கிக்கொண்டிருந்தாள். ●

-தேஜி


A.H.M. Designers Ltd.
ADDING VALUE TO HOUSES
A.H.M. DESIGNERS LTD.
Kitchens- Vanities - Granite - Marble Top - Custom Works
121 Howden Road, Scarborough, ON M1R 3C7 Canada
Toll Free : 1800-819-8043 Fax: 416-751-3547
Tel: 416-751-5808
www.ahmdesigners.com | info@ahmdesigners.com

செழியன்

# வளைந்து போன வீரவாள்

மார்கழி மாத விடுமுறை விடவும் மாமா வந்து இறங்கவும் சரியாக இருந்தது. மார்கழி மாத விடுமுறையில் பெரிய பெரிய வசதிகள் எல்லாம் இருக்கின்றது. முப்பது நாட்களுக்கும் குறையாமல் வருகின்ற மிகப் பெரிய பள்ளிக்கூட விடுமுறை இது என்பதால் பள்ளிக்கூடம் போகாதவர்களுக்கும் கூட முக்கியத்துவம் வாய்ந்த விடுமுறை இது.

இறுதிப் பரீட்சை முடிந்ததின் பின்னர் வருவதால் 'புத்தகத்தை எடுத்துப் படியடா' என்கின்ற வன்முறைகள் எதுவுமே கிடையாது. அண்டை நாட்டுக்கு எதிரான பெரும் படையெடுப்புக்குத் தயாராவது போல, அடுத்த கட்டப் பயிர்ச்செய்கைக்காக ஒட்டுமொத்த யாழ்ப்பாணமும் தயாராகின்ற காலகட்டம் என்பதால் 'மிளகாய்ப் பழம் பிடுங்க வாடா', 'கத்தரிக்காயை கழுவிச் சாக்கில் கட்டு' என்கின்ற சிறுவர்கள் மீதான கொடுமைகளும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுவிடும்.

'தம்பியின் கொப்பிப்பேப்பரை கிழித்து விதம் விதமாகக் கப்பல் செய்து விடுவது', 'முழங்காலை நனைத்துக் கொண்டு நின்று, தெருவில் ஓடி வருகின்ற வெள்ளத்தை கரிகாலன் பாணியில் அணை கட்டி வெடிவாணரின் வளவுக்குள்ளை விடுகின்றது' போன்ற வித்தைகளைக் கற்றிருந்தால் இந்த மார்கழி மழை கூட ஒரு பெரிய பிரச்சனை கிடையாது.

ஒட்டுமொத்தமாகக் கூறுவது என்றால் இடை இடையே வந்து போகின்ற பேச்சுவார்த்தைக் காலகட்ட குதூகலம் போல மார்கழி விடுமுறை இருக்கும். இதிலே வசதி என்னவென்றால் இந்த கண்காணிப்புக் குழு போன்ற பிரச்சனை ஒன்றுமே கிடையவே கிடையாது.

வழமைபோல ஒரு பழைய சூட்கேசுடன் மாமா வந்து இறங்கினார். அதற்கு இரண்டு பூட்டு போட்டுப் பூட்டி வைத்திருப்பார். சூட்கேசுக்குள் முகச்சவரம் செய்வதற்கான சவர அலகு, சின்னக் கண்ணாடி மற்றும் தட்டுமுட்டுச் சாமான்களுடன் ஒரு கால்சட்டையும் இரண்டு மூன்று சட்டைகளுடன் ஒரு கிழிந்த பெனியனும் இருக்கும். நிச்சயமாக சாரம் மற்றும் துவாய் வைத்திருக்க மாட்டார். இரண்டு நாளைக்கு ஒரு தடைவை நாங்கள் தான் அவற்றை அவருக்கு 'சப்ளை' செய்ய வேண்டும்.

இந்த சமாசாரங்களுக்கும் அப்பால் ஒரு புத்தம் புதிய கத்தி அல்லது புது மண்வெட்டி, வாள் அல்லதும் போனால் கூர்மையான ஒரு கோடாலி நிச்சயமாய் சூட்கேசுக்குள் வைத்திருப்பார். பழைய சிங்களப் பேப்பர் ஒன்றில் மிகக் கவனமாகச் சுற்றப்பட்டு, அடிப் பெட்டிக்குள் இது பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். யாராவது இதைப் பார்த்தால் மாமா ஏதோ பெரிய சண்டியர் என்று நிச்சயமாக நம்புவார்கள்.

பதினாறு வயதில் அப்புவிடம் அடிவாங்கிக் கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போனவர்தான் இந்த மாமா. 'முற்றத்துக் கொடியில் காய்ந்து கொண்டிருந்த அப்புவின் கோமணத்தில் முடிந்திருந்த இருபது ரூபாயைக் களவெடுத்துக் கொண்டு ஓடிப் போய்ட்டான்'- ஆச்சி அலுக்காமல் அடிக்கடி இதைச் சொல்லுவா.

டிக்கட்டும் எடுக்காமல் இரயில் ஏறிப் போனவர் சிங்களம், இங்கிலீஸ் எல்லாம் அளவாகப் படித்து இன்றைக்குப் பெரிய ஒரு அரசாங்க உத்தியோகத்தர். இப்போ அநுராதபுரத்தில் இருந்து இருபது மைல் தூரத்தில் இருக்கின்ற ஒரு சிங்களப் பகுதியில் 'பெரும் தெருக்கள் திணைக்களத்தில்' ஸ்டோர் கீப்பராக வேலை செய்கிறார்.

அடிக்கடி வேலை நிமித்தம் காரணமாக அவருக்கு இட மாற்றங்கள் கிடைக்கும். விடுமுறைக்கு வந்து போகிறபோது தவறாமல் புதுக் கத்தி, கரண்டி, கோடரி என்று விதம் விதமாய்க் கொண்டு வந்து அம்மா, பெரியம்மா, சின்னம்மாவுக்கு கொடுத்து, பதிலாக உடைந்து முறிந்த பழைய சாமான்களை அள்ளிக் கொண்டு போய் கணக்குக் காட்டுவதில் ஆள் ஒரு பெரிய கில்லாடி. அவருடைய இந்த சேவைக்காக யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் மேலதிக உபசரிப்புகள் எப்போதும் அவருக்கு உண்டு.

இது மட்டுமல்லாது 'தடியன்', 'எருமையன்', 'குத்தியன்' என்று அப்பா, பெரியப்பா மற்றும் சின்னய்யாவை, அவர்கள் இல்லாத சமயமாகப் பார்த்து மாமா திட்டுவதைப்பற்றி மூன்று பெண்களும் கண்டு கொள்வதும் இல்லை.

மாமா வந்தால் எங்களுடைய வீட்டில் தான் தங்குவார். அந்த இரண்டு மூன்று கிழமைக்குள் மாமா நடத்துகின்ற தர்பாரில் அம்மா மனம் கிழிந்து, இட்டிலி அவிக்கின்ற துணிபோல நொய்ந்து போய்விடுவாள்.

"இவருக்குத் தான் ஏதோ ஒரு பெரிய குறு நில மன்னன் என்ற நினைப்பு." ஆத்திரத்தில் அம்மா ஒரு தடவை வாய் விட்டுக் கூறினாலும் இது மாமாவுக்கு கேட்டு விட்டதோ என்று பயந்து போனாள்.

நல்ல வேளை அது எனக்கு மட்டும் தான் கேட்டது. ஆனால் எனக்கு மாமாவைப் பார்க்கின்ற போதெல்லாம் குறுநில மன்னனைப் போலத் தோன்றியதே இல்லை. கல்கியின் தொடர் கதையில் வருகின்ற வீர பாண்டியனின் நினைவுதான் வரும். வீரவாளை இழந்து விட்ட பின்னரும் கம்பீரமாகக் குரல் எழுப்பிப் பாட்டுப் பாடிக் கொண்டு திரிகின்ற சுந்தர பாண்டியன்.

கல்கியின் கதையில் ஒரு வசதி இருக்கிறது. அரசன் பிடிபட்டாலோ அல்லது கொல்லப்பட்டாலும் பிரச்சினை முடிந்து போவதில்லை. இந்த மணிமுடியையும், வீரவாளையும் மட்டும் எங்காவது ஒளித்து வைத்துவிட்டால் போதும். பிறகு சமயம் பார்த்து அந்த வீரவாளையும், முடியையும் யாராவது தூக்கிக் கொண்டு மறுபடி ஆட்சியைப் பிடித்துவிடலாம். நல்லகாலம் இந்த வசதி இப்போது கிடையாது. இருந்தால் யாருடைய துப்பாக்கியை யார் எடுத்துக் கொண்டு வந்து நிற்பார்கள் என்று சொல்ல முடியாது.

மாமா வீரவாளை வெகு பத்திரமாக எங்கோ ஒளித்து வைத்திருப்பதாகவே எனக்குத் தோன்றும்.

எங்களுக்கும் இந்த மாமாவினால் பெரிய ஆக்கினை. ஏதோ ஆபத்து சமயத்துக்கென்று தயாராக வைத்திருப்பதைப் போல அவர் வைத்திருக்கும் ஒரே பெனியனையும் ஜட்டியையும் நானும் தம்பியும் தோய்த்துக் கொடுக்கவேண்டும். கை படாமல் அதைத் தோய்த்து எடுத்து அலசிக் காயப்போடுவது NASA வின் புது முயற்சி போன்ற ஒரு அபூர்வமான வேலை.

இதை விட அவருடைய சாப்பாட்டுக் கோப்பை, தேத்தண்ணிக் கோப்பைகளைக் கழுவுவது, கடைக்குப் போய் அவர் சொல்லுற சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவது, சைக்கிளின் பின்னால் அவர் இருக்க, வேர்வை வழிய வழிய சைக்கிள் மிதிப்பது, வழியில் திடீரெனச் சைக்கிளை விட்டுக் குதித்து யாருடனாவது வம்பளக்கும் போது மிகப் பொறுமையாக காத்திருப்பது என்று பல விதமான வேலைகளும் எமக்கு இருக்கும்.

எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு விடுவோம். மாமா கடைசியாய் யாழ்ப்பாணம் கூட்டிக் கொண்டு போய்க் காட்டுகின்ற படத்துக்குக்காகவும், மலாயன் கடை வடை, தேத்தண்ணிக்காகவும் இன்னும் எத்தனை வந்தாலும் தாங்கிக் கொள்ளலாம்.

"மாமாவுக்கு ஏன் மாமி இல்லை" என்று மிக நீண்ட காலமாக எனக்குள் குடைந்து கொண்டிருந்த கேள்வியை ஒரு நாள் பொறுக்க முடியாமல் அம்மாவிடம் கேட்டு விட்டேன்.

ஒரு தடவை என்னை முறைத்துப் பார்த்தாள். "உனக்கு என்னத்துக்கடா?" என்று முறுகல் முறுகி விட்டு " மாமி செத்துப் போய்விட்டார்" என்று அம்மா சொல்லியதை நான் நம்பவில்லை.

அம்மாவும் பெரியம்மாவும் குசு குசுக்கின்ற போது மிகத் தந்திரமாக ஒட்டுக் கதை கேட்டுத் தம்பி தான் விசயத்தை ஒரு நாள் கூறினான். ஒட்டுக் கதைகள் கேட்டு ஆளுக்கு ஆள் பிரச்சனைகள் உண்டு பண்ணுவது, இவனுக்கு கில்லி விளையாட்டுப் போல ஒரு விளையாட்டு.

இவனைப் பார்த்தால் ஒட்டுக் கதை கேட்கின்றான் என்று யாருமே நம்ப மாட்டார்கள். அயன்ஸ்டினின் ஏதோ ஒரு கொள்கையை எடுத்து பரீட்சித்துப் பார்ப்பதைப் போல பரபரப்பாக ஏதோ செய்து கொண்டிருப்பான். கைகள் கிறு கிறுவென வேகமாக வேலை செய்யும். நெற்றியையும் கண்களையும் அடிக்கடி சுருக்கியும் விரித்தும் தன்னுடைய மூளை அந்த இடத்தில் இல்லை என்று காட்டிக் கொள்வான், சில சமயம் தன்னுடைய பாட்டில் ஏதோ புலம்புவான். காதுகளை மட்டும் தன்னுடைய இந்த வேலைகளோடு எதுவும் சம்பந்தம் இல்லாமல் தள்ளி வைத்துக் கொள்வான். அதை எத்தனை பாகையில் சரியாக சரித்து வைத்துக் கொள்வது என்பது அவனுக்கு மட்டும் தெரிந்த கலை.

"மாமி எப்பவோ ஓடிப்போய்ட்டா."

எனக்குக் கண்ணீர் வந்தது. பாவம் மாமி எவ்வளவு பொறுமையாய் இருந்திருப்பாள். மூவேந்தர்களுக்குள் இருந்திருக்கக் கூடிய அறிவு குறைந்த ஒரு மூட வேந்தனைப் போல் மாமா போட்ட மிக மட்டமான அட்டகாசங்களை எல்லாம் பொறுத்துக் கொண்ட வாயில்லாப் பூச்சி.

அடிக்கடி மாமி கிணற்றுக் கட்டில் குந்தி இருந்து கண் கலங்குகின்ற காட்சி எனக்குள் வந்தது. அவள் கண்ணீர் கலந்த தண்ணீரைத்தான் சூழ இருந்த இந்த எல்லாக் குடும்பங்களுக்கும் குடித்திருக்கும். ஆனால் மாமியின் மீது எந்த ஒரு கருணையும் காட்ட மறுக்கின்றது.

"மாமி ஓடிப் போயிருக்க மாட்டா, மாமா தான் துரத்தி விட்டிருப்பார்." நான் இப்படிச் சொன்னதையும் கேட்டு வைத்துக் கொண்டான் தம்பி. நேராக பெரிம்மா வீட்டுக்குப் போனான். போனவன் சின்னக்காவிடம் போட்டுக் கொடுத்து நல்ல பிள்ளை என்ற பட்டத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டான்.

தெருவில போன ஓணானை மடியில பிடிச்சுக் கட்டிவைச்ச மாதிரித்தான் என்னுடைய தம்பி. ஒரு மாதிரியான நிலையில் தான் தம்பியுடனான எனது வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. அடிக்கடி என் காலை வாரிவிட்டு விடுவான்.

"வர வர உன்னுடைய பழக்கங்கள் சரியில்லை.... ஒரு இத்துனியாய் இருந்து கொண்டு பெரிய விசயங்களுக்கை தேவையில்லாம மூக்கை நுழைக்கின்றாய். குஞ்சப்பாட்டை சொல்லட்டே..." சின்னக்கா மிரட்டினாள்.

அவள் லேசில சொல்லமாட்டாள். சொன்னால் அவள் தார கடிதங்களைக் குடுக்க இனி வேற ஆளத்தான் அவள் பார்க்க வேண்டும்.

மாமியால் தாங்க முடியாத மாமாவின் அட்டூழியங்களை எல்லாம் என்னுடைய அம்மா என்ன வென்று தலைக்கு மேல் தாங்குகிறாள் என்பது எனக்கு அதிசயமாய் இல்லாவிட்டாலும், அது அற்புதங்களில் ஒன்றாகவாவது இருக்கக் கூடியது என்று தோன்றியது.

ஒட்டுக் கதை மன்னன் இதையும் கண்டு பிடித்துச் சொல்லி விட்டான். எங்களுடைய புது வீட்டைக் கட்டி முடிக்க வட்டியே இல்லாமல் இருபது ஆயிரம் ரூபாய் மாமா கொடுத்த கதை தெரிந்த பின்னர், அம்மா மிகவும் நியாயமாய் நடப்பதாகவே எனக்குத் தோன்றியது. நீதி நியாயங்கள் தெரிந்தவள்.

மாமா இந்த முறை வரும் போது எப்படியாவது எங்களுடைய ரேடியோவைக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கையோடு நானும் தம்பியும் இருந்தோம். ஆனால் அவர் வழமை போல கொண்டுவரவில்லை. எனக்கும் தம்பிக்கும் சரியான கோபம் வந்தது. அவருக்கு முன்னால் காட்டிக்கொள்ளவில்லை. அது சாத்தியமான விடயமும் இல்லை.

இந்த ரேடியோப் பிரச்சனை ஒரு நீண்ட காலப்பிரச்சனை. அப்பாவிடம் ஒரு பழைய பிலிப்ஸ் ரேடியோ இருந்தது. ஆறு மாதத்துக்கு ஒரு தடவை அதற்கு மிகப் பெரிய பற்றரி வாங்கிப் போடுவது கட்டுப்படி ஆகாது என்பது கூட பிரச்சனையாக இருந்ததில்லை. வாரத்துக்கு இரண்டு தடவை மாமரத்துக்கும் புளிய மரத்துக்கும் இடையில் தொடுத்து கட்டியிருந்த ஏரியல் அறுந்து விழ விழ மறுபடியும் ஏறிக் கட்ட வேண்டும் என்பது பெரிய பிரச்சனை. ஒரு தடவை மாமரத்தில் ஏறும் போது அப்பா சறுக்கி விழுந்தும் விட்டார்.

"இந்தக் குத்தியனுக்கு ஏன் இந்த வேலை?" என்று அம்மாவிடம் மாமா செல்லமாகத் திட்டினார். அம்மா இதுகளையெல்லாம் காதில் விழுந்த மாதிரியே காட்டிக் கொள்வதில்லை.

"இந்த ரேடியோவை நான் முதியான்சேயிடம் கொடுத்து டிரான்சிஸ்டர் ரேடியோவாக மாற்றிக்கொண்டு வருகிறேன்" என்று கூறிக் கொண்டு போனவர் தான் இரண்டு வருடமாயும் திருப்பிக் கொண்டு வரவில்லை. ஒவ்வொரு முறையும் வரும் போது அடுத்த முறை கொண்டுவருவதாக சளைக்காமல் கூறுவார்.

'கழுவிக் காயப் போடும் போது மாமாவின் கோவணத்துக்குள் காஞ்சோண்டி இலையைப் பூசி விடவேண்டும்.' தம்பி கண்ணி வெடி வைப்பதற்குத் திட்டம் போட்டது போல திட்டம் போட்டான்.

இவனுடன் சேர்ந்து திட்டம் போடுவது காஞ்சோண்டி இலையை நானே பூசிக் கொள்வதை விட மோசமான நிலைமைக்கு என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடும். இது எனக்குத் தெரியும். அதனால் அவனுடைய திட்டம் பிடித்திருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே நிராகரித்து விட்டேன்.

'சமாதான ரீதியான ஏதாவது திட்டம் போட்டால் தான் சரி' என்று நான் கூறியதை தம்பி சற்று சந்தேகத்துடனேயே பார்த்தான்.

சற்றும் எதிர்பாராமல் அம்மாவே ஒரு திட்டம் போட்டுக் கொடுத்தாள். "டேய் நீங்கள் இரண்டு பேரும் மாமா போகிற போது அவரோடையே போய், வரும் போது ரேடியோவையும் எடுத்துக் கொண்டு, மாமா வாங்கித் தார அரிசியையும் கொண்டு வாங்கோவன்டா."

மாமாவுக்கும் இந்தத் திடீர்த் திட்டம் பிடித்துக் கொண்டது ஏன் என்று பிறகு தான் எனக்கும் தம்பிக்கும் தெரிய வந்தது. அவர் சில மூட்டைகளை அநுராதபுரத்திற்கு கடத்தல் செய்ய என்னையும் தம்பியையும் நம்பி முழு ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்.

புது வருடம் முடிந்ததும் மாமாவின் விடுமுறையும் முடிவுக்கு வந்து விட்டது.

வெங்காயம், செத்தல் மிளகாய், பாணிபோட்ட போயிலை சகிதம் இணுவில் ஸ்டேசனுக்குச் சென்று ரெயின் எடுப்பதற்காக நாங்கள் வெளிக்கிட்டோம்.

வேலிக்குப் பின்னால நின்று சர சர என்று சத்தம். பெரியம்மா அவரமாய் ஆனால் பதுங்கிப் பதுங்கி வந்தாள்.

பெரியம்மா முன் வாசல் வழியால் எங்கட வீட்டுக்கு வந்ததை ஒரு நாளும் நான் கண்டதேயில்லை. எப்பவும் அவள் பொழுது விழுந்ததுக்கும் பிறகு: வேலியைப் பொத்துக் கொண்டு, கிணத்தடிப் பக்கமாய் நின்று, திடீரென்று ஒரு மரத்துக்குப் பின்னாலை அல்லது

ஆட்டுக் கொட்டிலுக்குள் பதுங்கி இருந்து அதிரடியாய் வந்து தரிசனம் தருவாள். அவளுக்கு என்ன பாதுகாப்புப் பிரச்சனை என்று கரிசனையாய் கேட்டறிய யாருமே யோசித்ததில்லை.

கையில் கட்டுக் கிளுவம் இலையோட வந்த பெரியம்மா தம்பியின்ட காதுக்குள்ளை சொன்னாள் "ஆளுக்கொரு மூட்டையோடை வந்திடுங்கோடா."

அநுராதபுரம் ஸ்டேசனில இறங்கி மாமாவின் குவாட்டசுக்கு போவதற்கான பஸ்சில் ஏறும் வரை பட்டவேதனைகளை சொல்ல முடியாது. என் தம்பிக்கு கை வீங்கியே விட்டது. இரகசியமாய் அழுதிருப்பான் போலவும் தோன்றியது.

குவாட்டசுக்கு அருகிலேயே பஸ் நின்றது. இறங்கியதுமே மாமாவை எதிர்பார்த்துக் காத்திருந்தது போல லொக்கு பண்டா எங்களடிக்கு வந்து விட்டான். அவன் தான் அந்தக் குவாட்டசுக்கு காவல்காரன். இவனுக்கு காவலுக்கு இரண்டுபேரைப் போட வேண்டும் போல எனக்கிருந்தது.

"ஐயா" என்று சிங்களத்தில் பணிவாக அழைத்தவன் தன்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களை மாமாவுக்கு தெரிவித்தான். மாமாவும் பதிலுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

லொக்கு பண்டா எங்களை ஆச்சரியமாகப் பார்த்தான். எங்களை மாமா சிங்களத்தில் அறிமுகம் செய்து வைத்தார்.

"ஓ.." என்று இழுத்தவன் "ஸ்கூல் எல்லாம் லீவு தானே இப்ப" என்று தமிழில் எங்களைப்பார்த்துக் கூறினான்.

மூட்டைகளை வெகு அனாயாசமாகத் தூக்கிக் கொண்டு வந்து இறக்கி வைத்தான். மாமாவின் இருப்பிடம் எனக்கு மிக்க அசௌகரியமாக இருந்தது.

'எங்களுடைய ஆட்டுக் கொட்டில் இதைவிடப் பெரிசு' தம்பி குசு குசுத்தான். அவனுடைய காலில் நான் ஒரு மிதிமிதிக்க அமைதியாகி விட்டான்.

லொக்கு பண்டா காலையில் வருவதாகக் கூறி புறப்படும் போது "பெரிய மாத்தையா வந்து விட்டாரா?" என்று மாமா கேட்டார்.

"மாலையிலேயே வந்து விட்டார்" என்று கூறியபடி இருட்டுக்குள் போய் மறைந்துவிட்டான்.

"மாமா ரேடியோ எங்கே?"

லொக்கு பண்டா போனதுமே ஆவலாய் கேட்டேன். அதை ஒரு தடவையாவது பார்த்துவிட்டால் பட்ட கஸ்டங்கள் நீங்கி விடும் போல இருந்தது.

"இப்ப படுங்கோடா. அதையெல்லாம் காலையில பார்க்கலாம்" என்று கடுமையாகக் கூறினார்.

ஒரே ஒரு மரக்கட்டில் இருந்த அந்த இடத்தில் எப்படி படுப்பது என்று தீவிரமாகத் தம்பி யோசித்தான். மாஜிசியன் சர்க்காரைப் போல மாமா ஒரு இடத்தில் கைவைத்து இரண்டு சாக்குகளை எடுத்து தந்தார்.

"இதிலை படுங்கோ. சாராத்தாலை போர்த்துக் கொள்ளுங்கோ"

எனக்கும் தம்பிக்கும் நித்திரை வரவில்லை. மாமாவின் குறட்டை சத்தம் கேட்டதும் தம்பி துள்ளி எழுந்தான். அந்த இருட்டுக்குள் பரபரப்பாக எதையோ தேடினான்.

கள்ள நாய். இவன் மாமாவின் காசை ஏதும் களவெடுக்கின்றான் போல. எனக்கு ஆத்திரம் வந்தது. 'மாமாவை எழுப்பிச் சொல்லுவமோ' என்று நான் நினைக்க, மறுபடியும் என்னருகில் வந்து படுத்தான்.

மெல்ல என்னை சுரண்டினான். நான் ஆத்திரத்தில் பேசாமலே இருந்தேன்.

"ரேடியோ இருக்கிறது" என்று கூறினான். நான் திரும்பவே இல்லை. ஆனால் மனதுக்கு சந்தோசமாக இருந்தது. நிம்மதியாக நித்திரை வந்தது.

பரபரப்பாக காலையில் எழுந்த மாமா "இரண்டுபேரும் வெளிக்கிடுங்கோ" என்று அவசரப்படுத்தினார். எங்கு எதற்கு என்ற எந்த விபரமும் மாமா வழமையாக கூறுவதில்லை.

பாணிபோட்ட போயிலை மூட்டையில் இருந்து நல்லதாய் இரண்டு போயிலை கட்டுகளைத் தேடி எடுத்துக் கொண்டார். யாரையோ முக்கியமாக சந்திக்கப்போகின்றார் என்று நினைத்தேன்.

அந்த குவாட்டசை விட்டு வெளியேறி இன்னொரு குச்சு ஒழுங்கை வழியாக சிறிது தூரம் நடந்தோம். ஒரு சிறு கல் வீட்டுக்கு முன் நின்றார். எங்கள் இருவரையும் பார்த்தார்.

"ஒரு பிரச்சனையும் இல்லாமல் அமைதியாய் இருக்கவேண்டும்" என்று மிரட்டல் தொனியில் கூறினார். இப்படியான சந்தர்ப்பங்களில் என்னுடைய தலை எனக்கும் தெரியாமல் தானாகவே ஆடிவிடும். தம்பி யோசித்துத் தான் ஆட்டுவான்.

"பின்னாலேயே வாங்கோ"

மூங்கிலால் செய்த படலையை திறந்து கொண்டு மாமா அந்த வீட்டு வளவுக்குள் காலடி வைத்தார். எனக்கு ஒரே பரபரப்பாக இருந்தது. சிங்கள மாமியைத் தான் சந்திக்கப் போகின்றோமோ?

வீட்டுக் கதவைத்தட்ட ஒரு பெண்மணி கதவைத்திறந்தாள். அழகான பெண்மணிதான். மாமியா ஏற்பதற்கு எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை நான் தயார்.

"நோனா" சிங்களத்தில் மாமா கூறினார்.

"ஓ! யாப்பண இரிந்து வந்ததா?........ உல்லுக்கு வந்தி கொஞ்சம் இரிங்க."

அந்தப் பெண் உள்ளே சென்று விட்டார். நானும் தம்பியும் ஒருவரை ஒருவர் கண்களால் பார்த்துக் கொண்டோம். தம்பியின் முகத்தில் பெரும் விசமம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

மாமா போயிலையை இரண்டு கைகளாலும் ஏந்தி ஒரு வீரனைப்போல தயாராக நின்று கொண்டிருந்தார்.

இரண்டு நிமிடத்தில் யாரோ வரும் காலடிச்சத்தம் கேட்க மாமா பரபரப்பாகினார்.

வெறும் மேலுடன், கண்ணாடியும் சாரமும் அணிந்த ஒரு மனிதர் வர தடாலென்று மாமா சரிந்து விழுந்தார்.

மாமாவுக்கு என்ன? நான் திடுக்கிட்டேன்.

"மாத்தையா! புத்தாண்டு வாழ்த்துக்கள்"மாமாவின் குரல் பாதாளத்தில் இருந்து கரகரப்பாக கேட்டது.

"ஓ. கே. நட்ராஜா" மாத்தையா கட்டைக் குரலில் கூறினார். அவர் தான் மாமாவின் மேலதிகாரி.

ஏதோ ஒரு வளையில் மாட்டிக் கொண்ட கரடியைப் போல், மிக மெல்லமாக, கஸ்டப்பட்டு எழுந்த மாமா, சளைக்காமல் தனது முதுகை வளைத்து குனிந்து மாத்தையாவிடம் பாணிப் போயிலையை நீட்டினார்.

பாணிப்போயிலையைக் கண்டதும் மாத்தையாவின் விரிந்த முகம் அகலப்பக்கமாக இன்னமும் விரிந்தது.

தம்பியைப் பார்த்தேன். காணக் கூடாததைக் கண்டதைப் போல் அதிர்ச்சியில் நின்று கொண்டிருந்தான். மறுபடி அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் இருந்து, இரயில் வண்டி புறப்படும் வரை எதைப்பற்றியுமே அவன் மூச்சே திறக்கவில்லை.

இப்போதெல்லாம் மாமாவைப் பார்க்கின்ற போது எனக்கு பாண்டியனின் நினைவு வருவதேயில்லை. வளைந்து போன ஒரு வாளின் நினைவு மட்டும் மறுபடி மறுபடி வந்து தொலைக்கின்றது.

**ஜேர்மன் 'பூவரசு' இதழ்நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது.**

Life insurance • Critical Illness • Disability • Travel Insurance
Mortgage Insurance • Investments • RESP • RRSP

B.V.F
BRIGHT VISION FINANCIAL CORP.
Securing your Family's Future

85 வயது வரைக்கும், எந்த வருத்தம் இருந்த போதிலும் மிகக் குறைந்த மாதாந்த கட்டணத்தில்
Non-Medical & Funeral insurance, மற்றும் Medical Insurance

குடும்ப அல்லது தனி ஆள் ஒருவரின் வருமானத்திற்கேற்ற காப்புறுதி வேண்டுமா
20க்கும் மேற்பட்ட முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்களுக்கேற்ற
காப்புறுதியைத் தெரிவு செய்ய எம்மை நாடுங்கள்.

**NOW HIRING!**
Full time / Part time
Insurance Agents / RESP Rep's / Staff Employees
Free Classes for Agents*
*restrictions may apply



**416 • 844 • 7390**
Free quote! House calls also available.

**Varna Kanapathippillai, B.Sc.(Eng).**
President / Insurance Advisor
416 • 844 • 7390
insurance@brightvisionfn.com | vwww.brightvisionfn.com

416•623•4937
416•321•0413
80 Nashdene Road Unit B28
Scarborough, ON M1V 5E4

STANDARD LIFE · AXA PROTECTION FINANCIÈRE · INDUSTRIAL ALLIANCE · UL Mutual · Assumption Life · Equitable Life of Canada · Desjardins · Canada Life · BMO Insurance · RBC Insurance · Unity Life of Canada · TRANSAMERICA LIFE CANADA · Manulife Financial · Empire Life · Sun Life Financial



# RITHI TRAVELS



TORONTO - MONTREAL - TORONTO
**BUS SERVICES**

உங்கள் இல்லத்து வாசல் முதல் சென்றடையும் வாசல் வரை
DVD யுடன் இனிதான இளைப்பாறிய பயணம்
We Provide all kind of charter services with 7, 14 and 24 Passengers
WE ALSO OFFER SPECIAL DELIVERIES AND OTHER PERSONALIZED SERVICES
*எரிபொருளின் விலை ஏற்றத்தினால் எமது கட்டணங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

40$ one way

Toronto - 416 887 3350 Montreal - 514 802 3350
Pick-up & Drop off Limited Area Only SERVICES NOW AVAILABLE 7 DAYS A WEEK

# கவித்தூறல்

## இலையுதிர்காலக் குறிப்புக்கள்...

1 .
தொன்மைக் கட்டிடங்கள் நிறைந்த
நகருக்குள் நுழைகிறேன்

ஆதி மணத்தை நுகர்ந்தும்
அடையாளந் தெரியாது போன
தொல் குடிகளின் சாட்சியங்களை
தடவிப் பரிசித்துக் கொண்டும்
நிலம் கிண்டும் தீவிரத்தோடு
புகுகிறேன்

சட்ட ஓவியங்களும்
சிலைகளும்
சொல்லிச் சொல்லி ஓயும் கதைகளை
அசைபோட்டவாறு நகர்ந்து
பூங்காவில் சரியும் என் முன்
நீண்டு படுத்திருக்கிறது
தெரு

இலைகள் உதிரும் மரங்களை
முத்தமிட்ட பின்னும்
தீவிரத்துடன் அலையும் காற்றின்
கைகளுக்குள் சிக்கித் தவிக்கிறது
இலையுதிர் காலமில்லா நாட்டில்
பிறப்புவிக்கப்பட்ட உடல்

2.
மஞ்சள் இலைகள் நான்கு
சிவப்பு நான்கு
பிறகு மண்ணிறமும்
போனால் போகுது பச்சையும்
நன் நான்கு இலைகள்
வேணும்

பசை கொண்டு இலை ஒட்டி
செய்யப்பட்ட மரத்தை
வரவேற்பறையில் நிறுத்துவேன்
நீங்கள் வருவீர்கள்
என் வீட்டுக்கு
என்ன இது
யார் செய்தது
நல்லா இருக்கு
கூட இலைகள் ஒட்டியிருக்கலாம்

என்னிடம் பதில்கள் இருக்கும்
எப்பவும் போல

பால்கனியின் கண்ணாடிக் கதவுகள்
அறைந்து அறைந்து திரும்பும்
காற்றையும்
அது அள்ளி வந்த
குளிரையும்
கதவின் வழி
பொட்டலங் கட்டிக் கொண்டு வரும்
உங்கள் வருகை

உங்கள் மீளலின் பின்
கூட்டி அள்ளுவதற்கு சரியாக இருக்கும்
இலைகளையும்
குளிர்ப் பொட்டலங்களையும்

அந்தப் பின்னிரவில்
என் கனவுகளில் முளைத்தெழும்
மரங்கள் இலையுதிர்க்கால
காற்றில் குளிர் இருக்காது

கிழிந்த போர்வைக்குள்
மடிந்துறங்கும் என்னை
மொட்டை மாடி நட்சத்திரங்கள் தாலாட்டும்

**- மயூ மனோ**

## காத்திருக்கிறேன்

வானில் ஒரு நிலவுதான்
என் வாழ்க்கையில் நீ மட்டும் தான்

நிலா தேய்பிறை ஆகலாம்
நான் கொண்ட காதல் தேய்ந்து விடாது

சூரியன் உதிக்கையில் உன் முகம்
சூரியன் மறைகையிலும் உன் முகம்
என் விம்பத்தில்

சுட்டெரிக்கும் சூரியன் போல்
கொதிக்கின்றது காதல் காய்ச்சல்
காதல் காய்ச்சலுக்கு மறந்து உன்
அன்பு மட்டும் தான்

எப்போது என்தன் காய்ச்சலை
குணப்படுத்துவாய்
அந்த மூன்றுசொல் வார்த்தை கேட்க
தவமாய் காத்திருக்கிறேன்

- மிதிலா பாலசந்திரன்

# தூயவரே உன் தூய பார்வையை தூவி விடு

ஆண்டவரே அன்புள்ள ஒரு நெஞ்சம்
அவஸ்த்தையில் துடிக்கிறது
அறியலையோ இறைவா நீ இன்னும்
அரவணைத்திடு இறைவா உன் அகத்தால்

முகமறிந்திடாத முத்தமிழ் உறவு
மூச்சிழந்து கிடக்கிறது
அதன் பாச மழையில் நனைந்த
பல உள்ளங்கள் பதறுகிறது
பார்த்திடு இறைவா கண் திறந்து

அனுதினமும் உன்னை போற்றும் உள்ளம்
ஆற்றல் மிகுந்த உள்ளம்
அனைவருக்கும்
அன்பால் உதவிக்கரம் நீட்டும் உள்ளம்
அதற்கு நீ காட்டும் அன்பு இதுவா

உண்ணமுடியாமல் உருக்குலைந்து
ஊமையாகி கிடக்கிறது
உணரலையோ இறைவா நீ இன்னும்

அன்னையவள் அழுதே தீர்க்கிறாள்
ஆறிடாதோ அதன் காயங்கள் என்று
சேயை நினைத்து அழும் தாயின் குரலுக்கு
செவி சாய்த்தருளும் இறைவா

அன்பால் அனைவரையும்
திகைக்க செய்த தாயின் வாழ்வு
அனுதினமும் அழுதே போகுது அதை நினைத்து
அறிந்திடலையோ இறைவா நீயும்

அன்றாட உணவுகூட
அவதியோடு உண்ணுகிறதாம்
அவஸ்த்தையில் துடிக்கிறதாம்
ஆசி வழங்கிடப்பா

அனைவரும் உனையே நம்புகிறோம்
அதன் நலம் வேண்டி
அழுதிடும் எங்கள் குரல் கேட்கலையோ
ஆண்டவரே பாவியான எங்களின்
வேண்டுதலை கேட்டிடும் ஐயா

பரிதவிக்கும் அப்பாவி உள்ளம்
பல்லாண்டு காலம் வாழ்ந்திட
தூயவரே உன் தூய பார்வையை
தூவி விடு அதன் மேல்
துளிர் விடட்டும் ஒரு
தூய உள்ளம் !!!

- சிந்துஜா சுதர்ஷன்

# THE FACE OF A CROW



My eyes sees so much things but,
happiness is black and,
sadness is white.
Colour washed out of my life,
and I hope I will reach that wondrous light,
per say in an eternity.
Roses are red, but why do I only see
a black fume of revenge?
Love is gruesome and it should not be experienced,
because I can't view it, but in my fantasy.
I'm on the streets trying to find an answer to my purpose,
but I guess I won't figure that out because in exactly 2.00 seconds,
I'm going to fall of the very bridge, where I proposed and expressed my love to,
whom denied and threw me over because of my appearance.
1, 2 and AAAHHHH! I'm bewildered. I'm about 20ft down and have approximately
50 ft left to fall, where I remembered those times when love was colourful and vibrant,
where I was not judged for my leprosy, but for my personality.
Hence, I reached the end of my journey and now I have to rest in peace while,
insects, maggots, and crows dissect me, to the core of my body.
At least, they won't run away from
the person I am.

**By: Vilirsa Rajadurai**

**கவிதை தலைப்பை நீங்களே தெரிவு செய்யலாம்!**


**3252 Lawrence Ave East, Suite 6 Scarborough, ON M1H 1A4**
**Fax : 416 273 7606 E-mail : editorial@thooralonline.com**

கலாநிதி.எஸ்.சிவநாயகமூர்த்தி


# ஆசிரிய நியமனத்தின் முதல் அனுபவம்...

எனது ஆசிரிய பயிற்சி முடிந்து 1958ஆம் ஆண்டு தைமாதம் ஆசிரிய நியமனத்திற்காக பொறுப்பாகவிருந்த அரசாங்க, தனியார் முகாமைத்துவ கல்வி நிறுவனங்களுக்கு விண்ணப்பித்திருந்தேன். அக்காலத்தில் ஆசிரியர் நியமனங்களில் ஒரு மந்த நிலையே காணப்பட்டது. ஆசிரியப் பயிற்சி முடித்த பலரும் யாழ்மாவட்டத்திலேயே நியமனங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென முயற்சி செய்தனர். பலர் இரண்டுமூன்று வருடங்கள் வரைகூடக் காத்திருந் துள்ளனர். நானோ இலங்கையில் எப்பாகத்தில் நியமனம் கிடைத்தாலும் போவதற்கு ஆயத்தமாகவிருந்தேன். வீரகேசரிப் பத்திரிகையில் யாழ்ப்பாணத் திலிருந்து கிட்டத்தட்ட 245 மைல்கள் வரை பிரயாணஞ் செய்ய வேண்டிய தொலைவிலுள்ள மலையகத்தைச் சேர்ந்த இறக்குவானை என்னும் பிரதேசத்தில் அமைந்திருந்த இறக்குவானை சென்யோன்ஸ் பாடசாலையில் ஆசிரியர் தேவையென ஒரு விளம்பரத்தைப் பார்வையிட்டேன். உடனடியாகவே அந்த இடத்திற்குப் போகத் தீர்மானித்தேன். அப்போதைய அரசியல் சூழ்நிலையிலும், இடத்தின் தூரம் கருதியும் பெற்றோருக்குச் சற்று விருப்பம் காணப்படாமலே யிருந்தது. எனினும் அப்போது எனக்கிருந்த துணிவும், எவ்வாறாயினும் ஆசிரியர் நியமனத்தைப் பெறவேண்டுமென்ற அவாவும், எனது தன்னம்பிக்கையும் என்னை அங்கு செல்வதற்கு ஊக்கம் அளித்தன.

1958ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாந்திகதி, யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்தேவி மூலம் கொழும்பு சென்று அங்கிருந்து இரண்டாந் திகதி காலை எட்டு மணிக்குப் பஸ் மூலம் இறக்குவானை நோக்கிப் புறப்பட்டேன். போகும் போது மலையக வீதிகளின் சரிவையும் உயரத்தையும் பார்க்கும் போது முதல் அனுபவமாகையால் பயமாகவேயிருந்தது. அன்று மாலை ஐந்து மணியளவில் இறக்குவானை சென்றடைந்தேன். அங்கு எனது தந்தையாரின் நண்பரான வங்கி ஊழியரான ஆறுமுகம் என்பவரின் மகன் தேவசகாயம் என்பவர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார் என்பதை முதலில் அறிந்திருந்தேன். அவரைச்சந்திக்கலாம் என்ற துணிவுடனேயே முதலில் சென்றேன். ஆனால் அங்கு சென்றதும் முதலில் அப்பாடசாலை அதிபராகவிருந்த திரு A.K இராசேந்திரம் அவர்களின் வீட்டிற்கே சென்றேன். அவர்மிகவும் ஆற்றலும் பண்பும் மிக்க அதிபர். அவர் என்னை அன்போடு உபசரித்து வந்த விடயங்களையும் விசாரித்து தங்குவதற்கும் வசதிகளைச் செய்து தந்தார். அத்துடன், இப்பாடசாலையின் மனேஜர் மிகவும் கடினமான சுபாவமுடையவர். இங்கு ஆசிரிய நியமனத்திற்காகப் பலர் வந்து திரும்பிப் போய்விட்டார்கள். நீங்கள் இவ்வளவு தொலைவில் இருந்து வந்து விட்டீர்கள். எதற்கும் முயற்சித்துப்பாருங்கள். அவர் தற்சமயம் வீட்டில் இல்லை வியாழக்கிழமைதான் கொழும்பிலிருந்து வருவார். எதற்கும் ஒரு விண்ணப்பத்தை முதலில் அனுப்பி வையுங்கள் எனக் கூறி அதற்கான ஆலோசனைகளையும் உதவியையும் செய்தார். அவரின் ஆலோசனையின்படி விண்ணப்பத்தைத் தயாரித்து மூன்றாந் திகதி திங்கட்கிழமை இரவே அனுப்பி வைத்தேன். மனேஜர் கொழும்பிலிருந்து வியாழக்கிழமையே வந்து விட்டாரென அறிந்தேன்.. அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு அவரின் காரியாலயத்திற்குச் சென்றேன். முதலிலே அவரின் வீட்டுவாசலில் ஒரு மணி கட்டப்பட்டுள்ளதாகவும் அவரைக் காணச் செல்பவர்கள் அதை அடிக்கவேண்டும் என்றும் அறிந்திருந்தேன். ஆகவே காலை 9 மணிக்கு அங்கு சென்ற நான் முதலில் மணியை அடித்தேன். ஒருவரும் வரவில்லை. ஆனால் உள்ளுக்கு அவர்கள் கதைக்கும் சத்தங்கள் கேட்டன. எனவே உள்ளுக்கு அவர் இருக்கிறார் என்பதை நன்கு அறிந்து கொண்டேன். நான் அங்கு கதவின் ஓரத்தே வெளியில் நின்றபடியே மீண்டும் மணியை அடித்தேன். நேரமோ ஒன்பதரை மணி. ஒருவரும் வரவில்லை. நானோ தொடர்ந்து நின்று கொண்டிருந்தேன். பின்னர் காலை 10மணிக்கு மணியை மீண்டும் அடித்தேன். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மனேஜரின் மனைவியார் வந்து, எதற்காக வந்தீர்களெனக் கேட்டார். நான் மனேஜர் ஐயாவை ஆசிரியர் நியமனம் சம்பந்தமாகப் பார்க்க வந்துள்ளேன் எனக் கூறினேன். அவர் ஒன்றும் கூறாமல் உள்ளே சென்றுவிட்டார். நான் நின்ற இடத்தைவிட்டு அசையவே யில்லை. எனது ஆதங்கம் எல்லாம் நியமனத்தை எவ்வாறாவது பெற்று விடவேண்டுமென்பதாகவேயிருந்தது. நேரமோ பத்தரையாகிவிட்டது. நானோ சலிக்கவில்லை. பத்தரை மணிபோல் மனேஜர் வந்தார். கதவைத் திறந்து உள்ளே வரச் சொன்னார். உள்ளே சென்றேன். நீர் ஏன் வந்தனீர்? உம்மை யார் இங்கு போகச் சொன்னது? எப்படி இங்கு ஆசிரியர் வெற்றிடம் இருப்பதாக அறிந்தீர்? விண்ணப்பம் அனுப்பினீரா? எனப் பல கேள்விகளைக் கேட்டார். நான் அவ்வினாக்களுக்குத் தகுந்த பதில்களை அளித்தேன். பின்னர் எனது ஆசிரிய கலாசாலைப் பெறுபேற்றுப் பத்திரங்களையும், அதிபரின் சான்றிதழையும் பார்வையிட்டார். அதன்பின்னர்அவர் ஒன்றுமே கூறாது உள்ளே சென்றுவிட்டார். நேரமோ காலை 11-00 மணியாகிவிட்டது. நான் உள்ளே நின்ற இடத்திலேயே நின்றேன். 11-15 மணிபோல் மீண்டும் மனேஜர் நான் நின்ற இடத்தினருகே வந்தார். அதிபர் இராசேந்திரம் என்னைப்பற்றி ஏதாவது கூறினாரா? அவர் எல்லாம் என்னைப்பற்றிக் கூறியிருக்கவேண்டுமே! எனக்கேட்டார். நான் அவர் ஒன்றும் உங்களைப்பற்றி கூறவில்லை என்றேன். உமக்குத் தெரியுமா இங்கு நியமனம் பெறுவதற்காகப் பலர் வந்து போய்விட்டார்கள். நீர் இப்போது வந்திருக்கிறீர், உமது சான்றிதழ்பற்றி ஒரு பிரச்சனையும் இல்லை ஆனால் 300ரூபா இப்பொழுது தரவேண்டும் என்றார். என்னிடம் ஆக 50ரூபாதானிருந்தது. அதற்கு நான் இப்பொழுது என்னிடம் 50 ரூபாதானிருக்கிறது. சம்பளம் எடுத்தபின் மொத்தப்பணத்தையும் கொடுத்துவிடுகிறேன் என்றேன். வீட்டிலிருந்து உடனடியாக இப்பணத்தைப் பெற்றுத்தர முடியுமா எனக்கேட்டார். அதுவும் கஷ்டம் என்று கூறினேன். மனேஜர் ஒன்றும் கூறவில்லை உள்ளே போய்விட்டார். நானோ நின்ற இடத்தை விட்டு அகலவில்லை. பின்னர் பதினொன்றரை மணியளவில் என்னிடம் வந்தார். நீர் ஏன் நிற்கிறீர் போகலாம் என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டார். எனக்கு மனத்திலே சற்றுக் கவலை ஏற்பட்டாலும் தன்னம்பிக்கையோடு அங்கேயே நின்றேன். பின்னர் சரியாகப் பகல் 12-00 மணிக்கு என்னிடம் வந்தார். ஏன் நீர் இன்னும் போகவில்லையா? போகலாம் என்றார். பின்னரும் உள்ளே சென்றுவிட்டார். நானோ அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. 12-30 மணிக்கு என்னருகில் மீண்டும் வந்தார். என்ன நினைத்தாரோ தெரியவில்லை இவரின் காரியாலய யன்னலால் பார்த்தால் பாடசாலை அதிபரின் காரியாலயம் தெரியும். யன்னலில் நின்றபடியே பாடசாலை அதிபரை அழைத்தார் இவரைப் பாடசாலையில் அனுமதியும், ஆனால் இடாப்பு ஒன்றும் இவருக்குக் கொடுக்கவேண்டாம் என்று கூறினார். நான் பாடசாலைக்குள் சென்றேன் அதிபர் ஐந்தாம் வகுப்பில் படிப்பிக்கவிட்டார். நான் அவ்வகுப்பில் தமிழ்படிப்பித்துக் கொண்டிருந்தேன். மனேஜர் யன்னலால் பார்த்துக் கொண்டிருந்தார். பாடம் முடிந்ததும் என்னைத் தனது காரியாலயத்திற்கு வரும்படி அழைத்தார். உம்மைப்போல் இன்னொருவரும் இங்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரும் சம்பளம் வந்ததும் முழுப்பணத்தையும் தருவதாகக் கூறியுள்ளார். தராவிட்டால் உங்களிருவரையும் வேலையிலிருந்து நீக்கிவிடுவேன் என்றும் எச்சரித்து அனுப்பினார். நாங்கள் இருவரும் மூன்று மாதங்களாக அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்தோம். மீண்டும் மனேஜரின் வேலைநீக்கம், இடமாற்றம் எனப் பல சவால்களையும் இருவரும் எதிர்த்து, எந்தப் பணமும் கொடுக்காமல் கடமையாற்றிக் கொண்டிருந்தோம். அதிஷ்டவசமாக இலங்கையிலிருந்த முகாமைத்துவப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பொழுது இப்பாடசாலையும் அரசாங்கப் பாடசாலையானது. ஏழாண்டுகள்வரை அங்கு தொடர்ந்து திறமையாகக் கடமையாற்றினேன். பாடசாலையின் பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளராகவும் பணியாற்றினேன். பாடசாலையின் உயர்ச்சிக்காகவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், எம்மாலான செயற் திட்டங்களை அதிபர் ஆசிரியர்கள், பெற்றோரின் ஒத்துழைப்போடு சிறப்பாகச் செய்தோம். பாடசாலையும் மகாவித்தியாலயமானது. பல மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தனர். பெற்றோர், மாணவர்களின் பாராட்டையும் பெற்றோம். எங்களின் துணிச்சலான செயல்களால் இவரின் முகாமைத்துவத்தின்கீழ் சேவையாற்றிய பல ஆசிரியர்களும் நன்மை பெற்றனர். அப்பிரதேச அரசியல்வாதிகள், மக்களின் பாராட்டோடு யாழ்ப் பாணத்திற்கு 1964 இல் இடமாற்றம் பெற்று வந்தேன். ●


DR. ILLANGO & ASSOCIATES
ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT
Dental Office
BRACE FOR A GREAT SMILE
New Location
BRAMPTON
7920 Hurontario St.,
Unit 37
Brampton, ON L6Y 0P7
Tel: 905 457 1700
SCARBOROUGH
3852 Finch Ave. East,
Suite 204 & 303
Scarborough, ON.
Tel: 416 292 7004

# அமைதியை கலாச்சாரம் ஆக்குங்கள்...



உலகெங்கும் அமைதியை உருவாக்குவது பற்றி பேச்சு நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. அமைதியை யாரும் உருவாக்க முடியாது. மோதல்கள்தான் மனிதர்களின் உருவாக்கம். மோதல்களை உருவாக்காமல் விட்டாலே அமைதி தானாக நிகழும். உலகில் பலவகையான மோதல்கள் நிகழ்கின்றன. தனி மனிதன் தனக்குள்ளேயே சில மோதல்களை உணர்கிறான். அது வெளியிலும் நீள்கிறது. குடும்பத்தோடு பக்கத்து வீட்டோடு நிகழும் மோதல்களே சமூகங்களுக்கிடையிலும் தேசங்களுக் கிடையிலும் மதங்களுக்கு நடுவிலும் கூட நிகழ்கிறது.

அதிக மோதல்களுக்கு காரணம் மதங்களே

இந்த உலகுக்கு மோதல்கள் புதிதல்ல. மனித குலம் தோன்றிய காலம் தொட்டு மோதல்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சண்டைகளை அவ்வப்போது சரி செய்யத்தான் பார்த்திருக்கிறார்களே தவிர, நிரந்தரமான தீர்வுக்கு யாரும் முயற்சித்ததில்லை. சண்டை வருகிறபோது சமாதானம் ஏற்படுத்துகிறார்கள். சிறிது காலத்திற்கு பிறகு அது மீண்டும் வெடிக்கிறது. அமைதியின் உறைவிடங்களாய் கருதப்படும் மதங்களின் பேரிலேயே அதிக அளவு மோதல்கள் உலகெங்கும் ஏற்படுகின்றன.

எனவே, அவ்வப்போது சண்டைகளை சரிசெய்வது பற்றி மட்டும் சிந்திக்காமல் நிரந்தரமான தீர்வை நோக்கி நகர வேண்டும். அமைதியை ஒரு கலாச்சாரமாகவே உருவாக்க வேண்டும் என்று கருதினால் முதலில் ஒன்றைப்புரிந்து கொள்ளவேண்டும். ஒரே இரவில் சலாச்சாரத்தை உருவாக்கிவிட முடியாது. தீர்மானம் இயற்றுவதாலோ சட்டம் நிறைவேற்றுவதாலோ கலாச்சாரங்கள் உருவாவதில்லை. ஒரு முழு தலைமுறை அமைதியில் வாழுமேயானால் அடுத்த தலைமுறையில் அமைதி ஒரு கலாச்சாரமாக மலர வாய்ப்பிருக்கிறது. எனவே ஒரு சிக்கலுக்கு உடனடியாக எதையோ செய்யவேண்டும் என்று யோசிப்பதை விட நிரந்தரத் தீர்வு எனன என்று சிந்திப்பதே நல்லது.

நஷ்டம் பிறகு பதட்டம் பிறகு மோதல்

மனிதர்களைப் பொறுத்தவரை எது நிகழ்ந்தாலும் அது ஒருவருக்கு ஆதாயம் தருவதாகவும் இன்னொருவருக்கு நஷ்டம் தருவதாகவும்தான் அமையும். காலங்காலமாகவே உலகெங்கும் இந்தக் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. குடும்பங்கள் மத்தியில் என்றாலும் தேசங்களுக்கு மத்தியில் என்றாலும் நஷ்டம் ஏற்படுகிறபோது கோபமும் பதட்டமும் ஏற்படுமேயானால் அங்கே அமைதி ஏற்பட வாய்ப்பில்லை. எல்லா மனிதர்களுக்குமே வாழ்வின் சில தருணங்களில் சில பாதகங்களும் அநீதிகளும் ஏற்படத்தான் செய்கின்றன. அப்போதெல்லாம் மனிதர்கள் பதட்டமடைகிறபோது மோதல்கள் எழுவது இயற்கை.

அமைதியான மனிதர்கள் உருவாகும்வரை அமைதியான உலகம் என்பது நிறைவேறாத கனவாகத்தான் இருக்கும். இன்று அமைதி குறித்துப் பேசுகிற உலக நாடுகள் கூட தங்களுக்கு சூழ்நிலை பாதகமாக இருந்தால் அமைதி குறித்துப் பேசுவார்கள். சூழ்நிலை சாதகமாக இருந்தால் போர் குறித்துப் பேசுவார்கள்.

கோபத்தின்போது உங்களுக்குள் என்ன உணர்கிறீர்கள்? அசௌகரியத்தைத்தான் உணர்கிறீர்கள். தனக்குத்தானே அசௌகரியத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவரை அறிவாளி என்றா அழைக்க முடியும். உள்தன்மையில் அமைதி நிலவினால் மிகக் கடுமையான சூழ்நிலைகளைக் கூட உங்களால் திறம்படக் கையாள முடியும். உங்களுக்குள் அமைதியை ஏற்படுத்த முடியாதபோது உலகத்திற்குள் அமைதியை எப்படி உருவாக்க முடியும்.

## சத்குரு

வெளிச் சூழ்நிலையால் உங்கள் அமைதியையும் அமைதியின்மையையும் தீர்மானிக்க முடியுமென்றால் நிங்கள் யாருக்கோ அடிமையாக இருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். எனவே உங்களுக்குள் என்ன நிகழவேண்டுமென்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டுமென்றால் அதற்கொரு தொழில் நுட்பம் இருக்கிறது. இன்று நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் வெளியே இருக்கிற உஷ்ணத்தைக் கூட்டவோ குறைக்கவோ உங்களால் முடியும். அதுபோல் உள்நிலையையும் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு வழிசெய்யும் தொழில்நுட்பம்தான் யோகா.

தனிமனிதர் முதலில் அமைதியை தங்கள் இயல்பாக்கிக் கொள்ள வேண்டும்

உள்நிலை அமைதி என்பது ஒரு வகை ரசாயனம். ஒரு மனிதர் மனத்தளவில் பதட்டமாகிறார் என்றால் அவருக்கு சில மருந்துகளைக் கொடுக்கிறார்கள். அதாவது மருந்தின் வழியாக ஒரு வித ரசாயனம் அவருக்குள் செலுத்தப்படுகிறது. மகிழ்ச்சி, சோகம், பதட்டம், ஏக்கம் எல்லாமே ஒரு வகையான ரசாயனம் தான். ஒரு மனிதன் தனக்குள் சரியான ரசாயனத் தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கென்று ஒரு நாளில் சில நிமிடங்களை ஒதுக்கினால் போதும். அமைதியும் ஆனந்தமும் உங்களுக்குள் இயல்பாகவே தோன்றும். தனி மனிதர்கள் அமைதியானவர்களாக உருவாகாத வரையில் கலாச்சாரத்தில் அமைதி இருக்காது. உலகத்தில் அமைதி இருக்காது. தங்களை மாற்றிக் கொள்ள தனி மனிதர்கள் தயாராகிறபோது அவர்கள் தொடர்பு கொள்கிற வெளியுலகிலும் அதே அமைதியை உருவாக்க முடிகிறது.

யோகப் பயிற்சியின் மூலம் உலக நாடுகளில் யுத்தங்களைத் தடுத்து அமைதியை ஏற்படுத்த முடியுமா என்று சிலர் கருதலாம். இந்த உலகின் வலிமை மிகுந்த நாடுகளையெல்லாம் தலைமை தாங்கி வழிநடத்துபவர்கள் தனி மனிதர்கள் தானே தவிர பிசாசுகள் அல்ல. தங்கள் மனிதத் தன்மையோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் தங்கள் சமூகத்துடனோ, சமயத்துடனோ தேசத்துடனோ சிலர் தங்களை அடையாளப்படுத்தக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனிதத் தன்மையோடு அடையாளப்படுத்திக் கொள்ள வாய்ப்பளித்தால் எந்தச் சிக்கலையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். உள்நிலையில் அமைதியில்லாதபோது எல்லாச் சின்ன விஷயங்களும் பிரம்மாண்ட மோதல்களாக ஊதிப் பெரிதாக்கப்படுகிறது.

இந்த உலகில் பொறுப்புள்ள இடங்களில் இருப்பவர்களை அமைதி நிறைந்த மனிதர்களாக மலரச் செய்தால் அமைதியை ஒரு கலாச்சாரமாக உருவாக்குவது காலப்போக்கில் சாத்தியம் ஆகும்.


ஆனந்த அலை....

**சத்குருவுடன் ஈஷா யோகா**

தமிழில் கற்றுக்கொள்ள வாருங்கள் Toronto - May 11, 12, 13, 2012

உங்கள் வாழ்க்கையில் அமைதி, ஆரோக்கியம், ஆனந்தம் மலர

முன்பதிவு அவசியம்

தகவல்களுக்கு

416 300 3010 / 647 857 ISHA(4742)

www.ishafoundation.org/toronto



நந்தா உணவகம்
NANTHA CATERS
Sri Lankan & Indian Food
Neilson & Finch
வாழ் மக்களுக்கு சுவையான
நற்செய்தி!
உங்கள் பகுதியில் வெகுவிரைவில்
எமது புதிய கிளை
ஆரம்பிக்கப்படவுள்ளது.
Catering , Bakery and Take Out
சிறந்த முறையில் தயாரித்த அறுசுவை உணவுகளை,
அனைத்துவித வைபவங்களுக்கும்
பெற்றுக்கொள்ளுங்கள்.
சனி மற்றும்
ஞாயிற்றுக்
கிழமைகளில்
வாழை இலை
சாப்பாடு!
இப்பொழுது நான்கு இடங்களில்...
Brimley & Steeles - 4915 Steeles Ave. E | Warden & Finch - 3268 Finch Ave. E
Kippling & Steeles - 5010 Steeles Ave. | Neilson & Finch - 5930 Finch Ave. E
Call 416 NANTHA 1 (416 626 8421)



keshini kumarakesary

# PAINTED FACES

The weather changed so suddenly, the rain soaked through my clothes, the chill reaching my bones. I watched as strangers ran for cover. I never quite understood what people had against getting wet. I walked slowly to a local café; it was unusually crowed that day. The aroma of fresh coffee, and the gradual warmth put me at ease. "One black coffee please." There was only one empty seat, I grabbed my coffee and walked toward her. "Mind if I take this seat?" She looked up at me, her eyes were so familiar. "Sure." She hid her face behind her book, actually a comic book. I looked away but couldn't keep my eyes off of her. "What are you looking at?" God was it that obvious."You read comics." "Yes, you sexist." I can't believe this. "I didn't mean it like that; it was just something I noticed!"

She looked away and completely ignored me. She was so familiar, but I couldn't put my finger on it, who does this girl remind me of? As I started to get up she rolled up her sleeve, that's when I noticed her scars. Catching my eyes she turned away. Taking back my seat, I opened my month to speak, but before I could she asked, "So you noticed." I wasn't sure what to say, but it sounded like a statement.

"Yes." "Are you going to ask questions or stare at me the whole time?"

I would have loved to just stare at her, but instead my big mouth blurted out, "I used to cut too." Her expression was hard to read, it actually looked like she had just smelt something bad.

"Guess we all have our problems."

"Yea."

We both looked out the café window, the rain was still pouring, and the streets were empty. A young couple was hand in hand, kissing in the rain. She asked the question no one seems to have time for these days, "What screwed you up?" I just looked at her, thinking about all the possibilities that could have messed up my life: my mother died, my father beat me, crazy love for drugs or even a terrible childhood. Nope, it wasn't that easy for me. While I was coming up an answer I didn't even hear her say,

"I just hate myself."

There it was, I knew right than why she was so recognizable, she was me. Well not exactly me, because I was a guy and she definitely wasn't, but when I looked into her eyes I saw the insecurity I have always felt. We both just looked at each other for what seemed like eternity, she stood up packed away her comic books and silently whispered into my ears, "Good luck." And she walked out of the café into the pouring rain. I drank the rest of my coffee pondering, what she had just said, and realized not everyone is who they say they are, we all have secrets, we all wear masks. I paid for my coffee and headed out. The rain didn't look like it was going to end anytime soon. ■

# அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி

## Amirthalaya Academy of Fine Arts - Toronto/Montreal

பரத நாட்டியம் – மிருதங்கம்
புல்லாங்குழல் – சங்கீதம் – தமிழ்

**Bharathanatyam - Miruthangam**
**Flute - Music - Tamil**



ஆண்டுவிழா / பரீட்சை / பட்டமளிப்பு
சலங்கைபூசை / அரங்கேற்றம்

Annual Function / Exam / Gratuation
Salangai Pooja / Arangettram

Special classes for Junior / Senior,
Kindergarten Students,
University Students and Adults

(Group Classes and Individual Classes
with Flexible hours)

தைப்பூச தினத்தை முன்னிட்டுப் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**Toronto**
**Scarborough** - Finch & Tapscott (Malvern)
**Mississauga** - Derry & Winston Churchill, Central Parkway & Hurontario
**Brampton** - Mavis & Steeles, Father Topin & Bramlea Rd.

**Montreal**
**Laval** - 805 Josaphat-Demers, Laval, QC 117X 3X7 - 450 689 8360
**Montreal** - 419 Saint -Roch, Montreal, QC H3N 1K2 - 514 594 9479

Phone - Toronto : Lalithanjana Kathirgaman
**905 824 0242 / 647 628 3323**

Phone - Montreal : Smt. Vigneshwary Sivaskar
**450 689 8360 / 514 594 9479**



# கிட்ஸ் ப்பியாஸ்டா பொட்டேடோ
## Kids Fiesta potato

### தேவையான பொருட்கள் :

| | | |
|---|---|---|
| உருளைக்கிழங்கு | - | 1/2 கிலோ |
| பூண்டு | - | 2 பல் |
| பட்டர் | - | 2 மேசைக்கரண்டி |
| உப்பு | - | 2 தேக்கரண்டி |

**கடைசியில் பரிமாறும் பொழுது சேர்க்க வேண்டியவை:**

| | | |
|---|---|---|
| செட்டார் சீஸ் ( Cheddar cheese) | - | 2 மேசைக்கரண்டி |
| கெட்டியான தயிர் | - | 1 மேசைக் கரண்டி |
| பொடியாக நறுக்கிய வெங்காயத்தாள் | - | 2 **தேக்கரண்டி** |

### செய்முறை :

அவனை 450 F முற்சூடு செய்யவும்.

முதலில் உருளைக்கிழங்கினை நன்றாக கழுவி 1 இன்ச் துண்டுகளாக நறுக்கி கொள்ளவும். பூண்டினை காரட் துருவது போல துருவி வைக்கவும்.

பிறகு ஒரு நாண் ஸ்டிக் கடாயில் பட்டரினை போட்டு அத்துடன் வெட்டி வைத்துள்ள உருளைக்கிழங்கினை , துருவிய பூண்டு மற்றும் உப்பு சேர்த்து நன்றாக 5 - 6 நிமிடம் வதக்கவும்.

பிறகு வதக்கிய உருளைக்கிழங்கினை அவனில் வைக்கும் ட்ரெயில் கொட்டி அவனில் 10 - 15 நிமிடம் 450 F யில் வைக்கவும்.

இப்பொழுது மிகவும் க்ரிஸ்பியாக உருளைக்கிழங்கு இருக்கும்.

செட்டார் சீஸினை மைக்ரோவேவில் 1 நிமிடம் வைத்து உருகிக் கொள்ளவும்.

இப்பொழுது பரிமாறும் தட்டில் முதலில் உருளைக்கிழங்கினை போடவும்.

அதன் மேல் உருக்கிய சீஸினை ஊற்றி அதன் மேல் தயிர் மற்றும் வெங்காயத்தாளினை சேர்த்து பரிமாறவும்.

# கிச்சன் Corner!

# ஆப்ரிக்கன் ப்ரான் பிரை

### தேவையான பொருட்கள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டைகர் இறால் | - | 10 -15 | மிளகாய்த்தூள் | - | 1 டீஸ்பூன் |
| மஞ்சள்பொடி | - | 1/4 டீஸ்பூன் | உப்பு | - | சுவைக்கு |
| கார்ன் மாவு | - | 1 டேபிள்ஸ்பூன் | மைதா | - | 1 டேபிள்ஸ்பூன் |
| கேசரிகலர் | - | 1 பின்ச் | எண்ணெய் | - | 1 கப் |

அரைத்த புதினா விழுது - 1 டீஸ்பூன்

எலுமிச்சைச்சாறு - 1/2 டீஸ்பூன்

### செய்முறை :

இறாலின் முன் பகுதியின் தோலை மட்டும் உரித்து வால் பகுதியின் தோலை விட்டு விடவும்.

நன்கு சுத்தம் செய்து மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், உப்பு, எலுமிச்சைச்சாறு கலந்து நீர் சேர்க்காமல் வேக வைத்துக் கொள்ளவும்.

இறாலில் புதினா பேஸ்ட்டை தடவவும்.


கேசரிகலர், மைதா, கார்ன் மாவு மூன்றையும் நன்கு கலந்து இறாலில் பிரட்டி, சூடான எண்ணெயில் பொரிக்கவும்.

தடிமனாக கட் செய்து மசாலா தடவி பொரித்த பிரஞ்ச் பிரைஸுடன் பரிமாறவும்.




செட்டிநாடு உலகின் ஒரே
கிங்
King of Chettinad Cuisine
Karaikudi
Essence of South Indian Cuisine
காரைக்குடி செட்டிநாடு உணவகம்
* Dine-In * Private Dining * Banquet Hall * Catering * Take-Out *
Lunch Buffet
Mon - Fri
1225 Kennedy Road, Scarborough
(Between Ellesmere & Lawrence)
416.701.0003
www.karaikudi.ca

# ஹீரோயிசம் - விஜய்




செம மூடில் இருந்தார் விஜய். எல்லாம் "நண்பன்" தந்த பூரிப்பு. எல்லா பிரஸ்மீட்டிலும் யாரிடமோ கோபித்துக் கொண்டு வந்தவர் போலவே இறுக்கமாக இருக்கும் விஜய், இந்த முறை ரொம்பவே ஜோவியலாக இருந்தது பெருத்த ஆச்சர்யம். சுமார் ரெண்டு மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்த விஜய், "வழியெல்லாம் ஒரே டிராபிக் ஜாம். நடந்து வந்தா கூட எப்பவோ வந்திருக்கலாம், ஸாரி" என்றார் மலர்ச்சியான குரலில்.

வசூல் பற்றியெல்லாம் சொல்றாங்க. இதையெல்லாம் மண்டையில ஏத்திக்கிறதா வேண்டாமா என்னும் புரியலை என்று பதிலளித்த விஜய், சில கேள்விகளை "வேண்டாம் விட்ருங்க" என்பது போலவே பதிலளித்தார். நண்பன் கல்விக் கொள்கையை அடிப்படையாக கொண்ட படம் என்பதால் அது குறித்தும் சில கேள்விகள் பறந்தன.

ஆறாவது ஏழாவது படிக்கும் போதே எனக்கு படிப்பு மேல அக்கறையில்லாம போச்சு. அப்பாவோட ஷூட்டிங் போறதுன்னு சினிமா மேல ஆர்வம் திரும்பிருச்சு. என்னை டாக்டராக்கணும்னு அம்மா ரொம்ப ஆசைப்பட்டாங்க. நான் டாக்டராயிருந்தா என்னாயிருக்கும்னு யோசிச்சு பாருங்க என்று கூறும்போதே ஒரு வெட்கச் சிரிப்பு சிரித்தார் விஜய்.

விஜய் சார் பார்க்கத்தான் மூடி டைப். எங்ககிட்ட நல்லா ஜோக் அடித்து கலகலப்பா பழகினார்னு ஜீவாவும், ஸ்ரீகாந்தும் எல்லா பேட்டியிலேயும் சொல்றாங்க. அப்படியா? என்றது இன்னொரு கேள்வி.


படம் ஆரம்பிச்ச சில நாட்களிலேயே ரொம்ப ஃபிரண்ட்ஸ் ஆகிட்டாங்க ரெண்டு பேரும். ஃபிரண்ட்சுன்னு ஆகிட்ட பிறகு இறுக்கமா இருக்க முடியாதுல்ல. ரொம்ப ஜாலியா பழக ஆரம்பிச்சிட்டோம் என்றார் விஜய்.

பஞ்ச் டயலாக், ஹீரோயிசம் இல்லாத "நண்பன்" பெரிய ஹிட் என்பதால் இனிவரும் படங்களிலும் இதே ஸ்டைலை ஃபாலோ பண்ணுவீங்களா? இந்த கேள்விக்குதான் சற்று விரிவாக பேசினார் விஜய்.

எல்லாவற்றையும் ஸ்கிரிப்ட்தான் முடிவு பண்ணுது. ஒரு கதைக்கு பஞ்ச் டயலாக் தேவைன்னா பேசிதான் ஆகணும். ஆனால் மற்ற எந்த படத்திலும் இல்லாத ஹீரோயிசம் 'நண்பன்' படத்தில்தான் இருக்கு. பஞ்ச் டயலாக் பேசினால்தான் ஹீரோயிசம்னு அர்த்தம் இல்ல. அப்படியெல்லாம் பேசாமலே ஹீரோயிசம் காட்டலாம் என்கிறதுக்கு இந்த படம்தான் நல்ல உதாரணம் என்றார் விஜய்.

## நல்ல இதயம் கொண்ட கெட்ட மனிதன்:

# கார்த்தி




சகுனி திரைப்படத்தில் நல்ல இதயம் கொண்ட கெட்ட மனிதனாக நடித்துள்ளேன் என்று நடிகர் கார்த்தி கூறியுள்ளார். சகுனி திரைப்படத்தில் வித்தியாசமான கதாபாத்திரத்தில் கார்த்தி நடித்து வருகிறார்.

இத்திரைப்படத்தின் அனுபவங்களைப் பற்றி நடிகர் கார்த்தி கூறுகையில், நான் ஒரு நல்ல இதயம் கொண்ட கெட்ட மனிதனாக இப்படத்தில் நடித்து வருகிறேன்.

இப்படிப்பட்ட மனிதனின் உண்மையான குணம் வெளிப்படும் போது ஓர் ஆச்சரியத்தை ஏற்படுத்துவது தான் இப்படத்தின் கதை அம்சமாகும். கிராமத்தில் வாழ்கின்ற ஓர் மனிதன் சென்னை போன்ற பெருநகரங்களில் எதிர் கொள்ளும் சவால்களை சகுனி திரைப்படம் வெளிப்படுத்தும்.

சிறுத்தை திரைப்படத்திற்கு பிறகு மீண்டும் சந்தானமும், நானும் இணைந்துள்ளோம். அதனால் நகைச்சுவைக்கு பஞ்சமே இருக்காது என்று கூறியுள்ளார்.



GOLUMBIA VIDEO
WHOLE SALE & RETAIL
MJS Money Transfer World Wide
DVDs ONLY $ 0.99
BUY 10 DVDs GET 3 FREE!
12 LANGUAGES MOVIES
ENGLISH MOVIE RENTAL ONLY 1.99
BLANK DVD'S & CD'S | DVD CASES | ENVELOPES
CD LABELS | AND MORE
ANY FORMAT (DVD, VHS, MD)
CAN BE CONVERTED TO BLUE RAY.
ALL HINDI, TAMIL, TELUGU, MALAYALAM AND
ENGLISH BLUE RAY MOVIES AVAILABLE.
Whole Sale
GOLUMBIA PRINTING
WE PRINT
BUSINESS CARDS, FLYERS, POSTCARD,
BANNERS, SIGNS AND MORE...
1000 BUSINESS CARDS $50 A.Q 14 PT
5000 B/W FLYERS $100 5.5 X 8.5
10000 FULL COLOUR FLYERS $ 374.99 5.5 X 8.5
NOW THE BLUE RAY IS $9.99
THE HIGH DEFINITION EXPERIENCE
DIGITAL MUSICAL RAYS 2011
THE HIGH DEFINITION EXPERIENCE
DIGITAL MUSICAL RAYS
DIGITAL BEST SONGS OF 2010
Queen Street
Clarence Street
Golumbia
Kennedy Road
Steeles Ave
144 Kennedy Road S, Unit 8, Brampton, ON L6W 3G4
Bus: 905-456-8433 Fax: 905-456-8281 www.golumbiavideo.com
BEST
Price, Quality & Service



# கதை...கார்ட்டூன்...காமிக்ஸ்...

## சின்னச் சின்ன சுட்டிகளே!

## இது உங்கள் உலகம்...

**வணக்கம் சுட்டிகளே,**

விடுமுறையை நன்றாக அனுபவித்திருப்பீர்கள் என நம்பு கின்றேன். பள்ளிக்கூடம், படிப்பு என்று மீண்டும் தொடங்கியிரு ப்பீர்கள். ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் மாணவர் களாகிய உங்கள் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தந்திருக்கிறார்கள். அதைத் தவறவிட்டிருக்க மாட்டீர்கள் என நம்புகின்றேன். ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருக்கிறார்கள். பலனுள்ள பல மேலதிக விபரங்களை ontta.org என்ற இணையத்தளத்தில் அறிந்து கொள்ளுங்கள். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள்.

சுட்டிகளே நீங்கள் தொடர இருக்கும் தொடரின் முதலாவது அத்தியாயத்தை விதுரஷனா உதயசங்கர் என்ற மாணவி தொடக்கியிருக்கின்றார். தொடரின் அடுத்த அத்தியாயத்தையும் விறுவிறுப்பாகக் கொண்டு செல்லுங்கள். தொடரக்கூடியதாக அதன் முடிவு இருக்க வேண்டும். மீண்டும் சந்திப்போம்.

அன்புடன் உங்களை நேசிக்கும்,

**மாலினி அக்கா.**

### தொடரின் முதலாம் அத்தியாயம்.

# மர்மம(ா)லை

இயற்கையை நாங்கள் ரசித்ததால், வனமிருகங்கள் பற்றி அறிவதில் எங்களுக்கு ஆர்வம் இருந்தது. சில மாணவர்கள் ஒன்று சேர்ந்து அவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்ய விரும்பினோம். எங்கள் ஆசிரியரும் அதை வரவேற்று ஏற்றுக் கொள்ளவே திட்டமிட்டபடி ஒருநாள் தென்னமரிக்காவில் உள்ள அமேசன் காட்டுப்பகுதிக்குச் சென்றோம். பயங்கரமான காடு, உள்ளே செல்லும்போது பகலிலும் இருட்டாக இருந்தது. பாம்புகள் நடமாடும் இடமென்பதால், அடிமேல் அடிவைத்து மெல்ல நகர்ந்தோம். தற்செயலாகக் குனிந்து பார்த்த போது எனது காலடியில் ஒரு மாலை விழுந்து கிடப்பதைக் கண்டேன். உடனே அதை எடுத்து ஆசிரியரிடம் கொடுத்தேன். அந்த மாலையில் ஒரு சிறிய வட்டம் போன்ற பதக்கம் ஒன்று தொடுக்கப்பட்டிருந்தது. அதில் சாவித்துவாரம் இருந்தது. அப்படியானால் அதைத் திறப்பதற்கு ஒரு சாவி தேவை எனப் புரிந்து கொண்டோம். எங்கேயாவது அதற்குரிய சாவி தட்டுப்படுமா எனச் சுற்று முற்றும் தேடிப் பார்த்தோம். அப்போது பயங்கரமாக அலறிக் கொண்டு பற்றைக்குள் பதுங்கியிருந்த காட்டுக் கோழி ஒன்று எங்களைத் தாண்டிச் சென்றது. அந்தப் பயங்கர அலறலே எங்களை நடுங்க வைத்தது. தரையிலே வினோதமான சில காலடிகள் தெரிந்தன. என்னவாய் இருக்கும் என்ற திகில் இருந்தாலும் ஆர்வத்தோடு அந்தக் காலடித் தடத்தைத் தொடர்ந்து நடந்தோம். சற்றுத் தூரம் தொடர்ந்து சென்றபோது நிலத்தில் ஏதோ மின்னுவதுபோலத் தெரிந்தது. அருகே சென்று குனிந்து பார்த்தேன். ஒரு வெள்ளிச்சாவி. அந்தப் பூட்டிற்கு ஏற்ற சாவி போல இருந்தது. அவசரமாக அதை எடுத்துக் கொண்டு ஆசிரியரிடம் ஓடினேன். நான் பின் தங்கி நின்றதைக் கவனிக்காமல் அவர்கள் முன்நோக்கிச் சென்று எங்கோ மறைந்து விட்டிருந்தார்கள். எனக்குப் பயமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அங்குமிங்கும் அவர்களைத் தேடி அலைந்ததில் எனக்குப் பசி மயக்கம் ஏற்பட்டது. தனிமையில் நின்றமையால் திகில் அடைந்துவிட்டேன். பசிதாங்க முடியாமல் அருகே இருந்த அப்பிள் மரத்தில் பழம் ஒன்றைப் பறித்துச் சாப்பிட்டேன். நினைவு மயங்குவதுபோல கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. அதன்பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு கூட்டம் என்னை நோக்கி வருவதுபோல மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தது. யாரோ முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள். கண் விழித்துப் பார்த்தேன். ஆசிரியரும் சகமாணவர்களும் கவலையோடு சுற்றி நின்றார்கள். கையில் இருந்த சாவியை ஆசிரியரிடம் மெல்ல நீட்டினேன். அவர் அந்தச் சாவியால் அந்தச் சிறிய வட்டப் பதக்கத்தைத் திறந்தார். எல்லோர் விழிகளும் ஆவலோடு விரிந்தன. மறுகணம் தவித்த விழிகள் அப்படியே உறைந்து நின்றன. உள்ளே...

**(தொடரும்)** **விதுராஷனா உதயசங்கர். பிராம்டன். கனடா.**

## மாம்பழம்



மாம்பழம் இலங்கை, இந்தியா மற்றும் வெப்ப நாடுகளில் வளர்க்கப்படும் மரத்திலிருந்து கிடைக் கிறது. மாம்பழம் உலகெங்கும் கோடை காலத்தில் அதிகமாக சுவைக்கப்படுகிறது. நாம் வாழும் கனடாவிலும் கோடை காலத்தில் மாம்பழம் அதிகமாகக் கிடைக்கும். மாம்பழம் முக்கனிகளில் ஒன்றாகும். இந்துக்கள் இதனை கடவுளின் உணவாகவும் கருதுவர். இதன் வடிவம் இலங்கையின் வரைபடத்தை ஒத்ததாகும். மாம்பழம் என்றாலே யாழ்ப்பாணத்தை நினைவுபடுத்தும். இதன் இனிய சுவை, மணம் என்பன நாக்கில் நீரை ஊறச்செய்யும். மாம்பழத்தை அப்படியே பழமாகவும் மாம்பழச் சாறாகவும் பயன்படுத்துவார்கள். மாம்பழத்தில் சக்கரை, புரதம், பெருமளவு உயிர்ச்சத்துக்கள் ஏ, பீ, சீ ஆகியவை உள்ளன. இலங்கை மக்கள் மாம்பழம் உண்பதால் வயிற்றுத் தொல்லைகள் சரியாகும். இதய நலம் உண்டாகும் எனவும் நம்புகின்றனர். நாமும் மாம்பழம் உண்டு பயன்பெறுவோம்.

**தாராகா சிறிகாந்தன்**

## பறவைகள்



உலகில் உள்ள ஐந்து கண்டங்களிலும் விதவிதமான பறவைகள் வாழ்கின்றன. இப்பறவைகள் ஒவ்வொரு கண்டத்திலும் உள்ள காலநிலைக்கு ஏற்றாற்போல் கண்டம் விட்டு கண்டம் சென்று வசிக்கும். பறவைகள் அழகானவை. அத்துடன் பல வர்ணங்களிலும் உள்ளன. பறவைகளின் அலகுகள் அவற்றின் இரை தேடுவதற்கு ஏற்றதுபோல் நீளமான, நீளம் குறைந்த அத்துடன் வளைவான அமைப்புகள் கொண்டவை. பறவைகளில் உயரமானதும் மிக வேகமாக ஓடக் கூடியதுமான பறவை தீக்கோழியாகும். பறவையினங்கள் உணவாக பழவகைகள், பூச்சிபுழுக்கள், அத்துடன் தானிய வகைகளையும் உண்ணும். பறவை இனங்கள் முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிப்பதன் மூலம் தனது இனத்தை விருத்தியாக்கும். சூரியனை நேரடியாக பார்க்கக்கூடிய திறன்கொண்ட உயிரினம் கழுகு என்னும் பறவையாகும். கூடுகட்டி முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிப்பவை பறவை இனங்களே. வீடுகளில் செல்லப்பிராணியாக பறவைகளை வளர்ப்போம். அவற்றில் கிளி கதைக்கும் ஆற்றல் கொண்டது.

**ரோசினி நந்தகுமார்.**



## எனது பூனை

எனது செல்லப்பிராணி பூனை. பூனை ஒரு வீட்டு மிருகம். பூனை பஞ்சு போன்று மிருதுவானது. அது மியாவ் மியாவ் என்று கத்தும். அதன் குரல் மென்மையானது. பூனை பாலை விரும்பிக் குடிக்கும். அது எலி பிடிக்கும். பூனையில் பல நிறங்கள் உண்டு. பூனைக்கு இரவில் நன்கு கண் தெரியும். பூனை நடக்கும் போது சத்தம் கேட்காது. எனது பூனையின் பெயர் ரோசி. நான் பூனையுடன் விளையாடுவேன்.

**மிதுரா தவராஜா**



## பசு

பசு ஒரு வீட்டு மிருகம். பசு சாதுவான மிருகம். பசுவை வீட்டில் வளர்ப்பார்கள். பசு பால் தரும். பசுவின் சாணத்தில் இருந்துதான் திருநீறு எடுப்பார்கள். பசுவைக் கோமாதா என்றும் அழைப்பார்கள். பசுவின் தோலில் இருந்துதான் மேளம் செய்வார்கள். பசுவிற்கு நன்றி செலுத்துவதற்காக மாட்டுப்பொங்கல் கொண்டாடுவார்கள். பசுவைத் தெய்வமாக நினைத்து இந்து சமயத்தில் வழிபடுவார்கள்.

**மதுரா தரவாஜா**



## எனது வீடு

எனது வீடு அழகானது. எனது வீட்டில் நான்கு பேர்கள் வசிக்கின்றனர். அப்பா, அம்மா, தம்பி, நான் வசிக்கின்றோம். எனது வீட்டில் 3 படுக்கையறைகள் உள்ளன. எனக்கு ஒரு தம்பி உள்ளார். நான் அவரோடு விளையாட்டு அறையில் விளையாடுவேன். எனது வீட்டில் இரண்ட மாடிகள் உள்ளன. எனது வீட்டுக்கு பல விருந்தாளிகள் வருவார்கள். அவர்களை அம்மா உணவுகள் கொடுத்து வரவேற்பார். நாங்கள் எங்கள் வீட்டை நேசிக்கின்றோம்.


**சிவானி சுரேந்திரன்**



## நாய்

நாய் ஒரு செல்லப்பிராணி. நாய் ஒரு வீட்டு மிருகம். நாய் நன்றியுள்ளது. நாய் வீட்டைக் காக்கும். நாய்க்கு மோப்ப சக்தி உண்டு. குழந்தைகளின் விருப்பமான விலங்கு நாய். நாய் காவல்காரர்களுக்கு உதவும். காவலாளிகள் நாய்களுக்கு பயிற்சி கொடுத்து துப்பறிய வைப்பாகள். சிலர் நாய்களை வேட்டையாடுவதற்கு பயன்படுத்துவார்கள்.

**அஸ்வந் சிறிஸ்கந்தராசா**



12 Months No Payment Plan
“சொர்க்கம் என்பது நமக்கு சுத்தம் உள்ள வீடுதான்”
THERMOCARE
Heating & Cooling Inc.
Heating & Cooling Duct Cleaning
• Air Conditioners • Humidifiers
• Furnace Cleaning • Air Cleaners • Air Exchanges
American Standard®
HEATING & AIR CONDITIONING
குறைந்த சக்தியில் கூடுதலான பலனைப்பெறும் உபகரணங்களைப் பொருத்தவும்,
உங்கள் வீட்டின் தகுந்த உஷ்ண நிலை மற்றும் சுத்தமான காற்றைப் பேணவும் இன்றே அழையுங்கள்!
தயாளன் - Thayalan
For all your repairs & installation need call Thayalan /Alan (Licensed Technician)
Office : 416 640 1174 / Fax : 416 640 1175
416 825 9373
thermocare@hotmail.ca
FINANCE AVAILABLE 24 hours service and 7 days a week
www.thermocare.ca

# அன்னப் பிச்சை

- இ.லம்போதரன் MD

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தியா சென்றிருந்தபோது சிதம்பரம் சென்று கோவில் தரிசனத்துக்காக மூன்று தினங்கள் தங்கியிருந்தேன். அன்று மாலைத் தரிசனத்துக்காக அந்திப் பொழுதில் சிதம்பரம் கோயிலுக்குச் சென்றிருந்தேன். மாலைப்பொழுது. சூரியன் மேற்கில் மறையப்போகும் நேரம். ஆயிரத்து நூறு வருடங்களுக்கு முன்னர் மாணிக்க வாசகர் உட்சென்ற அதே கிழக்குவாசல் கோபுரத்தை கடந்து நான்காம் பிரகாரச் சுற்றில் வலம் வந்துகொண்டிருந்தேன். தெற்கு கோபுர வாசலுக்கு முன்னதாக ஒரு வயதான பெண்மணி எதிர்பக்கத்தில் வந்துகொண்டிருந்தார். "ஐயா பசிக்கிறது" என்று பிச்சை கேட்டார். நானோ இதற்கென்று கொண்டுவந்திருந்த சில்லறைக் காசுகளையெல்லாம் முன்னராகவே கோவில் வாசலில் இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு கொடுத்து முடித்துவிட்டேன். மடியில் இருந்து தாள் காசை எடுத்துக்கொடுக்க மனமில்லாமல் அந்த அம்மாளைக் கவனிக்காதது போல புறக்கணித்துவிட்டு நடந்தேன். அப்போது அந்த அம்மாள் "காலையில் இருந்து எட்டு மைல் நடந்து வந்திருக்கிறேன் சாமி. பசி வயிற்றைப் பிடுங்குது சாமி. ஏதாவது கொடுங்க" என்று தொடர்ந்து வந்து கேட்டார். இது மனதைத் தொட நான் மடியைத் தொட்டு பணத்தாள் ஒன்றை எடுத்து நீட்டினேன். அதே நேரம் மனதில் ஒரு பாடலின் ஞாபகம் எழுந்தது. அது 1300 வருடங்களுக்கு முன்னர் திருநாவுக்கரசர் பாடியது.

**அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**

**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**

**என்னன் பாலிக்கு மாறுகண டின்புற**

**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே**

அன்னம் என்றால் சோறு என்று பொருள். அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலத்தின் உட்பிரகார வீதியில் அன்னம் கேட்டுப் பிச்சை எடுக்கும் பெண். "ஞானி வாக்கு பொய்த்துவிட்டதே" இது மனதைப் பிசைந்து வாட்டியது. விடை கிடைக்கவில்லை. இதன் பின்னர் கனடாவுக்கு திரும்பி எனது வழமையான வாழ்க்கை ஓட்டத்தில் இந்த சம்பவத்தை மறந்தேவிட்டேன்.

2008 ஜுலை நடுப்பகுதி. இந்தியாவில் இருந்து பேராசிரியர் சண்முகவேல் அவர்கள் சைவ சித்தாந்த வகுப்புகள் கலந்துரையாடல்களுக்காக ரொறன்ரோ வந்திருந்தார். அத்தம்பதிகளை நானும் கவிஞர் கந்தவனம் ஐயா அவர்களும் விமான நிலையம் சென்று வரவேற்று வீட்டுக்கு அழைத்து வந்தோம். மதிய போசனத்திற்காக எல்லோரும் அமர்ந்த போது அவர் போசனத்திற்கு முந்திய இறைவணக்கமாக மேலே சொன்ன "அன்னம் பாலிக்கும்" என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தைப் பாடினார். அப்போது அன்னம் என்பது உண்ணும் சோற்றை மட்டுமல்ல வீடு பேற்றையும் குறிப்பது என்று கூறினார்கள். அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என்றால் வீடு பேற்றைத்தந்து அருளுகின்ற தில்லைச் சிற்றம்பலம் என்று பொருள்.

2008 ஜுலையிலேயே ஒரு திருமணப் பேச்சு விடயமாக சில நாட்கள் இந்தியா செல்ல நேர்ந்தது. வழமைபோல தரிசனத்திற்காக சிதம்பரம் சென்றிருந்தோம். சிதம்பரத்தில் அர்த்த சாமப் பூசையும் அதிகாலைப் பூசையும் மிக விசேடமானவை. அதிகாலைப் பூசைக்காக அதிகாலை ஐந்து மணிக்கே சென்று கோவில் கிழக்கு வாசல் கோபுர வீதி முகப்பிலுள்ள கடையொன்றில் தேநீரும் வாங்கிப் பருகிவிட்டு கோயில் வாசல் திறக்கப்படும் வரை காத்திருந்தோம்.

அந்தக் கிழக்குக் கோபுர வாசலில் பூவிற்றுப் பிழைக்கும் பெண்மணி ஒருவர் அதிகாலையிலேயே அங்கு வந்து கோபுர வாசலைக் கூட்டித் துப்பரவு செய்து நீர் தெளித்துப் பின்னர் அரிசி மாவினால் கோலமும் இட்டார். கிட்டத்தட்ட அறுபது வயதுள்ள அந்தப் பெண்மணி கோலம் இடும்போதுதான் கவனித்தேன் அவரது கையில் விரல்கள் இல்லை. குஷ்டநோய் என்னும் தொழுநோய் அவரின் கைவிரல்களைப் பதம் பார்த்திருந்தது. மருத்துவன் ஆனபடியால் பார்த்தவுடன் புரிந்துகொள்ள முடிந்தது. முன்னர் போல் இல்லாமல் இப்பொழுது தொழுநோய்க்கான மருந்துகளும் சிகிச்சை வசதிகளும் பரவலாகக் கிடைக்கின்றன. ஆயினும் தொடக்க காலத்திலேயே கண்டறிந்து சிகிச்சை செய்யாவிட்டால் இந்நிலை ஏற்படலாம். இந்த நோயுடன் அதிகாலையில் சிதம்பரம் கோயில் வாசலுக்கு முன்னால் அவர் செய்துவரும் தொண்டு என் உள்ளத்தைத் தொட்டது. ஆயினும் முதலிலேயே வேறொரு கடையில் பூசைக்காக பூ வாங்கியிருந்த எனக்கு அந்தப் பெண்ணிடம் மீண்டும் பூ வாங்கி சில ரூபாய்களை செலவு செய்ய மனம் வரவில்லை. அவரை என் மனதால் தான் தொட்டு வணங்கி மறுநாள் வரும்போது இந்தப் பெண்ணிடமே பூவாங்க வேண்டும் என்று எனக்குள் நினைத்துக்கொண்டு உள்ளே சென்று அன்றைய தரிசனம் முடித்துத் திரும்பினோம்.

மறுநாள் அதிகாலைப்பூசைக்கு இதே போல கிழக்குக் கோபுர வாசல் வழியாக போகும்போது முதல் நாள் பார்த்த அதே அம்மையாரிடம் மல்லிகைப்பூ சரமாக நடராசருக்கு சாத்துவதற்கு என்று வாங்கினேன். அவரோ நான் கேட்ட அளவு மல்லிகைச் சரத்தோடு நான் கேட்காமலேயே சில தாமரைப் பூக்களையும் என்னிடம் தந்தார். இதை எதிர்பாராத நான் அந்த தாமரைப் பூக்களுக்கு என்று மேலதிகமாக பணத்தை அவர் கையில் திணித்தபோது அதை அவர் வாங்க மறுத்து திருப்பித் தந்து "சாமி நடராசர் எனக்கு நிறையவே கொடுத்திக்கிறார் சாமி." என்று சொல்லி மேலும் சில தாமரைப் பூக்களையும் தந்தார். அந்தப் பூ விற்கும் பெண்ணின் முன்னால் பிச்சைக்காரனாக, ஏழையிலும் கடைப்பட்ட ஏழையாக குறுகி நின்றேன். தலையில் பொறி தட்டியது. அந்தப்பெண்மணி எனக்கு முன்னால் பெரும் செல்வந்தராக உயர்ந்து நின்றார். இப்போதும் ஒரு பாடல் நினைவுக்கு வந்தது. இது 1300 ஆண்டுகளுக்கு முன்னர் சம்பந்தர் பாடியது.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்

செல்வ மதிதேயாச் செல்வ முயர்கின்ற

செல்வர் வாழ்திலைச் சிற்றம் பலமேய

செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே

சிதம்பரத்தில் நான் கண்ட இந்த ஏழைகளும் பிச்சைக்காரர்களும் பெரும் செல்வர்கள். இந்தச் செல்வர்களுக்கு முன்னால் நாம் எல்லாம் ஏழையிலும் ஏழையான கடைநிலைப் பிச்சைக்காரர்களே. ஞானிகள் வாக்கு பொய்க்காது. அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் தான். அங்கு நாம் எல்லாம் அன்னப்பிச்சை எடுக்கும் பிச்சைக்காரர்கள் தாம்.

எண்ணிலா சிதம்பர ரகசியங்களும் இவையும் சில.


கடன் தொல்லையா?
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
நாளாந்த வாழ்க்கை கை நழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agency யின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம் இனி
நிம்மதியான தூக்கம்
மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
உங்களைப்பற்றி பெருமையாகவும், ஆனந்தமாயும் உணருங்கள்
இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றிக் கவலையில்லை
நண்பர்கள், உறவினர்களிடமிருந்து கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கும் இலவச ஆலோசனைகளுக்கு
SRI
Credit Solution Centre
Trustee in Bankruptcy
இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்
80 Corporate Drive, Suite 309, Scarborough, ON. M1H 3G5
Tel : 416 439 0224
Fax : 416 439 0226 creditsolutioncentre@gmail.com

# சர்வதேச செய்தி நிறுவனங்கள் சில தகவல்கள்

news

சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன்

பெரிய எண்ணிக்கையுடைய வாசகர்கள், விரும்புகிற முற்றிலும் உண்மையான நிகழ்ச்சிகளை அல்லது கருத்துக்களை செய்திகள் எனலாம். (News May be defined as an accurate fact or idea that interest of large number of readers) என்று Roland E. Wolseley என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். North, South, East, West என்ற திசைகளின் முதல் எழுத்துக்களை இணைத்து வந்த சொல்லே "News" ஆகும். இவ்வாறான செய்திகளை உடனுக்குடன் வழங்குபவையே செய்தி நிறுவனங்கள் (News Agencies) ஆகும். புதுமையான செய்தித் தொடர்புகளால் மக்களின் வாழ்வு, கருத்து என்பவற்றினை பெரும்பாலானோர்க்கு கிட்டும் வண்ணம் முறையாகவும் நேர்மையாகவும் பரப்புவதே இந்நிறுவனங்களின் பணியாக உள்ளது.

செய்திகளை விரைவாகவும் சரியாகவும் கொடுக்கின்ற இந்நிறுவனங்கள் இல்லையென்றால் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் முற்றாக செயலிழந்துவிடும். எந்தவொரு தொடர்பு சாதனமும் உலகளாவிய ரீதியில் தமது செய்தியாளர்களை அமர்த்த முடியாது. உலகில் அன்றாடம் நிகழும் யுத்தங்கள், இயற்கை அழிவுகள், விளையாட்டு நிகழ்வுகள், தேர்தல் முடிவுகள், காலநிலை மாறுதல்கள், தலைவர்களின் செயற்பாடுகள் என்பனவற்றையெல்லாம் பல வழிகளில் நுட்பமாகத் திரட்டி பெறவேண்டியுள்ளது. இவ்வகையில் உலகம் முழுவதையும் ஒன்றிணைத்து ஒரே உலகக் கோட்பாட்டில் நிறுத்துவதில் இந்நிறுவனங்கள் பெரிய பணிகளை ஆற்றுகின்றன.

இன்று ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றமே இவ்வாறான செய்தி நிறுவனங்களை மேலும் வளர்த்துச் செல்கின்றன. குறிப்பாக தொலைதூர தட்டச்சு (Teleprinter) நேரொலிப்பட அனுப்புகை, Facsimile Transmission, தொலை ஒளிப்படம் (Tele Photograph) கடலடி கம்பிகள், (Cables), விண்மதிகள் (Saterlite), வலையாக்கம் (Internet Service) தொலைநகல் (Fax), போன்ற பல தன்னியக்க மின்கருவிகள், எம்மை அறியாமலேயே இரவு பகலாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. செய்திகளைப் பரிமாற்றுகின்றன. இவற்றினை ஒன்றிணைத்து வெளியிடுவதே இச்செய்தி நிறுவனங்களின் சேவையாகும்.

உலகின் முதலாவது செய்தி நிறுவனத்தினை 1825ம் ஆண்டு சார்ல்ஸ் ஹவாஸ் என்பவர் பாரிஸ் நகரில் தொடங்கினார். முதலில் கழகத்தின் மூலமான ஆட்களைப் பயன்படுத்தியும் அஞ்சல் மூலமாகவும் செய்திகள் வழங்கப்பட்டன. புறாக்களும் செய்திகளை கொண்டு சென்றன. 1848 இல் லண்டன் ரோம் நகரங்களில் கிளைகள் தோன்றின. இங்கு பயிற்சி பெற்ற பலர் வேறு நிறுவனங்களை தோற்றுவித்தனர். அந்த வகையில் 1948 இல் ஜேர்மனியரான பெனார்ட் உல்ப் தனது பெயரில் ஒரு நிறுவனத்தினை தொடங்கினார். இவர் Teleprinter (தொலை அச்சு) மூலம் செய்திகளை அனுப்பினார். இதே வருடம் ஐக்கிய அமெரிக்காவில் Associated press of America (APA) என்ற செய்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. 1851 இல் ஜேர்மனியரான ஜூலியஸ் ராய்டர் (Reuter) தனது பெயரில் ஒரு செய்தி நிறுவனத்தை ஆரம்பித்தார். இதுவே இன்றும் உலகில் முக்கிய செய்தி நிறுவனமாக விளங்குகின்றது. லண்டனின் நிறுவப்பட்ட இந்நிறுவனம் பல துணை நிறுவனங்களை தன்னுடன் இணைத்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் Associated press of America என்ற நிறுவனத்தை தொடர்ந்து united press international (UPI) 1915 இல் International News Service (INS) உருவாகின. 1918 இல் சோவியத் நாட்டில் உருவான (TAS) பெரும் புகழை அடைந்தது.

மேற்கூறிய அனைத்து நிறுவனங்களிலும் 'ராய்டர்' நிறுவனம் முக்கியமானது. ஜேர்மனியர்களான paul Julius reuter லண்டனில் 'reauter byleam' என்ற பெயரில் முதலில் நிறுவினார். புறாக்கள் மூலம் செய்தியை அனுப்பி தொடங்கிய இதன் சேவை இன்று இந்தியாவில் உள்ள PTI - Press Trust of India நிறுவனம் மூலம் செய்திகளை வழங்குவதுடன் Bombay Times நிறுவனத்தினையும் இணைத்துள்ளது. 123 இந்திய பத்திரிகைகள் இதனுடன் இணைந்துள்ளதுடன் 2000 மேற்பட்ட அலுவலகங்களை இந்நிறுவனம் கொண்டுள்ளது. தற்போது Reuters News Agency என்ற பெயரில் இயங்கிவருகின்றது. உலகில் எல்லா நாடுகளில் செய்தியாளர்களை உடைய இந்நிறுவனம் தலைசிறந்த நிறுவனமாகும்.

அடுத்து நியூயோர்க்கிலுள்ள APA சிறந்த நிறுவனமாக திகழ்கிறது. 1848 இல் ஜேம்ஸ் பேர் என்பவரால் நிறுவப்பட்ட இந்நிறுவனம் பத்தாயிரம் நிறுவனங்களுக்கு செய்திகளை வழங்குகின்றது. இது செய்மதி (Saterlite) மூலம் இயங்குகின்றது. இதனையொத்த இன்னொரு நிறுவனம் (UPI) United International ஆகும். 1960 இல் உருவான இந்நிறுவனம் முன்பு உருவான UPI ஆகிய இரண்டினையும் இணைத்துள்ளது. 800 பேர் பணிபுரியும் இந்நிறுவனம் 200 இற்கும் மேற்பட்ட கப்பல்களுக்கும் பல நாடுகளுக்கும் செய்திகளை வழங்குகின்றது.

பிரான்சில் உருவான Agence France Press (AFP) 1835 இல் உருவாகி அரச மானியத்துடன் இயங்கிவருகின்றது. முதலில் குறிப்பிட்ட TAS என்ற சோவியத்தின் செய்தி நிறுவனம், (Telegraph Agency of the soviet Union) 1918 இல் ஆரம்பித்து பல மொழிகளில் விரிவடைந்து அரசு மானியம் பெற்று 7000 தொழிலாளர்களுடன் இயங்குகின்றது. மொஸ்கோவில் தலைமைப்பீடம் இருந்தாலும் லண்டன், பாரிஸ் நகரங்களிலும் தொடர்புகள் உண்டு.

இந்தியாவில் உள்ள முக்கிய இரண்டு நிறுவனங்கள் PTI - Press trust of India UNI (United News of India) ஆகும். 1947இல் உருவான API பின்பு PTI ஆக மாறி தற்போது அந்த பெயரில் இயங்குகின்றது. இது ராய்டருடன் இணைந்து செயற்படுகின்றது. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் பிரபலம் பெற்று முப்பதாயிரம் தொலை அச்சுகளை (Teleprinter) இணைத்துள்ளது. கீழைத்தேசத்தில் புகழ்பெற்ற நிறுவனம் இதுவாகும். இதுபோல UNI 36 நிறுவனங்களை இணைத்து செயற்படுகின்றது. இந்நிறுவனங்களுடன் Globe News Agency, Orient Press, times of India, Indian Express, ஆகிய சிறிய நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன.

Reuter, APA, UPI, AFP, TAS UNI போன்ற வலுவுள்ள செய்தி நிறுவனங்கள் மனித குலத்திற்கு செய்யும் சேவைகள் அளப்பரியன. இவை இரவு பகலாக இயங்கி செய்திகளை வழங்கி உலகினை உள்ளங்கைக்குள் அடக்க உதவுகின்றது.


Mortgage யார் வேண்டுமானாலும் செய்யலாம்...!
ஆனால் எங்களிடம் ஓர் பாதுகாப்பான அனுபவத்தை உணருவீர்கள்.
We are always there to determine your both current financial mortgage needs and future personal needs...
MIKE AHILAN - 416 220 1184
Senior Accounts Manager - Residential Mortgages
RBC
RBC Royal Bank of Canada
Kennedy & Ellesmere Branch
1421 Kennedy Road, Scarborough, ON M1P 2L6


To sell your property for the best market price!!
PLEASE CONTACT ME!!
SOLD
✓ Flexible Commission
✓ Exceptional Marketing Strategy
✓ Professional Service
SELL FAST. SELL FOR TOP $$$
Jey Seevaratnam
Sales Representative
Dir: (416)-400-9715
*not intended to solicit buyers or sellers currently under agency contract*
HOMELIFE HIGHER STANDARDS
Homelife / GTA Realty Inc. Brokerage
Tel: 416-321-6969



# Down the Memory Lane - I

I thought of writing about my life in Nigeria as a lecturer in a Women's' Teachers' College in Gezawa, Knao, Nigeria. Kano is a big Northern state of Nigeria and its capital is also called Kano. Most of the residents of Kano are Muslims. It has it's International airport and all modern facilities. Nigeria during the seventies was booming with it's oil wealth. As you all know that Nigerian crude oil is one of the best grades of oil and is in good demand. Nigeria was under the British rule for many years hence most of the southerners have been converted to Christianity. Nigeria has produced many literary figures like Wole Soyinka ,Chinua Achebe & John Pepper Clark and many others.

I was selected by a Federal Nigerian Team which came to Colombo to select Teachers and other professionals in demand in Nigeria at that time, It was 1979 and many of our professionals mostly from Northern Sri Lanka were selected in thousands. I was sent to Kano state in Northern Nigeria in 1980. After staying for a week in London with my sister's family I left for Kano through Rome. I sent a telegram to the Ministry of Education about the details of my arrival at Kano airport and expected someone to meet me there. I arrived in Kano around 6pm and came out looking for someone to meet me. Since I could not find any one, I made inquiries and found out that I have to make my own arrangements for stay in a hotel and to proceed to the Ministry of Education the next day morning, New place full of strangers and they all looked fearful to me. Luckily I had the address of my acquaintance from Jaffna whom I met when he was on holiday there. So I decided to go to his place. I was afraid to hire a taxi and inquired to a person who looked like an Indian. I explained my predicament to him. He is actually from Pakistan and was kind enough to arrange a taxi for me and said not to worry and to go with him.

It was dark, but no other choice, so I got into the taxi with trepidation. The driver talked to me nicely and told me that the place I am going is Wudil, 35 km from the airport and he wanted $35 US. I did not want to bargain at that time and agreed to pay him that amount. While driving he asked about me and said that I must be from India .When I told him I am from Sri Lanka , he told me that his teacher was from Sri Lanka too and said he is from Ibadan. I had no clue about the place but was happy to hear him praising his Teacher and it gave me more courage and trust on him. That is the beauty of the teaching profession. You go to any part of the world, there will be someone to help you, even if he is a stranger. I offered him a chocolate bar which I had in my brief case. He was very thankful and became friendlier. Human beings are kind at heart but circumstances make them wicked and cruel. You don't judge someone by his or her looks. It took nearly an hour to reach Wudil. My friend was a teacher in a high school and was living in the Teacher's quarters. It was around 8pm when we found out the school and went in. At the gate was a guard who talked in a foreign languge. My Driver spoke to him and got the direction to my friend's house. Since there were no street lights, looking for the house was difficult, since the houses had no numbers assigned to them. He got down knocked at the door of the house at every corner and got the information to the house we were looking for. It took nearly 30 minutes to find it. Throughout the trip I was on pins, until I found the house. Luckily for me my friend had returned from Kano city about 10 minutes before our arrival. That was a Sunday and he had gone to meet another Sri Lankan family in the city. I was really happy to see him after a tense journey through an unknown place with a stranger. Infect I took a great risk since I learnt from my friend that some taxi fellows had left travelers like me stranded in the middle of desolate places, after robbing of their belongings. I thanked God for having found a nice person as the driver. After making sure of my friend's place, the driver brought in all my belongings from the taxi. I gave him $40 and told him to have it. He was very thankful and left me. This experience of a lifetime is still in my memory and was the start of a new life in a new world. So the first day was an eventful one and during the six years of stay in Nigeria, I had many unforgettable events, which I will be sharing with all of you in the future. I learnt a good lesson on that day and remembered my father's saying that "you help someone and God will help you". This has been my motto since then and up to now and truly believes it. I would like to emphasis on this saying to everyone. ●

**- Thuraiyuraan.**



உங்கள் வாழ்வின் பொன்னான நேரத்தில் எங்களோடு இணைந்திடுங்கள்.
ஒரு சொகுசான உல்லாச பயணத்தை அனுபவியுங்கள்...
Best Limo
திருமணம் - பூப்புனித நீராட்டு விழா - பிறந்தநாள் மற்றும்
நயாகரா நீர்வீழ்ச்சி சுற்றுப் பயணத்திற்கும்
அழையுங்கள்!
416-321-6789 1-866-761-6789
Best Limo Services 520 Ellesemere Rd. Scarborough ON M1R 4E6 Canada
LINCOLN
AMERICAN LUXURY
HUMMER
Ford
EXCURSION
contact@bestlimo.ca




## சிறந்த பொழுதுபோக்கு திரைப்படம்: நியூயோர்க் டைம்ஸ் புகழாரம்

அமெரிக்காவின் பிரபலமான செய்தி நாளிதழ்களில் ஒன்றான நியூயார்க் டைம்ஸ் வேட்டை திரைப்படத்தை சிறந்த பொழுதுபோக்கான திரைப்படம் என்று குறிப்பிட்டுள்ளது.

ஆர்யா, மாதவன், சமீரா ரெட்டி, அமலா பால் நடித்துள்ள வேட்டை திரைப்படம் தமிழகம் முழுவதும் வெற்றி நடைபோடுகிறது.

இத்திரைப்படத்தை லிங்குசாமி இயக்கியுள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார். தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தை மையமாக கொண்ட வேட்டையில் மாதவன் பொலீஸ் வேடத்தில் நடிக்க அவரது தம்பியாக ஆர்யா நடித்துள்ளார்.

சமீபத்தில் வேட்டை திரைப்படத்திற்கான விமர்சனத்தை நியூயோர்க் டைம்ஸ் பத்திரிக்கையின் விமர்சகர் ராச்செல் சால்ஸ் எழுதியுள்ளார்.

வேட்டை திரைப்படம் காதல், நகைச்சுவை, இனிமையான பாடல்கள், அதிரடி சண்டைக்காட்சிகள் கலந்த சிறந்த பொழுதுபோக்கான திரைப்படம் என்று ராச்செல் சால்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்பு தமிழக சுப்பர் ஸ்டார் ரஜினி காந்த் நடித்த முத்து, சிவாஜி, எந்திரன் ஆகிய திரைப்படங்களுக்கு வெளிநாட்டு நாளிதழ்கள் விமர்சனம் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.


# பாவம் ஓரிடம் பழி இன்னோரிடம்...

இனி எத்தனை காலம்தான் பொறுத்திருப்பது என்று நினைத்துவிட்டார் போலிருக்கிறது. விஸ்வரூபம் எடுத்துவிட்டார் ஸ்ருதி. ஒரு பக்கம் கோவில் குளம் என்று பிரார்த்தனை கிளப் பிரசிடென்ட் ஆகிவிட்டார் தனுஷ். தனக்கு கிடைத்த உலக புகழுக்காகதான் இந்த காசி யாத்திரையெல்லாம். ஆனால் இந்த பூனை ஸ்ருதி என்ற எலியை கவ்விக் கொண்டு திரிவதாக நாடெங்கும் ஒரே வதந்தி.

வந்த புதிதில் மட்டுமல்ல, வளர்ந்த பிறகும் கூட தன்னை பற்றி வருகிற வதந்திகளை பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை தனுஷ். ஆனால், கோடம்பாக்கத்தின் மண்ணுக்கேத்த பொண்ணு என்று அமைதியாக இருந்துவிடாத ஸ்ருதி, தன்னையும் தனுஷையும் இணைத்து எழுதிய குமுதம் வார இதழுக்கு வக்கீல் நோட்டீசே அனுப்பிவிட்டாராம். (இப்படி எழுதியது இவர்கள் மட்டுமல்லவே?) இருந்தாலும் போஸ்டர் அடித்து பரபரப்பை கிளப்பியது இவர்கள் என்பதால்தான் இந்த நோட்டீஸ். வேடிக்கை என்னவென்றால் இப்படியொரு செய்தியை முதலில் கிளப்பிவிட்டதே டெக்கான் குரோனிக்கல் என்ற ஆங்கில நாளிதழ்தான்.

சில தினங்கள் கழித்து அதே நாளிதழில் பேட்டியளித்த ஸ்ருதி, குமுதத்தை வாங்கு வாங்கென்று வாங்கியிருந்தார். இப்போது நோட்டீசும் போயிருக்கிறது. இந்த நூடில்ஸ் சிக்கலுக்கு என்னதான் தீர்வோ?






# போட்டி

கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புக்களைக் கொண்டு இந்தக் கட்டடத்திற்குள் இடமிருந்து வலமாக சரியான சொற்களை நிரப்ப வேண்டும். ஒவ்வொரு வரிசையிலும் இரண்டு சொற்கள் உள்ளன. முதல் சொல்லின் இரு எழுத்துக்களின் முடிவில் இரண்டாவது சொல் தொடங்கும்.

1. உள்ளம் – குளிர்கால உடை
2. ஓவியம் – மரம் அறுக்க உதவும் கருவி
3. கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் இனிப்புப் பொருள் – புத்தகம், மரம் ஆகியவற்றை அரிக்கும் ஒரு உயிரினம்.
4. மகள் – முக்காலம்
5. பயம் – ஊதியம்
6. ஆசை – பெயர் மாற்றம் அடைந்த இந்திய நகரம்.
7. இந்தியாவின் உயரமான மலை – கேரளாவில் பயன்பாட்டில் உள்ள மொழி
8. வியாசர் எழுதிய காவியம் – கணவன் மனைவி
9. அறிஞர் – செருக்கு
10. கடிதம் – மாவை சலிக்க உதவும் சாதனம்
11. அரசன் மகன் – வெகுமதி
12. உழவனின் நண்பன் – தூசி

இந்த விடைகளை மார்ச் 10 திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**THOORAL**
3252 Lawrence Ave East, Suite 6
Scarborough, ON M1H 1A4
**Fax : 416 273 7606 E-mail : editorial@thooralonline.com**

பெயர்.................................................

முகவரி.................................................

.................................................

தொலைபேசி.................................................

## கடந்த இதழ் போட்டிக்கான சரியான விடை

| | | | |
|---|---|---|---|
| 1.நங்கை | 7.கோதை | 13.பாவை | 19.பேடு |
| 2.பாமினி | 8.மங்கை | 14.ஏந்திழை | 20.மொய்குழல் |
| 3.மடக்கொடி | 9.குமரி | 15.மாயோள் | 21.ஸ்தீரி |
| 4.காரிகை | 10.ஆயிழை | 16.மாது | 22.யுவதி |
| 5.குமாரி | 11.பேதை | 17.மடந்தை | 23.வனிதை |
| 6.கன்னி | 12.பூவை | 18.வஞ்சி | 24.காமினி |




## பரிசு பெறுவோர்

சுரநுஜா ஹரிதரன் – ஸ்காபரோ
திருமதி. தி. து. ராதாபுஸ்பம் – பிரம்டன்
திருமதி. உமா நகுலசிகாமணி – ஸ்காபரோ
எஸ். பத்மநாதன் – மார்க்கம்

## பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகள்

பவானி சந்திரன் – மார்க்கம்
சிவகுரு பாலசிங்கம் – பிரம்டன்
நிர்மலன் தெய்வசிறி – பிரம்டன்
காரை ஆ. புண்ணியமூர்த்தி – மிசிசாகா
கிரிஜா மோகனதாஸ் – மிசிசாகா
சிந்தா அந்தோனிப்பிள்ளை – மார்க்கம்
வதனி தயாபரன் – ஏஜக்ஸ்
ராஜலோசினி – மார்க்கம்
மோகனா ராமசந்திரன் – பிரம்டன்
ஆனந்தராஜா – ஸ்காபரோ


POORANI VILAAS
POORANI VILAAS
Take-out Restaurant & Catering
Delicious, Quality and Healthy
சுவைமிக்க தமிழீழ, தென்னிந்திய, மற்றும் சீன உணவு வகைகள்
சகலவிதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க,
சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள் !!!
416.335.7775 647.822.4972
6055 Steeles Ave. E, Unit 104 (Markham & Steeles)
Toronto, ON. M1X 0A7
www.pooranivilaas.ca



# ஆண்களே உங்கள் அழகும் முக்கியம்!

ஆண்களில் சிலரை பார்த்தால், வயது 50 அல்லது 60 ஐ தாண்டினாலும், என்றும் மார்க்கண்டேயனாகவே தோற்றமளிப்பர். இந்த மார்க்கண்டேய தோற்றத்தை தக்கவைத்துக்கொள்வது ஒன்றும் பெரிய கம்ப சூத்திரமோ அல்லது பிரம்ம வித்தையோ அல்ல....! மாறாக கொஞ்ச நேரம் செலவழித்தால் வயது ஏறிக்கொண்டு போனாலும், குறைந்த வயது தோற்றத்துடன் நீண்ட காலம் இருக்க முடியும்.

நமது வயதை முதலில் வெளிப்படுத்துவது சருமம் தான், அதனை ஒழுங்காக, சீராக பராமரித்தாலே நமது ஆயுட் காலமும் நீடித்து இருக்கும். அப்படி என்றும் இளமையுடன் இருக்க இதோ சில டிப்ஸ்...!.

நாம் அதிகமாக சூரிய வெளிச்சத்தில் பயணிப்பதாலும், எண்ணெய் அதிகமுள்ள உணவுகளை உட்கொள்வதாலும், மாசுள்ள காற்றை சுவாசிப்பதாலும் நமது சருமத்தில் முதுமை தோற்றம் தெரிகிறது. இதனை தடுக்க, சிறந்த முதுமை தடுப்பு (ஆன்டி ஏஜிங்) தயாரிப்புகளை பயன்படுத்தவது நல்லது. மேலும் அதிகமான தண்ணீர் பருகுதல் சருமத்தை பாதுகாக்கும்.

பெண்களின் சருமத்தை காட்டிலும் ஆண்களின் சருமம் 20 விழுக்காடு கூடுதல் கடினத்தன்மையுடன் இருக்கும். ஆயினும் வயது கூடும்போது கொல்லாஜன் எனும் புரதம் குறைவதால் சருமத்தில் சுருக்கம் ஏற்படுகிறது. உடல் கூரியலின்படி பெண்களை காட்டிலும் ஆண்களின் முதிர்ச்சி சில காலத்திற்கு பிறகு தான் தோன்றும், ஆனால் ஒரு சில பழக்கவழக்கங்களினால் ஆண்களுக்கு இயல்பான வயதை காட்டிலும் முதுமையான தோற்றம் காணப்படுகிறது.

தொடர்ந்து ஷேவிங் செய்வதன் காரணமாக முகத்தில் முதிர்ச்சி தோன்றும், அதனால் ஈரப்பதத்துடன் கூடிய ஷேவிங் கிரீமை பயன்படுத்துவது நல்லது. மேலும் ஷேவிங் செய்யும்போது முடிகள் வளர்ந்திருக்கும் திசையில் ஷேவ் செய்து, வெதுவெதுப்பான தண்ணிரால் முகத்தை கழுவ வேண்டும். அவ்வாறு செய்தால் முகம் வாடாமல் புத்துணர்ச்சியுடன் தோன்றும்.

ஆண்கள் என்றும் இளமையுடன் இருக்க தொடர்ந்த உடற் பயிற்சியும் பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், உடலுக்கு குளிர்ச்சி தரும் இறைச்சிகள் மற்றும் மீன் போன்ற ஆரோக்கிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். உடல் திசுக்களை புதுப்பிக்கும் திறனுடைய ஆன்டிஆக்ஸிடன்ட் குணம் நிறைந்த பேக் செய்யப்பட்ட உணவுகளை உட்கொள்வதால், முகம் சுருக்கம் இல்லாமலும் மென்மையாகவும் காணப்படும்.

மேலும் பசலை கீரை, அவுரிநெல்லிகள், கேரட், தக்காளி, Green Tea போன்றவற்றையும் சேர்த்துகொள்வது மிகவும் நல்லது.

சருமத்தை இளமையுடன் வைத்திருக்க மது மற்றும் புகைப்பிடித்தலை தவிர்க்கவும். சிகரெட்டுகளில் உள்ள நிக்கோட்டின் உடலின் இரத்த ஓட்டத்தை குறைப்பதால் சருமத்திற்கு தேவையான சத்துகள் சென்று அடைவதில்லை, ஆகையால் சுருக்கங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

தூக்கம் கெடுவதால் உடல்நிலை பெரிதும் பாதிக்கப்படும் என்பதை அநேகமானோர் அறிவதில்லை. இரவில் குறைந்தது 6-7 மணி நேர ஆழ்ந்த உறக்கம் அவசியம் என்பதும் இதைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் மனதில் புத்துணர்ச்சி மட்டுமின்றி, உடல் ஆரோக்கியத்திலும் குறிப்பாக சருமத்திலும் பொலிவு ஏற்படும்.

இது தவிர, உடல் ஆரோக்கியத்திற்கும், உடலுறவு பழக்க வழக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், அதுகுறித்த விழிப்புணர்வை கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்கள் தனது கவலைகளை மறந்து மகிழ்ச்சியுடன் இருந்தாலே, முகத்தில் பொலிவும் இளமையும் கூடிக்கொண்டே போகும்...! ●

# பெண்களின் அழகைக் குலைக்கும் செலுலைட்!



பெண்களுக்கு அதிகப்படியாக கொழுப்பு சேரும் இடம், தொடை, இடுப்பு மற்றும் பின் பகுதி தான்! 'குழி விழுந்த', 'மேடு பள்ளமான' தோற்றத்தை தரும். இந்த கொழுப்புக்கு பெயர் தான் செலுலைட்.

## எதனால் செலுலைட் உருவாகிறது?

எண்ணையில் பொரித்த உணவு, மது, கபின் (காபியில் உள்ளது) சர்க்கரை ஆகியவை செலுலைட் உருவாக முக்கிய காரணம். அத்தோடு, ஹார்மோன் மாத்திரைகள் சாப்பிடுவது, பரம்பரையாக வருவது, உடற்பயிற்சி அதிகம் இல்லாதது, இவற்றாலும் செலுலைட் உருவாகிறது.

## செலுலைட்டை ஒழிப்பது எப்படி?

செலுலைட்டை ஒழிக்க இரண்டு வழிகள் உண்டு.

**1. இயற்கை வழி : உடற்பயிற்சி**

வருவதற்கு முன் காப்பது நல்லது, என்பதை மறந்து விடாதீர்கள். கொழுப்புச் சத்து உள்ள உணவை சாப்பிட்டு விட்டு உடற்பயிற்சி செய்தால் பயனில்லை. உடற்பயிற்சியால் தற்போது இருக்கும் செலுலைட்டை தான் குறைக்க முடியும்.

உணவு கட்டுப்பாட்டால் தான் செலுலைட் உருவாகுவதை தடுக்கலாம். எடை குறைக்க பத்து நாள் பட்டினி கிடந்தால் பயனில்லை. இந்த வகையான டயடிங் உங்கள் தசைகளை குறைத்து உங்களை பலவீனமாக்கும்.

கொழுப்பு அப்படியே தங்கிவிடும். வறுத்த, பொரித்த உணவுப் பொருட்கள், நெய், அசைவ உணவு ஆகியவற்றை சாப்பிடுவது குறைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வாரத்தில் மூன்று நாட்களாவது 1/2 மணி நேரத்திற்கு உடற்பயிற்சி செய்தால் தான் பயனளிக்கும்

தண்ணீர் குடிப்பது குறைந்தாலும் செலுலைட் உருவாகும். அதனால் தினமும் 2L டம்ப்ளர் தண்ணீர் குடிப்பது நல்லது.

**2. செயற்கை முறை : லைபோஅக்சன்**

இந்த முறையில் ஒரு சின்ன டியூப்பை கொழுப்பு இருக்கும் இடத்தில் விட்டு, கொழுப்பு உறிஞ்சப் படுகிறது. இதனால் கொழுப்பு குறைந்தாலும் வளவளப்பான தோற்றத்தை அந்த இடம் இழந்து விடுகின்றது. அது மட்டுமல்லாமல் இதில் அதிகமாக வலி ஏற்படும். ஒரு மாதம் வரை தழும்புகள் நீடிக்கும். ●


- நித்தியானந்தன்

# புதிய, பாவித்த HONDA வாகனங்களுக்கு நாடுங்கள்...

**2012 Honda** புதிய வாகனங்களுக்கு
குறைந்த வட்டி வீதம், 5 வருடங்களுக்கு **0.9%**

## Formula Honda

*Where You're treated like family*



**ராஜா தர்மலிங்கம் - Dir: 647 833 4998**

2240 Markham Road (at Finch), Scarborough. www.formulahonda.com

கருணா கோபாலபிள்ளை



# போட்டிக்குள் போட்டி

இன்றைய எமது தேவைக்குள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டியது சமுதாய போக்கு பற்றிய ஒரு அவதானிப்பு. நாம் இலகுவான சூழலில் பிறந்து வளர்ந்தவர்கள். மொழி, மதம், கலாச்சாரம் போன்றவற்றால் இறுகப் பிணைந்தவர்கள். அவ்வளவு ஏன், சொந்தம், பந்தம் சொத்து விட்டுப்போகக்கூடாது என்று சொந்தங்களில் தேடி மணமுடித்த வர்கள். ஆனால் இன்றைய நிலை இதுவல்ல. இது ஒரு பன்மொழி, பல் கலாச்சார நாடு. இங்கு எம்மை எவ்வாறு தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதனை அனுபவம் ஒன்றையே கருவியாக வைத்து வாழ்ந்து வெற்றியும் கண்டவர்கள். இன்று பல துறைகளிலும் வளர்ந்து வரும் ஓர் இனமாக அடையாளம் காணப்பட்டுள்ளோம் என்றும் கூட பெருமைப் பட்டுக்கொள்ளலாம்.

போட்டி போட்டு வளர்ந்துவரும் எம் மக்களிடம் காணப்படும் ஓர் வியக்கத்தக்க விடயம் அவர்கள் தமக்குள்ளேயே போட்டியிடுவது. இது ஓர் பரந்த தேசம். அது மட்டுமன்றி பல துறைகளும் அனுகூலங்களும் நிறைந்த தேசம். இவ்வாறிருக்க ஒருவர் ஆரம்பிக்கும் அதே தொழிலினை பலரும் அச்சுமாறாமல் தொடர்வது கீரைக்கடைக்கும் எதிர்க்கடை போல் தோன்றினாலும், அதிக வேதனை தருவது என்னவென்றால் இவர்கள் வாடிக்கையாளர்களை தங்களுக்குள்ளேயே பங்கிட்டுக் கொள்வதால் இலாபம் என்பதும் பங்கீடாகவே போகின்றது.

இதற்கு ஓர் சிறந்த ஓர் உதாரணமாக நமது உணவகங்களை எடுத்தோமேயானால் ஒரு கட்டடத்திலேயே நான்கு அல்லது ஐந்து ஒரே மாதிரியான சேவையை வழங்கும் உணவகங்கள் உள்ளன. அவர்களிடம் பிரத்தியேகமாக ஏதாவது இருக்கின்றதா என்று பார்த்தால் ஏமாற்றம் தான் மிச்சம். இறுதியில் இலாபத்தில் பங்கிட்டதால் தமது நிறுவனத்தினை திறம்பட நடத்த முடியாமல் தரத்தினில் குறைந்து விடுகின்றார்கள்.

இவ்வாறாக நம்மில் பலர் நடந்துகொள்வதற்கான காரணம் என்ன?

தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் முன்னர் அதுபற்றிய ஓர் ஆய்வினை செய்வதில் தவறி விடுவதா? அன்றி தனித் தன்மையான தொழில்கள் பற்றிய அறிவின்மையா? வேற்றினத் தவர்களுடன் போட்டி இடுவதற்கு துணிச்சல் இல்லையா? இவ்வாறு பல கேள்விகள் எமக்குள் எழலாம்.

மூலதனம் என்பது தொழிலை சிறப்புற தொடங்குவதற்கும் பின்னர் நடத்துவதற்கும் அத்தியவசியமானது. எப்போதும் நாம் சிறியளவில் சிந்தித்து குறைந்த இலாபத்தினை மனதில் வைத்து தனித்தனியே வியாபாரங்களை ஆரம்பிக்காமல், பல முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்து (Corporate level) அவர்களிடம் ஆலோசனை திரட்டி, தொடங்க இருக்கின்ற தொழில் சம்பந்தமாக ஒரு முழு அளவிலான ஆய்வினை நடத்தி பின்னர் அதற்கு உரிய இடம், வாடிக்கையாளர் எண்ணிக்கை போன்ற வற்றையும் நன்கு அறிந்து கொள்வதன் மூலம் ஓர் தரமான தொழிலினை ஆரம்பிக்கலாம்.

எமக்குள் நாமே போட்டிக்குள் போட்டியிட்டு வீணே இலாபத் தினை இழப்பதை தவிர்த்து சற்று சிந்தித்து செயற்பட்டு மேலும் பலன் பெறுவோம். ●

# மனோன்மணி பாட்டி



## பேரன் சங்கிலியன்

கொஞ்ச நாளாகவே மாமி மீது பாட்டிக்கு கொஞ்சம் கோபம். தேவையவில்லாத பிரச்சனைகளுக்கோ வம்புதும்புகளுக்கோ போகாத மாமி தற்போது தலைகீழாக மாறியிருப்பதாக பாட்டியின் கருத்து. மாமியின் இந்த திடீர் மாற்றத்திற்கு மாமியின் நண்பியே காரணம் என்பதில் பாட்டிக்கு மாற்றுக்கருத்து இல்லை.

பாமினி மாமியின் நண்பியின் மகன் பாடசாலையில் ஏதோ ஸ்கொலஷிப் பெற்று அமெரிக்கா போய் வந்ததிலிருந்து தான் மாமியில் இந்த மாற்றம். தனது மகனையும் எப்படியாவது இந்தநலைக்கு கொண்டுவந்துவிட வேண்டும் என்பதில் மாமி வெறியாகவே இருந்தார்.

இதுதான் பாட்டியின் கவலைக்கு காரணம். சோர்ந்து போயிருக்கும் தனது பேரனை எப்படி பழைய நிலைக்கு மாற்றுவது என்று பாட்டி தலையைப் பிய்த்துக்கொண்டிருந்தார்.

பாடசாலை விட்டு வந்தவுடனேயே மற்றைய வகுப்புகள் ஆரம்பித்துவிடும். சனி, ஞாயிறு நாட்களில் பிள்ளைக்கு ஓய்வு இல்லை. இப்படியே ஒரு மாதம் ஓடிவிட்டது. பாடசாலையில் இருந்து பிள்ளையின் செயற்பாடுகள் குறைந்துவிட்டதாக ஆசிரியரிடம் இருந்து தகவல் வந்தது.

அடுத்த சில நாட்களில் பிள்ளைக்கு நல்ல காய்ச்சல். மாமா இது எதிலும் தலையிடுவதில்லை. தனது மகனிடம் பாட்டி எடுத்துச் சொல்ல "அம்மா என்ர வேலை சம்பாதிப்பது. பிள்ளைகள வளக்கிறது தாயிட கடமை. இத நீங்க உங்க மருமகளோட பாத்துக்கொள்ளுங்க" என்று சொல்லிவிட்டு மாமா சென்று விட்டார்.

பிள்ளைக்கு இரண்டு நாளாக காய்ச்சல் குறைந்தபாடில்லை. இப்போது மாமியின் முகத்தில் கவலை தெரிந்தது.

இந்த சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த பாட்டி அன்றிரவு மாமா வீடு வரும்வரை பொறுத்திருந்து மாமா, மாமியைக் கூப்பிட்டு கதைக்க ஆரம்பித்தார்.

"பிள்ள விரலுக்கு ஏத்த வீக்கம் வேணும் எண்டு எங்கட காலத்தில எங்களுக்கு அடிக்கடி சொல்லித்தருவினம். அவன் சின்னப்பிள்ள. அவனாலயும் ஓரளவுக்குத்தான் முடியும். அவன போட்டு இப்பிடி வாட்டி எடுத்தா பிள்ளையால என்னதான் செய்யமுடியும் சொல்லு.

கனடாவுல இருக்கிற எல்லாருக்கும் இருக்கிற ஒரு பழககம் இது. இந்த நாட்டுக்கு வந்தவுடனேயே எல்லாருக்கும் இந்த பழக்கம் வந்து ஒட்டிக்கொள்ளுது. இது இந்த நாட்டின் விதியெண்டுதான் சொல்ல வேண்டும்.

ஊரில இருக்கும்போது எல்லாரும் சமமா பழகுவம். சிலரிட்ட காசு இருக்கும். சிலரிட்ட காசு இருக்காது. அப்படி இருந்தாலும் இந்தப் போட்டி இருக்காது. சாப்பிட காசில்லாட்டியும் பகட்டா வாழ வேணும் எண்ட மனசு இருக்காது.

ஆனா கனடாவுக்கு வரும்போது எல்லாருமே புதுசா பிறக்கிற பிள்ளை போல. நீ முந்தி நான் முந்தி எண்டு போட்டி போடுறதில கெட்டிக்காரர்கள். வீட்டில சமைக்கிறதுக்கு சாமன் இருக்காது. ஆனால் பேச்சு என்னமோ இப்பதான் தன்ர புருசன் பிரதம மந்திரியோடு சாப்பிட்டு வந்தவர் எண்டு இருக்கும்.

இதால என்ன பிரயோசனம் எண்டு எனக்குத் தெரியாது. தம்பி பிள்ளைய வளக்கிறது தாயிட வேலை மட்டுமல்ல. தகப்பனுக்கும் பங்கிருக்கிறது. நான் உங்கள எல்லாம் வளக்கிறபோது உங்க அப்பாவுக்கு உங்களபத்தி எல்லா விசயமும் தெரியும். ஒருத்தர் கண்டிப்பா இருக்கவேணும். ஒருத்தர் அரவணைக்க வேணும் எண்டு உங்கப்பா அடிக்கடி சொல்லுவார். இதெல்லாம் யாரும் எங்களுக்கு சொல்லித்தரேல்ல. நாங்களா இப்படி செய்தா நல்லது எண்டு பிள்ளைகள வளத்தனாங்க. உங்கள பாக்க எனக்கு கவலையா இருக்கு." என்று பாட்டி சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனது பிழையை உணர்ந்த மாமியும். மாமாவும் பாட்டியிடம் மன்னிப்புக்கேட்டார்கள்.

"அம்மா இனி நானும் பிள்ள விசயத்தில கனவமா இருப்பன்" என்ர மாமாவை நிம்மதியோடு பார்த்தார் பாட்டி. ●



# கருத்துக் களம்


## கனடிய மண்ணில் எமது தமிழ் முதியவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு அவசியமா?

புலம்பெயர் மண்ணில் அதுவும் தொழிநுட்பத்தில் முன்நிற்கும் நாடுகளில் வாழும் எமது முதியவர் களுக்கு சாதாரணமாக தமது தேவைகளை நிறை வேற்றிக் கொள்ளும் அளவிற்கு தொழிநுட்ப அறிவு அவசியம். ஒரு கணனியை இயக்கி தமது பொழுதுபோக்கிற்காக செய்திகளை வாசிப்பது அல்லது திரைப்படங்கள் நாடகங்கள் பார்த்தல் போன்றளவிற்காவது அவர்களுக்கு தொழிநுட்ப அவசியம்.




**செந்தில் - மிசிசாகா**

நிச்சயமாக எமது பெரியவர்களுக்கு தொழிநுட்ப அறிவு அவசியம். சாதாரணமாக அவர்களது வங்கிக் கணக்குகளைப் பேணுதல் போன்ற அளவிற்காவது அவசியம். தங்களுக்கு என்ன வருகிறது என்றளவிற்காவது அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் ஏமாற்றப்படுவது குறையும்.




**சாந்தினி - மார்க்கம்**

அந்நிய நாடு. புரியாத மொழி என்பவை ஒரு சாட்டுப்போக்கு மட்டுமே. அவர்களுக்கான சங்கங்கள். அமைப்புகள் இருக்கின்றது. அவற்றை தொடர்பு கொண்டு தங்களது உரிமைகள். சலுகைககள் போன்றவற்றை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு தொழிநுட்ப அறிவு மாத்திரமல்ல பொதுவான சிந்தனையும் வேண்டும். இது அவர்களது உரிமை என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.




**சங்கர் - ஸ்காபரோ**

நிச்சயமாக அவர்களுக்கு தொழிநுட்ப அறிவு அவசியம். இது பல பிரச்சனைகளை தீர்க்கக்கூடியது. சாதாரணமாக ஒரு ஐ-பாட்டை பயன்படுத்தும் முறையாவது அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். இதன் மற்றைய பயன்பாடுகள் பற்றிய அறிவு அவசியம் இல்லை என்றாலும், இணையத்தில் உலாவுதல், அவர்களுக்குப் பிடித்த பாடல்கள் கேட்க போன்ற விடயங்கள் அவர்களை ஒரு குறித்த செயற்பாட்டில் ஈடுபடுத்தி அவர்கள் சோர்ந்து போகாது வைத்திருக்க உதவும்.




**மோகனசுந்தரம் - ஸ்காபரோ**

இன்று இந்த புலம்பெயர் தேசத்தில் எமது முதியவர்களின் நிலை மற்றவர்களின் கைகளை எதிர்பார்ப்பது இருப்பதாகவே அமைந்துள்ளது. ஆனால் இந்த பெரியர்களுக்கு அரசால் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சலுகைகளைப் பெற்றுகொள்ளுதல் போன்றவற்றிற்கு அவர்களிற்கு தொழிநுட்ப அறிவு அவசியம்.



**மோகனா - ரொறன்ரோ**

எனது அம்மாவுக்கு வயது 65. அவர்கள் இப்போது சமைக்கும் போது இணையத்தில் தேடி வித்தியாசமான உணவுகளை சமைத்தல். கைவேலை போன்றவற்றை தேடித்தேடி செய்துகொண்டிருக்கிறார். இது அவர்களது பேரக்குழந்தைகள் மத்தியில் அவருக்கு பெரும் மதிப்பையே உருவாக்கித் தந்திருக்கிறது. மற்றவர்களுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இப்படி தங்களை ஒரு விடயத்தில் ஈடுபடுத்துவதால் 'நான் ஊரில் இப்படி இருந்தேன். எனக்கு இங்கு மரியதை இல்லை' போன்ற வீண்விடயங்களை யோசிப்பதை தவிர்க்க ஒரு நல்ல சந்தர்ப்பம்.



**சிவகுருநாதன் - ரொறன்ரோ**

பொதுவாக வெள்ளை இனத்தவர்களைப் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாக இருக்கும். காரணம் இந்த வயதில் கூட தங்களது அழகு. ஆடை போன்றவற்றில் மிகவும் கவனம் செலுத்துவார்கள். அதேபோல் வாகனம் ஓட்டுதல் போன்றவற்றையும் செய்வார்கள். ஆனால் நமது பெரியவர்களைப் பார்க்கும் மிகவும் பரிதாபமாக இருக்கும். தங்களைப் பற்றிய அக்கறை இன்றி. மற்றவர்களை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். இதை இவர்கள் சிந்திக்க வேண்டும். எப்போதுமே ஒரு காலகட்டத்திற்கு பின் இவர்கள் தங்கள் வாழ்க்கை பற்றி சிந்திக்க வேண்டும். இதனால் இவர்களது மன அழுத்தங்கள், வேதனைகள், துன்பங்கள் போன்றவற்றில் இருந்து விடுதலை கிடைக்கும்.

இது உங்கள் கருத்துக்களுக்கான பக்கம்... உங்களின் ஆரோக்கியமான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக் கூறுங்கள்.

அடுத்த இதழின் தலைப்பு :

**பெற்றோர்களை முதியோர் இல்லத்திற்கு அனுப்புவது பெற்றோரின் சந்தோசத்திற்காகவா அல்லது பிள்ளைகளின் வசதிக்காகவா?**

உங்கள் கருத்துக்களை பின்வரும் முறைகளில் அனுப்பலாம்:

**Fax: 416-273 7606 Email: editorial@thooralonline.com**




**Sathy Sivasubramaniam** Sales Representative

2004/2005 Silver Award

2006/2009 Platinum Club Award

2010/2011 Chairman Club Award

2010/2011 Top 5% Representative in Canada

**HomeLife/Future Realty**

205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8

Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044

E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com

**Nithy Sathyakumar**

AMP - Mortgage Specialist - Lic. # M08008999

- New Credit
- Self Employed
- Business Loan
- New to Canada
- Commercial Mortgage
- Purchase, Switch, Refinance & Equity Transfer

**BonaFide Mortgage Solutions Inc.**

7 Eastvale Drive, Unit 203, Markham, Ontario L3S-4N8

Direct: 416-728-2454 / Fax: 1-888-691-6943 nithy.s@bmsic.com

# காமெடி Collections...

அடிமைக்கும்,
கொத்தடிமைக்கும்
என்ன வித்தியாசம்?
ஒரு பெண்ணைக்
காதலிக்கும் போது
நீங்க அடிமை....
அதுவே
அந்த பெண்ணையே
கல்யாணம்
பண்ணிட்டீங்கன்னா
நீங்க கொத்தடிமை...

மனைவி: இந்த வாரம்
முழுவதும் படம் பார்த்தோம்..
அடுத்த வாரம் முழுவதும்
ஷாப்பிங்(shopping)
போவோங்க.
கணவன்: சரி.
அதுக்கு அடுத்த வாரம்
முழுவதும் கோவிலுக்கு
போவோம்..
மனைவி: எதுக்குங்க..
கணவன்: பிச்சை
எடுக்க தான்..

ஏங்க...
உங்க பொண்டாட்டிய
நாய் கடிச்சிட்டுதாமே...
என்ன first aid
கொடுத்தீங்க....
அந்த நாய்க்கு
சிக்கன் பிரியாணி
வைச்சேன்....

ஏங்க உங்க
கிரேடிட் கார்ட்
தொலைஞ்சு போச்சே...
அத கன்சல் பண்ண
இல்லையா?.
இல்லை.
ஏங்க....
நீ செலவழிக்கிறத விட
குறைவாத்தான்
எடுத்தவன்
செலவழிக்கிறான்.

காதலன்: அன்பே...
நான் சாப்பிடும்
போதெல்லாம்
உன் நினைவுதான்!..
காதலி: அப்படியா?...
எனக்கு கை கழுவும்
போதெல்லாம்
உன் நினைவுதான்......

நான் என்
லவ்வர்ரோட bike ல
போறத என் அப்பா
பாத்துட்டார் ..
அச்சோ ..அப்புறம் ..?
பஸ் காச
திரும்ப கேட்டு
வங்கிட்டாரு...

ஒரு அழகான கவிதை
சொல்லுடா ..
உன்னை கண்டதும்
என்னை மறந்தேன் ..
அப்புறம் ?
உன் தங்கையை
கண்டதும் உன்னையே
மறந்தேன் ..!

பரிமளம்! கத்திரிக்காய்
வாங்கப் போன
என் கணவர், லாரி மோதி
இறந்துவிட்டார்...
ஐயோ, பிறகு..?
பிறகு என்ன?
கையிலிருந்த
முருங்கைக்காயை வைத்து
சாம்பார் வைச்சேன்..

மனைவி: ஏங்க...
கொஞ்சம் வாங்க...
குழந்த அழுவுது...
கணவன்: உன்னை
எவண்டி மேக் - அப்
இல்லாம குழந்தைக்குப்
பக்கத்துல போக
சொன்னது?

மிருகக் காட்சி சாலையில்
புலி ஒன்று, பார்வையாளரில்
ஒருவனைக் கொன்றுவிட்டது.
அதைக் கண்டு பக்கத்து
கூண்டில் இருந்த குரங்கு
புலியைப் பார்த்துக் கேட்டது
குரங்கு : ஏன் அவனைக்
கொன்னே?!
புலி : மூணு மணி நேரமா
என்னைப் பார்த்துச் சொல்றான்....
எவ்ளோ பெரிய பூனைன்னு

ஜோதிடர் : கணவன், மனைவி
நீங்க ரெண்டு பேரும்
கடைசி வரை சேர்ந்து
நல்லா இருப்பீங்க ..
கணவன் : இதுக்கு பரிகாரமே
இல்லியா, ஜோதிடரே?
ஜோதிடர் : தெரிஞ்சா நாம
பண்ணியிருக்கமாட்டம்மா !!!

- ராகவன்

சிரிப்போ... சிரிப்பு...

# பணப் பிரச்சனையா?

## உங்களுடைய சகல கடனுக்கும் மாதாந்தம் ஒரு சிறு தொகையை செலுத்தலாம்




- உங்களுடைய கடனைக் குறைத்தல்
- வட்டியை உடனடியாக நிறுத்துதல்.
- உங்களுடைய கடன் வசதியை மீள பெற்றுத் தருதல்.
- பணம் அறவிடும் அழைப்புகளை நிறுத்துதல்.
- உங்களுக்கு எதிரான நீதிமன்ற ஆணைகளை நிறுத்துதல்.
- உங்களுடைய ஊதியத்தில் இருந்து பணம் வசூலிப்பதை நிறுத்துதல்.

gta credit

**REMEMBER!** Before you see a trustee in BANKRUPTCY You should talk to us FIRST
Trustee represents Your creditors but
We work for you

தமிழில் தனிப்பட்ட கலந்துரையாடல்களுக்கு
**அழையுங்கள்!**

TORONTO - 416-650-5400
DOWNTOWN - 416-754-1800
MISSISSAUGA - 905-275-4200

Visit: **GtaCredit.Com**

Contact us for a FREE & CONFIDENTIAL meeting with one of our Govt. Registered Counsellor

10 Convenient Locations

| | | | | |
|---|---|---|---|---|
| Ajax 905.426.8400 | Brampton 905.796.3100 | Barrie 705.737.3100 | Hamilton 905.664.6700 | London 519.850.8600 |
| Mississauga 905.275.4200 | North York 416.650.1100 | Oshawa 905.723.7100 | Scarborough 416.754.0011 | Downtown 416.489.2000 |



## கிளார்க்கின் சாதனை பயணம்




சிட்னி மைதானத்தில் முச்சதம் அடித்த முதல் வீரர் மைக்கேல் கிளார்க். இங்கு அதிக ஓட்டங்கள்(329) எடுத்த வீரர் என்ற பெருமையும் பெற்றார். இதற்கு முன் 1903ல் இங்கிலாந்தின் டிப் பாஸ்டர் 287, 1992ல் வெஸ்ட் இண்டீசின் லாரா 277 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

இரு அணிகள் மோதிய டெஸ்ட் போட்டிகளில், ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற பெருமையையும் கிளார்க் (329) தட்டிச் சென்றார். அடுத்த இரு இடங்களில் லட்சுமண்(281), பொண்டிங்(257) உள்ளனர்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் வரலாற்றில் ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் கிளார்க், நான்காவது இடம் பெற்றார். முதல் மூன்று இடங்களில் ஹைடன்(380), மார்க் டெய்லர்(334), பிராட் மேன்(334) உள்ளனர்.

அவுஸ்திரேலிய அணித்தலைவராக இருந்து சொந்த மண்ணில் அதிக ஓட்டங்கள் எடுத்த பிராட்மேனின்(270) சாதனையை கிளார்க் தகர்த்தார்.

# Sports News

## நேர்மையான கிரிக்கட் வீரர் தோனி

சர்வதேச கிரிக்கட் கவுன்சிலின் உலகின் நேர்மையான கிரிக்கட் வீரர் விருதை இந்திய அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி வென்றுள்ளார்.

கடந்த இங்கிலாந்து தொடரின் போது ஆட்டமிழந்தாக கருதப்பட்ட இங்கிலாந்து வீரர் இயான் பெல்லை தோனி மீண்டும் ஆட அழைத்ததால் இவ்விருது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருது வழங்கும் விழா ஜனவரி 13ம் திகதி ஆஸ்திரியாவில் நடைபெற்றது. அப்போது தோனி அவுஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரில் பங்கேற்றிருந்தமையால் அவருக்கு இவ்விருது சிட்னியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் வழங்கப்பட்டது.

## ஐ.பி.எல் போன்று பி.பி.எல் போட்டிகள்

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல் போட்டிகள் போன்று வங்கதேசத்தில் பி.பி.எல் 20-20 தொடர் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிப்ரவரி மாதம் 9ம் முதல் 29ம் திகதி வரை நடக்கிறது. இதில் 6 அணிகள் கலந்து கொள்கின்றன. மொத்தம் 33 ஆட்டங்கள் நடைபெறுகிறது.

கில்கிறிஸ்ட், ஹைடன், பொல்லார்டு, கம்ரன் அக்மல், ஆண்டர்சன் உட்பட 25 வெளிநாட்டு வீரர்கள் பல்வேறு அணிகளில் ஆடுகின்றனர். ஒரு அணியில் அதிகபட்சம் 5 வெளிநாட்டு வீரர்கள் ஆடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2011ம் ஆண்டின் சிறந்த வீரர் டிராவிட்


2011ம் ஆண்டின் சிறந்த வீரராக இந்திய கிரிக்கட் அணியின் டிராவிட் ரசிகர்களால் தெரிவு செய்யப்பட்டார். அணித்தலைவர் தோனிக்கு மூன்றாவது இடம் கிடைத்தது.

இந்திய விளையாட்டு நட்சத்திரங்களில் சிறந்த வீரர்களை ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவு செய்தது. இதற்காக 2011ல் வீரர்கள் வெளிப்படுத்திய திறமை அடிப்படையில் சச்சின், தோனி, டிராவிட், யுவராஜ், ரோகன் போபண்ணா (டென்னிஸ்), ரஞ்சன் சோதி(துப்பாக்கி சுடுதல்) உட்பட பலர் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர்.

இரண்டு வாரங்களாக நடந்த வாக்கெடுப்பில் தொடக்கத்தில் இருந்தே டிராவிட் தான் முன்னிலையில் இருந்து வியப்பில் ஆழ்த்தியுள்ளார். இவர் 2011ம் ஆண்டில் பங்கேற்ற 12 டெஸ்ட், 5 ஒருநாள், ஒரு டுவென்டி-20 போட்டிகளில் தலா 5 சதம், அரைசதம் உட்பட மொத்தம் 1300 ஓட்டங்கள் எடுத்து இருந்தார்.

கடைசியில் 28 ஆண்டுகளுக்குப் பின் உலக கிண்ணத்தை வென்ற அணித்தலைவர் தோனி, தொடர் நாயகன் யுவராஜ், சச்சின் ஆகியோரை பின் தள்ளி 48 சதவீத வாக்குகளுடன் டிராவிட், கடந்த ஆண்டின் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.




கடலும் வானும் மட்டுமல்ல நீலம்...
நாமும் நீலமே...
2012ம் ஆண்டின் புதிய வரவுகள் இப்பொழுது எமது காட்சியறையில்
Neelam Silk
The Ultimate Destination for Pure Silks
நீலம் சில்க்
1461 - 1463 Gerrard Street East Toronto, Ontario M4L 1Z9
416-461-5555 neelam_silk@hotmail.com | www.neelamsilk.ca